## கடவுள் வணக்கம்

என்னுடை யுயிரே ! என்னுளத் தறிவே ! என்னுடை யன்பெனு நெறியாய் !
கன்னன்முக் கனிதேன் கண்டமிர் தென்னக் கலந்தெனை மேவிடக் கருணை
மன்னிய வுறவே ! உன்னைநான் பிரியா வண்ணமென் மனமெனுங் கருவி
தன்னது வழியற் றென்னுழை கிடப்பத் தண்ணருள் வரமது வேண்டும்.

321

---

THE ... 5-AUG 1931

## உள்ளடக்கம்


தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாடு காஞ்சிபுரம் 56

பத்திரிகாசிரியர் முன்னுரை 57

புது உலகமும் பழைய உலகமும்:—சம்மவர் கைத் தொழில் வியாபாரங்களின் தற்கால நிலையும் அவற்றை வளர்க்கும் முறைகளும் 59

மாதர் பகுதி:—பெண்ணா ? பிணமா ? 63

மணமகனாகிய புருஷனுக்கும் மணமகளாகிய பெண்ணுக்கும் தங்களுக்கென்றமைத்த விடுதியில் நடைபெற்ற சம்பாஷணைகள் 65

அறிவியல் பகுதி:—சிநீமாவின் கதை 67

சுகாதாரப் பகுதி:—க்ஷயரோகம் 74

வர்த்தமானப் பகுதி:—காந்தி—இர்வின் ஒப்பந்தம் 77

நிரூபங்கள் :—நயினார் கோவில் செங்குந்தர் பொதுமடம் 83

செங்குந்தர் கிளர்ச்சி 85

கோவை ஜில்லா வாலிபர் சங்க இரண்டாவது ஆண்டு நிறைவு விழா 86


---

### இந்தியாவின் ஜனத்தொகை
### 35·15 கோடி ஜனங்கள்
#### நூற்றுக்கு 10·2 வீதம் உயர்வு

புது டெல்லி, மார்ச்சு, 14—

சர்க்கார் அறிக்கை யொன்று கூறுவதாவது:—1931-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 26ந் தேதி யெடுத்த கணக்குப்படி இந்தியாவின் ஜனத்தொகை (பிரிட்டிஷ் இந்தியாவும் சமஸ்தானங்களும் சேர்ந்து) 35·15 கோடிக்குச் சற்றுக் குறைவாக இருக்கிறது. 1921ம் வருஷம் 31·9 கோடியாக இருந்தது. எல்லா மாகாணங்களிலும் ஜனத்தொகை உயர்ந்திருக்கிறது. பலுசிஸ்தானத்தில் தான் குறைந்த விதமாக 1.2% உயர்வு. டெல்லியில் தான் உயர்வு அதிகம். அதாவது 100க்கு 30·4 விகிதமாகிறது. இந்திய சமஸ்தானங்களில் 100-க்கு 9½ வீதம் உயர்ந்திருக்கிறது. எல்லா சமஸ்தானங்களிலும், ஏஜன்சி பிரதேசங்களிலும் அநேகமாக ஜனத் தொகை உயர்ந்திருக்கிறது. ஆனால், வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் உள்ள மலைச்சாதியினரின் ஜனத் தொகையும், அங்குள்ள ஏஜன்சி பிரதேசங்களின் ஜனத்தொகையும் மட்டும் அவ்வளவாக அதிகரிக்கவில்லை. பிகானீரில்தான் 41·1 அதிகரித்திருக்கிறது. திருவாங்கூரில் 27·1 அதிகரித்திருக்கிறது. 1921ம் வருஷத்தைவிட இந்தியா முழுவதிலும் 10·2% இப்பொழுது ஜனத்தொகை அதிகமாகியுள்ளது.

## தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாடு காஞ்சிபுரம்

### 3-வது வரவேற்புக் கழகக் கூட்டம்

நிகழும் பிரமோதூதஃ மாசிமீ 24உ (7-3-31) மாலை 4 மணிக்கு மகா நாட்டின் வரவேற்புக் கழகக் கூட்டத்தின் மூன்றாவது கூட்டமானது காஞ்சிபுரம் பிள்ளையார் பாளயம் மண்டபத் தெரு, செங்குந்தர் இரவு பாடசாலைக் கட்டிடத்தில் திரு. ம. த. சாமிநாத முதலியாரவர்கள் தலைமையின் கீழ்க் கூடியது. அச்சமயம் இந்த ஜில்லாவின் பல கிராமங்களிலிருந்தும் பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன:—

#### மகாநாடு கூடும் தேதி

செங்குந்தர் இரண்டாவது மகாநாட்டைப் பிரசோற்பத்திஃ வைகாசிமீ 3,4 (16,17-5-1931) தேதி சனி ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்த வேண்டுமென முடிவு செய்யப்பெற்றது.

#### வசூல் ஆகவேண்டிய் தேதி

சென்னை செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு கிராமத்தினரும் தங்கள் கிராமத்தின் வசூலை மிக விரைவில் அனுப்பி வைக்க வேண்டுமென்றும், பங்குனிமீ 30-ந் தேதிக்குமேல் எந்த ஊரிலும் பாக்கி இருக்கக் கூடாதெனவும் எல்லாக் கிராமங்களின் பிரமுகர்களும் பெரிய தனக்காரர்களும் வேண்டிக் கொள்ளப் பெறுகின்றனர்.

#### தலைவர்கள் தேர்தல்

மகாநாட்டு திறப்பு விழாவினை நடத்தச் சென்னை அரசாங்க அமைச்சர்களில் ஒருவரையும், திரு. தி. நா. சபாபதி முதலியாரவர்கள் உருவப் படத் திறப்புவிழா நடத்த மந்திரிகளில் ஒருவரையும் அழைக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப் பெற்றது.

கொடியேற்று விழாவினை மஞ்சட் கொல்லை திரு அரு. சி. தியாகராய முதலியாரவர்களைக் கொண்டு நடத்த வேண்டுமென முடிவு செய்யப் பெற்றது.

சமூக மகா நாட்டுக்கு அம்பாசமுத்திரம் வக்கீல் திரு. K. N. சுப்பிரமணிய முதலியார் B. A. அவர்களும், வாலிபர் மகா நாட்டுக்குச் சிவகங்கை ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் திரு. S. மீனாட்சிசுந்தர முதலியார் B.A.,L.T. அவர்களும் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

வாலிபர் மகா நாட்டினைப் புதுவை அரசாங்க அமைச்சர் திரு. ஆ. வே. முத்தைய முதலியார் B. A., B. L. அவர்கள் திறந்து வைக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப் பெற்றது.

#### சப் கமிட்டி

மகா நாட்டின் வேலைகளை இனி கவனித்துவர வரவேற்புக் கழகத் தலைவர் திரு. ம. த. சாமிநாத முதலியாரவர்களைத் தலைவராகவும், திருவாளர்கள் R. செல்லப்ப முதலியார், S. இலக்குமண முதலியார், அ. செல்வபெருமா முதலியார், பி. செ. மாணிக்கவாசக முதலியார், ஐயம்பேட்டை வேலாயுத முதலியார், வடிவேல் முதலியார் இவர்களை அங்கத்தினர்களாகவும் கொண்ட ஒரு சப்கமிட்டி நியமிக்கப்பெற்றது.

(Sd.) M. சாமிநாத முதலியார்

பின்புத் தலைவர் திரு. ம. த. சாமிநாத முதலியாரவர்கள் ஸ்ரீகச்சபேசுவரர் கோவில் உற்சவத்தை நடத்துவிக்கச் சென்று விட்டமையின், சேர்க்காடு திரு. M. குருசாமி முதலியாரவர்கள் தலைமையின் கீழ்க் கூட்டம் தொடர்ந்து நடந்தது. திருவாளர்கள் பி. செ. மாணிக்கவாசக முதலியார், மா. அ. கனகசபை முதலியார், ம. சண்முகசுந்தர முதலியார் M. A., L. T. ஆகிய மூவரும் மகாநாடு காஞ்சிபுரத்தில் கூட்ட வேண்டுமெனத் தீர்மானித்த தேதி முதல் இதுவரை நடைபெற்ற பிரயத்தனங்களையும், வேலைகளின் நடைமுறைகளையும், இனி நடத்த வேண்டிய முயற்சிகளையும், தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர்களின் சிறப்பினையும் எடுத்துக்கூறி, ஒவ்வொரு கிராமத்தினரும் தங்கள் கிராம வசூலை விரைவில் தருவதோடு, ஒத்துழைக்கவும் வேண்டுமென வேண்டிக் கொண்ட பின், தலைவர் அவர்கள் அதனை ஆதரித்துத் தமது அனுபவங்களை எடுத்துக் கூறியதோடு, செங்குந்த மித்திரனை ஒவ்வொருவரும் ஆதரிக்க வேண்டுமெனவும், சந்தாவினை உடனே அனுப்பிவிட வேண்டுமெனவும் முடிவுரை கூறப் பின் இரவு 9-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

திரு. வீ. திருஞான சம்பந்த முதலியாரவர்களால் வந்தனோபசாரம் கூறப்பெற்றது.

(Sd.) M. குருசாமி முதலியார்

---

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு
ஆசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

தொகுதி—ரு] பிரமோதூத வருஷம், பங்குனி மாதம் [பகுதி—ந

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### மகாநாடு

ஒன்றரை வருஷ காலமாகத் தள்ளிக் கொண்டே வந்த நம்மவர் இரண்டாவது மகாநாடு அடுத்த மேமீ 16, 17 தேதிகளில் காஞ்சிபுரத்தில் கூடுவது நிச்சயமாய் விட்டது. தேதியை நிர்ணயித்த வரவேற்புச் சபைக் கூட்டத்திலேயே தலைவர்களையும் தேர்ந்தெடுத்துள்ளார்கள். இம்மகாநாட்டுக்காக வரக்களித்துள்ள தறிவரி நன்கொடை முதலியவற்றினைப் பங்குனி 30 தேதிக்குள் செலுத்தி விடும்படியும் செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள சகல கிராமத்தினரையும் கேட்டுக்கொண்டுள்ளனர். தேதியைக் குறிப்பிட்ட பிறகும் தலைவர்களைத் தேர்ந்தெடுத்த பிறகும் மகாநாடு மீண்டும் தள்ளி வைக்கப்படுமென்று கனவிலும் நினைப்பதற்கில்லை. ஆகவே, மகா நாட்டுச் செலவுக்காக அன்பர்கள் வாக்களித்துள்ள தொகைகளை இனி யாதொரு தாமதமுமின்றி அனுப்பி வைக்க வேண்டிக் கொள்ளுகிறோம்.

தறிவரி விஷயமாக இரண்டொரு வார்த்தைகளைக் கூற விரும்புகிறோம். கிராமங்களில் மாமூலாக வசூலிக்கப்பெறும் தறிவரிக்கும் மகா நாட்டை நடத்துவதற்காக இப்பொழுது வசூலிக்கப் பெறும் தறிவரிக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் உண்டு. அதாவது, மாமூல் வரிகள் மாதம் மாதமோ வருஷம் வருஷமோ அவ்வப்போது மாமூலாக நடைபெற வேண்டிய உற்சவாதிகளுக்கும் கோயில் திருப்பணிகளுக்கும் வசூலிக்கப் பெறுவதாகும். ஆனால், இம்மகா நாட்டுக்காக வசூலிக்கப்பெறும் வரியோ பத்து வருஷத்துக்கொருதரமோ, பதினைந்து வருஷத்துக்கு ஒரு தரமோ ஒவ்வொரு ஜில்லாவிலும் வசூலிப்பதாகும். ஏனென்றால், வருஷா வருஷம் நம்மவர் மகாநாடொன்று கூடுவதாயிருந்தாலும், ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒவ்வொரு வருஷம் முறை வரவேண்டியது அவசியமானபடியால், தமிழ் ஜில்லாக்கள் அனைத்துக்கும் ஒரு முறை வந்து மற்றொரு முறை வருவதற்குக் குறைந்தது பத்து வருஷமாகும். வருஷத்துக்கொருமுறை ஒரு பெரிய மகாநாட்டினைக் கூட்டுவது இடைவிடாது நடந்து கொண்டு வருவது வெகு சிரமமாகையால், இம்முறையும் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் அநேகமாகப் பதினைந்து வருஷங்களுக்கு ஒரு தரமே வரலாம். ஆகவே, பத்து பதினைந்து வருஷங்களுக்கு ஒரு முறை தறிக்கு அரை ரூபாய் நம்மவர்கள் மகா நாட்டுக்காகக் கொடுப்பதை எவரும் ஒரு பாரமாகக் கருதாமல், இனியேனும் யாதொரு தாமதமுமின்றிச் செலுத்திவிடுவார்களெனவும் நம்புகிறோம்.

நன்கொடையைப்பற்றியும் ஒரு வார்த்தை கூற விரும்புகின்றோம். இத்தகைய நன்கொடைகளையும், தறி வரிகளைப் போன்று, மகாநாட்டுக்கென வழங்க வேண்டிய சந்தர்ப்பம் பத்துப் பதினைந்து வருஷத்துக்கு ஒரு முறையே வருமாதலால், அவைகளை வழங்குவதிலும் அன்பர்கள் தாராள மனதுடன் முன் வருவார்களென்றே நம்புகிறோம். ஊர்ப் பொதுப் பணங்களிலும் ஒரு பகுதியை மகாநாட்டுக்காக வழங்குவது அவசிய மென்பதையும் இங்கு வற்புறுத்துகிறோம்.

### தீர்மானங்கள்

ஈரோட்டில் நடந்த நம்மவர் முதலாவது மகா நாட்டில் தீர்மானங்களைப்பற்றி அதிக

மாகப் பேசச் சந்தர்ப்பங்கிடைக்காதது அநேகருக்குப் பெருங் குறையாக விருந்தது. அத்தகைய குறை காஞ்சியில் நடக்க விருக்கும் இரண்டாவது மகா நாட்டில் நேராத வாறு தீர்மானங்களைப் பற்றிப் பேசுவதற்கென 17உ ஞாயிற்றுக்கிழமை முழுதும் ஒதுக்கி வைக்க உத்தேசித்திருக்கிறோம். ஆகவே, தீர்மானங்களைப் பிரேரேபித்து அவற்றைப் பற்றிப் பேசுவதற்கு மட்டும் அச்சமயம் ஏழெட்டு மணிநேர அவகாசம் தாராளமாக இருக்கும். இச்சவுகரியத்தினை உத்தேசித்துப் பல இடங்களிலும் உள்ள நம்மவர்கள் நேராகவோ தத்தம் கிராமத்திலுள்ள சங்கங்களின் மூலமாகவோ, மகா நாட்டின் யோசனைக்கு விடுவதற்கான தீர்மானங்களை எழுதி எமக்குச் சித்திரை மாதம் முதல் தேதிக்கு முன் வந்து சேரும் வண்ணம் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். தீர்மானங்களை யெழுதி யனுப்புவோர் அவற்றைத் தெளிவாகவும் திருத்தமான வாக்கியங்களிலும் எழுதி அனுப்புதல் வேண்டும்.

### கண்காட்சி

மகாநாடும் கூடும் சமயம் பல்வேறு பாகங்களில் வாழும் மக்கள் ஒருங்கு திரண்டு சேர்வார்களாகையால், நம்மவர்களுள் பலரும் கண்டு மெச்சக்கூடிய வேலைப்பாடுகளையும், நூதன இயந்திரங்களையும், அரிய தொழில் வியாபார முறைகளையும் காட்ட உத்தேசித்துள்ளோர் மகா நாட்டுக் காரியதரிசிகளுக்கு எழுதி இது சம்பந்தமான விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

### கிளைச்சங்கங்கள்

கிராமங்கள் தோறும் பிரசாரஞ் செய்து தக்க பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து மகா நாட்டுக்கு அனுப்புவதை ஒவ்வொரு செங்குந்த கிளைச்சங்கமும் தனக்குரிய கடமையாக கொள்ளுதல் வேண்டும். தலைச்சங்கத்து அமைச்சர் கிளைச்சங்கங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையினை அடுத்த பந்தியில் பிரசுரித்துள்ளோம். அதில் கேட்டுக்கொண்டுள்ளபடி தலைச் சங்கத்தின் கிளையாகச் சேராத சங்கங்கள் அதற்குக் கிளையாகச் சேர்ந்தும், சேர்ந்துள்ளவைகள் கட்டண பாக்கிகளை அனுப்பியும் இக்குல முன்னேற்றத் தொண்டில் ஈடுபடும்படி வேண்டிக் கொள்கிறோம். ம. ச.

குறிப்பு: சென்ற போட்டிப் பரீக்ஷையில் நம்மவர் கைத்தொழில் சம்பந்தமாக எழுதிய வியாசங்களுள் பரிசு பெற்ற வியாசத்தினைச் சென்ற மாத மித்திரனில் வெளியிட்டோம். அதை எழுதியவர் R. S. சாமியப்பன், 5-வது பாரா மாணவர், ஈரோட்டு.

## செங்குந்தர் சங்கங்களுக்குத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் அறிக்கை

அன்புடையீர்,

8—2—31-ல் திருவாளர் ஆ. வே. முத்தையய முதலியார் பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிய நமது தலைச்சங்கத்தின் நிருவாக சபைக் கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானம் நிறைவேறியுள்ளது:—

"இரண்டாவது மகாநாட்டின் போது தலைச் சங்கத்தின் பொதுக் கூட்டமும் நடைபெற வேண்டியதிருப்பதால், அதன் அங்கத்தினர் ஜாபிதாவைப் புதுப்பிப்பதற்கும், அதற்கு முன் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைப் பத்திரத்தினைத் தயாரிப்பதற்கும் அனுகூலமளிக்க,

i. ஒவ்வொரு கிளைச் சங்கத்திலிருந்தும் பாக்கிக் கட்டணங்களை வசூலிப்பதோடு, கீழ்க் குறிப்பிட்டுள்ள விவரங்களை வரவழைக்க அமைச்சர் வேண்டிக் கொள்ளப் பெறுகின்றனர்;

ii. கிளைச் சங்கம் அங்கீகாரமான தேதி முதல் 28—2—31 வரை அதன் நடவடிக்கைகளின் சுருக்கமான வரலாறு;

iii. கிளைச் சங்கத்தின் தற்கால உத்தியோகஸ்தர்களின் பெயர்களும், தலைச் சங்கத்தின் பொதுக் கூட்டத்துக்குத் தலைச்சங்க சட்டப்படி தேர்ந்தெடுத்துள்ள பிரதிநிதிகளின் பெயர்களும்."

மகாநாட்டினை வைகாசிமீ 3, 4 தேதிகளில் கூட்டுவதற்கு ஏற்பாடு நடந்துகொண்டிருப்பதால், தங்கள் சங்கத்தினை நமது தலைச் சங்கத்தின் கிளையாக இணைத்துக் கொள்வதற்குரிய கட்டணத்தைச் செலுத்துவதோடு, சங்க நடவடிக்கைகளின் வரலாற்றுச் சுருக்கத்தினையும் பிரதிநிதிகளின் பெயர்களையும் ஏப்ரல் மாதம் ஐந்தாம் தேதிக்குள் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவைக்க வேண்டிக் கொள்ளுகிறோம். இவ்விஷயமாகத் தாமதம் ஏற்படின் தலைச்சங்கத்தின் அறிக்கைப் பத்திரம் தயாரித்தலும், பொதுக் கூட்டத்தின் அங்கத்தினர் ஜாபிதா தயாரித்தலும் தடைபடுமாதலால், இக் கடிதம் கண்டதுமே கட்டணத்தையும் மேற்குறிப்பிட்டுள்ள விவரங்களையும் அனுப்பித் தருவீர்களென எதிர்பார்க்கிறோம். கிளைச்சங்க மனுபாரம் வேண்டுவோர் எமக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்

அமைச்சர்.






## நம்மவர் கைத்தொழில் வியாபாரங் களின் தற்கால நிலையும் அவற்றை வளர்க்கும் முறைகளும்

[திருவாளர் அ. சி. சண்முகம் அவர்கள்]

### இவற்றின் பெருமையும் அவசியமும்

தேச முன்னேற்றத்திற்குக் கைத்தொழிலும், வியாபாரமும் இன்றியமையாதவை. இதற்கு ஜப்பான், அமெரிக்கா முதலிய தேசங்களே போதிய சான்றாகும். இவ்வாறே, கைத்தொழிலும் வியாபாரமும் ஒரு சமூக வளர்ச்சிக்கும் ஏதுவென்பது கண் கூடு. ஆகவே, மேன்பாட்டைக் கருதும் ஒவ்வொரு சமூகமும், இவற்றைக் கைக்கொள்ள வேண்டிய தவசியம்.

தொன்று தொட்டே நம்மிந்திய மக்கள் பல்வேறு கைத் தொழில்களையும், வியாபாரங்களையும் ஏற்று, அதன் காரணமாகப் பல வகுப்புகளாகவும் வகுக்கப் பட்டிருக்கின்றனர். இதனாற்றான் ஒவ்வொரு குலத்தவரும் தாங்கள் செய்யுந் தொழிலைத் தங்குலத் தொழிலெனப் போற்றி வந்தனர். எக்குலத்தவரும், எத்தொழிலையும் வியாபாரத்தையும் செய்து, அதனால் ஒரு தொழிலோ அல்லது வியாபாரமோ இந்த வகுப்பைத் தான் சேர்ந்ததென்று கருதப்படாத இக்காலத்திலே, "நம்மவர் கைத்தொழில் வியாபாரங்கள்" என்ற விடத்துப் பொதுவாக நம்மவர் செய்துவரும் எல்லாவிதத் தொழில்களையும், வியாபாரங்களையும் குறிக்கின்றதெனவும், சிலர் கொள்ள இடமுண்டு. ஏனெனில் சமூக முன்னேற்றத்திற்கு அடிப்படையானது கைத் தொழிலும், வியாபாரமுந்தான்; அது எத்தொழிலேனும் வியாபாரமேனும், எத்துறையிலாயினும் எம்முறையிலாயினும் கொள்ளப் படலாமென்பது அவர்கள் கருத்தாகும்.

இவ்வாறு நம் சமூகத்தின் கண், ஒவ்வொருவரும் தனித்தனியே வெவ்வேறு தொழிலையும் வியாபாரத்தையுஞ் செய்து முன்னேறவோ மென்னும் நினைவு, வெறுங்கனவோ டொக்கும். ஏனெனில், அவர்கள் தாம் ஏற்ற, ஒரு புது தொழில் அல்லது வியாபாரத்தின் அனுபவக் குறைவால் அதைச் செவ்வனே செய்யத் திறனற்று, அதனால் ஏற்பட்ட நஷ்டத்தின் கஷ்டத்தால் முயற்சி குன்றி மூடைந்து, லாபமடைய வேறொன்றை மேற்கொள்ளுகின்றனர். அதிலும், அவ்வாறே தோல்வியுற்று, ஒன்று விட்டொன்று பற்றிக் கொண்டேயிருக்கின்றனர். இவ்வாறே அவர்கள் ஒன்றிலாயினும் சீர்திருத்த மடையப் போவதில்லை.

நம் குலத்தாரனைவரும் விடாமுயற்சியுடன் ஒரே தொழிலையும் வியாபாரத்தையும் பின்பற்றி, அதில் பழகப் பழகத்தான் நாம் அதில் திருத்தமடைந்து அனுபவ முதிர்ந்தவர்களாவோம். அப்பொழுதுதான் அவற்றை, ஏனையோர்கள் வியக்கத் தக்க மகா வுன்னத நிலைமைக்குக் கொண்டுவர இயலும். தொழிலும் வியாபாரமும் பெருகும், சமூகமும் பெருகும், இப்பெருக்கிற்குக் காரணம் வருவாய்; இதை வளர்ப்பது எத்தொழிலோ, எவ்வியாபாரமோ, அதுதான் முன்னேற்றத்திற்கு வழிகாட்டும். அது எத்தொழிலெனப் பொதுவாக ஆராயின் கற்றோராலும், மற்றோராலும், முற்காலத்தும் இக்காலத்தும், மற்றும் எக்காலத்தும் போற்றப்படும் நெசவுத் தொழிலே யாகும்.

ஏனெனின், 'செய்யுந் தொழிலைச் சீர்தூக்கிப் பார்க்கின் நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை" என்ற பொய்யா மொழியின் பொன்னுரைக் கிசைய, இதுவே யாவற்றினும் சிறந்ததா மென்க. இது அளவு கடந்தது. இதன் முற்காலத்திய பெருமை இதையே ஏற்று இல்லறம் நடாத்திய நம் நாயனொருவராலேயே நன்கு புலனாகும். இதன் இக்காலத்திய பெருமை, "பறக்கும் பஞ்சினால் சிறக்கும் நம் நாடு" என்று இப்பஞ்சுத் தொழிலையே பெரிதும் வற்புறுத்தும் நம் மகாத்மா ஒருவராலும் சால விளங்கும். இம்மட்டோ! முற்காலத்தில் நம் நாட்டையும், இக்காலத்தில் வெளி நாட்டையும் சிறப்புறச் செய்தும், நம்மிந்தியரின் சிறிய ஊக்கத்தினாலேயே நம் மக்கட்கு ஏக்கத்தை யோட்டி, அயல் நாட்டு மில்கட்கு தூக்கத்தை பூட்டியதும் இந்நெசவுத் தொழிலே யாதலின், இதன் பெருமை எக்காலத்தும் ஜொலிக்கும்.

'தங்குல வித்தை தரும் ஊதியர் தலையாம் என்ற நீதி சாஸ்திரம், குலத்தொழிலே ஊதிய

மளிக்கும்; அதுவே உத்தமமென இத்தொழிலையே நமக்கு நிலைக்க வைத்தது; தெய்வ சங்கல்பமே யாகும். ஏனெனில், நம் சமூகத்திற்குக் குல வித்தையாக வந்து வாய்த்ததும் இந்நெசவுத் தொழிலே. இவ்வித சீருஞ் சிறப்பும் வாய்ந்த இத்தொழிலே, நம்மவர் எவ்விதத்திலும் அவசியம் கொள்ளவேண்டிய தொழிலாகும்.

இனி எவ்வியாபாரம் நமக்குகந்தது. கைத்தொழில் உள்ளவிடத்து வியாபாரமுண்டு. இவை ஒன்றைவிட்டொன்று பெருகா. அவ்வியாபாரம் கைத் தொழிலைச் சார்ந்ததாகத்தான் இருக்கும். ஆதலின் நாம் உண்டாக்கிய துணிகளை விற்பனை செய்யவேண்டிய தவசியமாகையால், நம் கைத்தொழிலே இந்நெசவுக் குரியது. அறுவை வாணியமென்னும் ஜவுளி வியாபாரமே பயனளிக்கும் கைத்தொழில்கள் யாவற்றினும் நெசவுத் தொழில் எவ்வாறு பண்டைக்கால முதல் யாவராலும் சிறந்ததெனக் கொண்டாடப் படுகின்றதோ அவ்வாறே, வியாபாரங்கள் யாவற்றினும் தலை சிறந்தது. இவ்வறுவை வணிகமே முற்கால வழக்கிற் கிசைய வாணிபமென்பது இந்த ஜவுளி வியாபாரத்தைத் தான் குறிக்கின்றது. ஆகையால் ஜவுளி வியாபாரமே நம்மவர்க்குகந்ததென வற்புறுத்தக் கிடக்கின்றது.

இப்பொழுது, “நம்மவர் கைத் தொழில் வியாபாரங்கள்” என்பது. பஞ்சை நூற்று ஆடையாக்கும் நெசவுத் தொழிலையும், ஜவுளி வியாபாரத்தையுமே எவ்வாற்றானும் குறிக்கின்றதென்பது வெள்ளிடை மலைபோல் தெள்ளென விளங்கும்.

## இவற்றின் தற்கால நிலையுங் காரணமும்

இனி நம்மவர்களின் கைத் தொழில் வியாபாரங்களின் நிலையைச் சிறிது கவனிப்போம். இவற்றின் முற்கால நிலையை யறியாது தற்கால நிலையை அறியப் புகுவது தகுதி யன்று. பண்டைக் காலத்தில் இத்தொழிலும் வியாபாரமுமே அத்தியாவசியமாகக் கொள்ளப்பட்டு, மிகுந்த கௌரவத்துடன் நிலை பெற்றிருந்தன. நம்மிந்தியரே இத்தொழிலில் மிகவும் வல்லவர்களென்றும், இவர்களே சிங்களம் முதலிய நாட்டவர்க்கு இதைக் கற்பித்தனரென்றும், யாவரும் ஒப்புக்கொள்வர். பட்டாலும், எலி மயிராலும், பருத்தியாலும், யாவரும் வியக்கத் தக்க விதமாக ஆடைகள் நெய்யப்பட்டனவென்று, பண்டை நூற்கள் பகர்கின்றன. அன்றியும் இங்கு உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளின் அழகு பார்ப்போர் மனதைப் பரவசப்படுத்தி, கண்டார் கண்ணைக் கவர்ந்ததாதலின், அவைகள் வெளி நாட்டார்களால் பெரிதும் விரும்பிக் கொள்ளப்பட்டன. இதை, ‘டெக்கா மஸ்லின்’ ஒன்றே விளக்கும். நம் நாடு இவ்வுயர் நெசவுத் தொழிலையே உபதேச முறையில் பெற்றுக் குலத் தொழிலெனக் கொண்டொழுகி ஒவ்வொருவரும் இளமை முதல் அப்பியசித்து வந்த நம் சமூகம் அடைந்திருந்த நிலை எந்நிலையோ?

இவ்வாறு, நெசவே முக்கிய தொழிலாயிருந்தமையால், பெரும்பாலும் ஜவுளித்தினுசுகளே வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அதனாலேயே தமிழகத்தின் கண் நெடு நாட்களாகச் சிறந்து விளங்கியது. அறுவை வாணிகமென்பது எவ்வாற்றானும் ஒவ்வும். தமிழர்கள் அக்காலத்திற்றானே வெளி நாடுகளுடன் பிரபல வியாபாரம் செய்து, பொருளீட்டினார்களென்பது. “திரைகடலோடியும் திரவியந்தேடு” என்னும் ஔவை வாக்கால் செவ்வையாகும். இதனால் இந்தியர் கலஞ்செய் தொழிலிலும், கடல் யாத்திரையிலும் வல்லவரென்பது தெரியவருகிறது. அக்காலத்தும், கலங்கரை விளக்கங்களோடு கூடிய துறை முகங்கள் பல இருந்தன. பொருள்களுக்குத் தீர்வை விதிப்பதுடன், சமுத்திர நஷ்ட ஈடும் தர்மமாகக் கொடுக்கப்பட்டது. அர்த்த சாஸ்திரமும் அனுபவ முறையில் கொள்ளப் பட்டது. வியாபாரிகளும், அரசர் முதலியோரால் மதிப்பெய்திப் பல பட்டங்களும் பெற்றனர். வெளித் தேசங்களிலிருந்து யாவரும் நம் நாட்டை நாடி வந்தது வியாபாரத்தின் பொருட்டே யென்பது. சரித்திர வாயிலாகத் தெரிய வருவதால் முன் நம் நாடே பிறவற்றிற்கும் வியாபாரத்திற்கும் வழி காட்டியதாகும். மேற் கூறிய துறை முகப் பட்டினங்களில் நம்மவர் பலர் குடியேறி யிருப்பதை நோக்குங்கால், வியாபார சௌகரியத்தின் பொருட்டு அங்கு தங்கி, வெளி நாடுகளுக்கு ஆடைகளை நெய்து கொடுத்துதவிய பிரபல வியாபாரிகளாயுமிருந்தார்களென்பது வெளிப்படை.

இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த, நம் தொழிலும் வியாபாரமும் தற்காலம் அடைந்த நிலை யென்னே! சகலமும் தலை கீழாக வன்றோ மாறி விட்டன. இதனால் நம் சமூகம் தாழ்ந்தது; நம் தேசமும் துயரக் கடலில் ஆழ்ந்தது; நம்மை எதிர் பார்த்த நாடுகளை நாம் ஒரு இழை நூலுக்கும் எதிர் பார்க்க நேர்ந்தது. சிறந்த நம் வாழ்வு பறந்ததின் காரணமாக நம் நாடு வறுமை வாய்ப்பட்டு, சிறுமையும் அடைந்தது. நம் சமூகத்திற்றானே இத்தொழிலைச் செவ்வனே கற்றவர்களைக் காண்பதரிவதெனின், நம்நாட்டைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமோ? சில கிராமங்களில் தவிர ஏனைய விடங்களில் இத்தொழிலைக் காண்பதரிது. மில்கள் வெளி நாடுகளிலிருந்தே, தறிகளுடன் போட்டி போடுவதல்லாமல், அவைகளின் பந்துக்களும் நம் நாட்டிலும் சந்து பொந்துகளில் வந்து குந்தியது. நம் தொழிலை நிலை குலைக்கத்தான் ஒவ்வொரு குடும்பத்திலும் சிறுவர் முதல் யாவரும் பஞ்சை நூலாக நூற்று, ஆடைகளை நெய்து வந்தனர். இப்போது நம்மவர் பெரும்பாலார் இத் தொழிலைப் பற்றி அனைத்தையும் அறவே மறந்தனர். கதரியக்கம் ஏற்பட்டிராவிட்டால் இது முன்னரே மறைந்தே இருக்கும்.

வெளி நாட்டார்கள் இயந்திர சகாயத்தாலும், பொருளுதவியாலும் ஏராளமான சரக்குகளை உற்



பத்தி செய்து கொண்டே வருகின்றனர். இதனிடையே, நம் பழைய கைத்தறிகளைக் கொண்டு அவர்களுடன் போட்டி போடுவது சூரியனின் முன்னிட்ட மின்மினியை அன்றோ ஒக்கும். இவர்களை ஜெயிக்க நம்மோருக்கு சாத்திய மின்மையானும் நம்மவர்களே நம்முடைகளைப் புறக்கணித்து, அன்னியரின் தினுசுகளை நாகரீகமெனக் கொண்டு அணிய முயன்றதாலும் நம் தொழில் நசிக்கலுற்றது. தறிகளால் உண்டாக்கப்பட்ட ஆடைகளின் மதிப்பற்றுக் கிராக்கியின்மையால், விற்பனை அறவே ஒழிந்தது. இதனால் நம்மவர் பலர் ஜீவனோபாயத்திற் கேதுவெனக் கருதிய இத் தொழிலில் ஊதிய மில்லையெனக் கண்டதாலும், சிறிது ஊக்கம் வாய்ந்த வேறு சிலரும் இத் தொழிலையும் வியாபாரத்தையும் நடத்தப் பொருளின்மையால் பட்ட துன்பத்தினாலும் கூலித் தொழிலினை யேற்று, அடிமைகளாக உரிமை யிழந்து வசிக்கின்றனர். இன்னும் சில ஏழை மக்கள் வயிற்றுப் பிழைப்புக்கெனவே கையிலுள்ள சிறிய பொருளையும் படிப்பில் செலவழிக்கின்றனர்; அதுவும் அரைகுறையே. இவர்கள் உத்தியோகத்தை நம்பியே இவ்வாறு செய்கின்றனர். இதை நம்பி மோசம் போய் வேலையில்லாமல் திண்டாடும் நபர்களின் தொகை அதிகரித்து வருவதை இவர்கள் சிறிதும் கண்டார்களில்லை.

நம் தொழில், போட்டியால் வாடிய விதமே வியாபாரமும் நம் நாட்டை விட்டு ஓடியது. கப்பல் யாத்திரை அனாசாரமெனக் கருதப்பட்ட நாள் முதல், வியாபாரம் நாளுக்கு நாள் ஒடுங்கியது. பிரதி வருஷமும் பல கோடி ரூபாய்கள் பொறுமான துணிகள் அழைக்கப்படுகின்றன. அவ்வளவு ரூபாய்களும் வீணே இழக்கப்படுகின்றன. இதனாலன்றோ ஏழ்மை இங்கு குடி கொண்டது. ரூபாய்களின் ஏற்றுமதிகளே யன்றித் துணிகளின் ஏற்றுமதி அணுவேனுமில்லை. நம் தொழில் வியாபாரங்களின் நாணயம், நம்பிக்கை, ஊதியம் முதலியவற்றின் கேட்டின் காரணத்திற்கு மற்றவர்களின் போட்டியே அடிப்படை. பொதுவாக நோக்குமளவில் நம்மவர் தொழில் வியாபாரங்களின் இழிவுக்கு முக்கிய காரணம் நம் நாட்டின் அதிலும் நம் சமூகத்தின் கண்ணுள்ள கல்வி, வாய்மை, ஒற்றுமை, அழுக்காறின்மை, விடா முயற்சி, கூட்டுறவு, தேசப்பற்று, சீர்திருத்தம் இவைகளின் குறைவேயாகும்.

## கைத்தொழில் வியாபாரங்களை வளர்க்கும் முறைகள்

இனி நம்மவர்களின் கைத் தொழில் வியாபாரங்களை வளர்க்கும் முறையாதெனின், மேற் சொல்லியவற்றின் குறைவை நிவர்த்திக்க முயல்வதேயாமென்க. நம் நெசவும், வியாபாரமும் இக்கால முறையில் பெரிதும் சீர் திருத்தமடைதல் முக்கியமாகும். புத்தி நுட்பத்தால், இவற்றைத் தேகப் பிரயாசையைக் குறைக்கவும், ஊதியத்தைப் பெருக்கவுமாய் சீரிய முறைகளைக் கைக்கொண்டு நடாத்தல் வேண்டும். சிறுவர் முதல் யாவரும் நூல் நூற்றல், நெய்தல், சாயந் தீர்த்தல் முதலியவற்றைக் கைக்கொள்ள வேண்டும். பழைய கைத் தறி முதலியவற்றை யொழித்து நூதனமுறை பழகல் வேண்டும். இவற்றிற்கும் கல்வியவசியமே. பிறநாட்டின் ஆடைகளை விட நம் நாட்டில் உற்பத்தி செய்யும் ஆடைகள் நாணயமாயும், விலை சகாயமாயும் இருந்தால்தான் யாவருங் கொள்ள முற்படுவர். இதற்கு, அவ்விடத்திய உற்பத்தியை விட இங்கு அதிகமாக உண்டாக்குதலே முக்கிய காரணமாகும். நம் சகோதரர்களனைவரும் அவரவர்களால் இயன்ற வரையில் நம் நாட்டு உடைகளையே உபயோகிக்க முயன்றால், பெரிதும் ஊக்கத்தை விளைக்கும்.

செல்வர்கள் கைத் தொழிலைச் செய்யவேண்டிய தவசியமில்லையாயினும், வியாபாரத்தைக் கைக்கொண்டு, அதை விருத்தி செய்தல் அவர்களின் முக்கிய கடமையாகும். வியாபாரத்திற்குக் கல்வி எவ்வளவு அவசியமென்பது சொல்லாமலே விளங்கும். தொழிலும், வியாபாரமும் இக் கல்வியிலன்றோ ஒடுங்கி கிடக்கின்றன. கல்வி யில்லாது நடத்தும் வியாபாரமும் சிறக்குமோ? கற்றறிந்தார் நடத்தும் வியாபாரம், ஏனையோரின் வியாபாரத்தினும் பன் மடங்கு பயனளிக்கும். வெளி நாடுகளையும் அனுசரித்து வியாபாரம், நடத்தல் வேண்டும். இவற்றிற்குக் கடிதப் போக்கு வரவு செய்வதற்கு ஏதுவாக, உலகத்தில் யாவரும் அறிந்ததும், வியாபாரத்திற்குத் தகுந்ததுமான ஆங்கிலக் கல்வியில் பெரிதும் பயிற்சி பெறல் அவசியமாகும். வியாபாரிகளுக்கு வேண்டிய இலக்ஷணங்களைத்தும் ஒருங்கே அமையப் பெறல் அத்தியாவசியமாகும். வியாபாரத்திற்கு முக்கியம் தளரா ஊக்கம், நம்பிக்கை, ஒற்றுமை, இவைகளே யாம். ஊக்கத்தைக் கெடுப்பது வியாபாரத்தினலடையும் நஷ்டமே. இதைத் தவிர்த்துப் பெரிதும் லாப மடைய விரும்பின், நம் வியாபாரம் கூட்டுறவு முறையில் நடைபெறல் வேண்டும். தனித்தனியே வியாபாரஞ் செய்தல், ஒருவருக் கொருவர் போட்டியேற்பட்டுப் பல விதத்திலும் கேட்டை விளைக்கும். கூட்டுறவு வியாபாரத்தால் வரும் பயன் அநந்தம்.

கைத் தொழிலையும், வியாபாரத்தையும் கூட்டுறவு முறையில் நடத்தல் நலனாகும். இதனால் முதல் அதிகரித்து, பெரிய வியாபாரங்களை நடத்த ஏதுவாகும். இவ்வியாபாரம் பலரால் நடத்தப் படுவதால் பெரிதும் சிறக்கும்; யாவரும் இலாப மடையலாம். தகுந்த ஊர்கள் தோறும் ஐக்கிய நாணய சங்கங்களையும் ஏற்படுத்தல் வேண்டும். இச்சங்கங்கள் பங்குத் தொகையில் நடத்தப்பட வேண்டுமாதலால், தனவந்தர் முதல் யாவரும் இதில் பங்குக்காரர்களாகச் சேர்ந்து நடத்தினால், சொற்ப முதலையுடைய வியாபாரிகள் முதல் யாவரும் ஊதியமடைந்து, பெருத்த முதலாளிகளாயாவார்களென்பது திண்ணம். இச்சங்கங்கள் ரொக்க லேவாதேவிக்கு மட்டுமன்று. கூட்டுறவு

ஐக்கிய நாணய சங்கங்கள் நம் மக்கட்குத் தொழிலுக்கு வேண்டிய சகல சாமான்களையும் தருவித்து விலைக்கும், கடனுக்கும், வாடகைக்கும் கொடுத்துதவுதல் வேண்டும். நம்மவர்க்காக ஒரு பஞ்சாலை இச்சங்கங்களால் ஸ்தாபிக்கப் படல்வேண்டும். யாவரும் இங்கு உற்பத்தி செய்யப்படும் நூலையே வாங்கி உபயோகிக்க வேண்டும். நூலைக் கொடுத்து, குறித்தவிதமாக ஒப்பந்தத்திற்கு செய்து கொடுக்கும்படியாகவும் கூலிக்காரர்களை அமைக்கலாம். அவ்வவ்வூர்களிலே உற்பத்தியாகும் சரக்குகளை இச்சங்கத்தார்களே மொத்தமாக வாங்கி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். இதனால் ஒவ்வொருவருடைய தேகப்பிரயாசை, பணச் செலவு இவைகள் குறைவுபடும். காலத்தையும், அறிவையும் வீணே செலவழிக்க நேராது. கிராக்கியுள்ள இடங்களைக் கண்டு பிடித்து நல்ல விலைக்கு விற்றல் ஆங்காங்குள்ளவர்களால் விரும்பப்படும் ஆடைகள் எவை யெனத் தேர்ந்தெடுத்தல் முதலிய சகல காரியங்களும் இச்சங்கங்களின் பொறுமையுமே யாகும்.

இன்னும் சில முக்கிய இடங்களில் செங்குந்தர் சங்கங்கள் நியமிக்க வேண்டும். ஒரு பொது நிதி இச்சங்கங்களில் இருத்தல் அவசியம். இது நம் சமூகத்தின் செல்வர்களின் உதவியை நாடி நிற்கிறது. முன்னேற்றத்தைக் கருதும் ஒவ்வொரு தர்மிஷ்டிகளும், இதில் சற்றேனும் பின்னடையார்கள். இச்சங்கங்கள் சக்தியற்ற ஏழைகளுக்குப்பணத்தாலும், தொழில் சாமான்களாலும், உதவிபுரிந்து, தொழிலைப் பின்பற்றுமாறு கைதூக்கி விடுதலும் தருமமே. இன்னும் இச்சங்கங்கள் செய்யவேண்டிய வேலைகளை கவனிப்போம். கைத் தொழில் வியாபாரங்களைக் குறித்துப் போதிய இராசாங்கத்தா ரிடமிருந்து அடைய முயலுதலல்லாமலும், தாங்களும் நம்மவர்க்கு வேண்டிய சகல சௌகரியங்களையும் செய்து கொடுத்தல் மிகவும் போற்றத்தக்கது. வருடந்தோறும் நம்மவர் மகாநாட்டைக் கூட்டுவித்து, இவற்றின் புதிய முறைகளைப் பிரசங்க வாயிலாகவும், பொருட் காட்சி மூலமாகவும், எடுத்துக் காட்டி பின்பற்றிச் செய்தல் பெரிதும் பயனளிக்கும். நம்மவரில் கற்றறிந்த அநுபவசாலிகள் பலரை வெளி நாடுகளுக் கனுப்பி, அங்கு நடைபெறும் தொழில் வியாபாரங்களின் முறைகளைக் கற்றுவந்து நம்மவர்க்குப் போதித்தல் வேண்டும். தொழில் முறைகளை அவ்வப்போது புதுக்கி யமைத்து, கிராமங்கள் தோறும் சென்று ஒவ்வொருவருக்கும் செய்துகாட்டல் வேண்டும். இவற்றைப் பிரசாரம் செய்வதற்கு அநுபவமிருந்த பிரசாரகர்கள் பலரை ஏற்படுத்தல் அவசியமாகும். சுலபமான புதிய வழிகளை அடிக்கடி துண்டு பிரசுரம், பத்திரிகை இவற்றின் வாயிலாலும் அறிவூட்டல் நலமாகும். சௌகரிய மற்ற ஏழைச் சிறுவர்களுக்குப் போதுமான வரையில் அவசியம் கல்வி கற்பித்தல் முக்கிய கடனாகும். ஆங்காங்குச் சிறுவர்களுக்கு தொழிற் கல்வியைப் போதிக்க வல்ல பாடசாலைகளை ஏற்படுத்துவதல்லாமல், ஏற்கனவே பழய முறைகளை அநுசரித்துவரும் நம்மவர்களைப் புதிய முறையில் திருத்தியும் தொழிலை விருத்தி செய்ய முயலுதல் வேண்டும். மாணவர்களை அரசாங்கத்தாரால் பல இடங்களில் ஏற்படுத்தியுள்ள கைத்தொழிற் சாலைகளுக்கும், வெளி நாடுகளுக்கும் அனுப்பித் தேர்ச்சி பெறச் செய்யவேண்டும். இன்னும் நெசவுச் சாலைகளை ஏற்படுத்தி அங்கு பஞ்சு நூற்றல், சாயந்தீர்த்தல், ஆடைகள் நெய்தல் முதலிய வேலைகளில் நம் எளிய ஜனங்களை ஈடுபடச்செய்து, தகுந்த கூலியைக் கொடுத்து ஏழ்மையை அகற்ற வேண்டும்.

இவ்வாறு பல துறைகளிலும் நம்மவரனைவரும் ஊக்கத்தோடு ஒத்துழைத் தோமாயின், நம் தொழிலும் வியாபாரமும் நாளடைவில் செழித்து முதல் நிலையை யடைவதல்லாமல், நம் தேசத்தையும் பெரிதும் சிறப்புறச் செய்யுமென்பதற் கையமில்லை.


சுபம்.


# நாவல்கள்! கதைப் புத்தகங்கள்!!

தற்கால நாகரீகத்துக் கேற்றவாறு, உயர்தர நாவல்களும், துப்பறியும் நாவல்களும், படிக்கப் படிக்க திகட்டாத இன்பத்தைத் தரும் அற்புத நவீன கதைகளும், மற்றும், வைத்தியம், மாந்திரீகம், ஜோசியம் முதலிய எல்லாவித புத்தகங்களும் சப்ளை செய்யப்படும்.

செங்குந்த மித்திரன் புத்தகசாலை,
செங்குந்த மித்திரன் ஆபீஸ்
கீழ்ப்பாக்கம் சென்னை.




## பெண்ணு? பிணமா?

பிரமோதூத ஆண்டு கார்த்திகைத் திங்கள் க-ம் நாள் காரைக்குடி "நலஉரிமைத் தொண்டர் சங்கத்தின்" மூன்றாவது ஆண்டு விழாவில் நாச்சியார்புரம் "உண்மைவிளக்க நிலையம்" மாணவி சி. மெ. "கிளிமொழி" என்ற (எ) ஆண்டுச் சிறுமி நிகழ்த்திய

சொற்பெருக்கு

சபைத் தலைவர் அவர்களே! சகோதர சகோதரிகளே !! பெரியோர்களே !!! வணக்கம். இன்று நான் பேசப்போகும் பொருள் "பெண்ணு, பிணமா" என்பதாகும்.

மனித வடிவத்தில் பாதி பெண், பாதி ஆண். பெண்ணும் ஆணுஞ் சேர்ந்தே மனிதன். பிணமென்பது உயிர் பிரிந்த உடம்பு. பிணத்துக்கு விருப்பு வெறுப்பு முதலிய உணர்ச்சிகளில்லை. இன்று பெண், மனிதவர்க்கத்தில் உணர்ச்சியுடைய பெண்ணாகப் பாவிக்கப் படுகின்றாளா அல்லது விருப்பு வெறுப்பு அற்ற பிணத்தைப்போல பாவிக்கப்படுகின்றாளா என்பதை ஆராய்ந்து முடிவு கட்டுவதே, பெண்ணு, பிணமா? என்கிற பொருளை எடுத்துக் கொண்டதன் நோக்கமாகும்.

அன்பர்களே! உலகத்திலுள்ள கொடுமைகளிலெல்லாம் மிகக் கொடுமை ஆண்கள் பெண்களுக்குச் செய்யும் கொடுமை என்று துணிந்து கூறுவேன்.

மனிதனை மிருகத் தன்மையிலிருந்து மனிதத் தன்மைக்குக் கொண்டு வருவது "கல்வியே யாகும்." ஆனால் இந்த தேசத்தில் மட்டும், பாழாய்ப்போன நம் தேசத்தில் மட்டும் "பெண் கல்வி" இன்னும் மறுக்கப்படுகிறது. ஒருக்கால் உலக நாகரீகத்தில் வசப்பட்டுப் பெண்களும் சீர்திருத்த வாதிகளும் கிளர்ச்சி செய்தால் "அடுப்பூதும் பெண்கட்குப் படிப்பு எதற்கு?" என்று முட்டாள் தனமாக வெட்டிப்பேச்சுப் பேசி குருட்டுத்தனமாக எதிர்க்கிறார்கள். பெண்களுக்குப் படிப்புக் கொடாது, அறிவை வளர விடாது, தடுத்து மிருகப் பிராயத்திலேயே வைக்க விரும்பும் கொடுமையிலும் கொடுமை, உலகத்தில் எங்கு காணமுடியும்?

ஆண்கள் காலையிலும் மாலையிலும் காரியமில்லாமல் உல்லாசமாக உலாவச் செல்லுகிறார்கள். நல்ல காற்றுக் கிடைக்கின்றது; வெயில் வெளிச்சம் கிடைக்கின்றது; இன்னும் பரந்த உலகத்தின் இன்பக் காட்சி கிடைக்கின்றது. ஆகவே மகிழ்ச்சியடைகின்றார்கள். ஆனால் பெண்களுக்கோ சிறிது நேரம் போக்க, வசதியான வாசகசாலையோ அல்லது நந்தவனமோ, விளையாட்டிடமோ கிடையாது சதா சர்வகாலமும் இருட்டறையில் அடைந்து கிடந்து பணிவிடை செய்ய வேண்டியதே அவள் கேட்டுவந்த வரமா? மாட்டை அடித்து வசக்கித் தொழுவில் மாட்டுவதைப் போல ஆதிக்க வெறி பிடித்த ஆண்கள் பெண்களை வீட்டுக்குள் பூட்டி வைக்கிறார்கள். ஆண்கள் உலகம் முழுவதும் சுற்றி வரும்போது பெண்கள் மட்டும் வீட்டுக்குள் அடைக்கப்பட்டு அவதிப்பட்டு அழுந்துகிறார்கள். இது எவ்வளவு கொடுமை என்பதை மனிதத் தன்மையோடு யோசித்துப் பாருங்கள்.

எவ்வளவு பெரிய மழை பெய்தாலும் பெண்கள் கையிற் குடை பிடிப்பதில்லை. வீட்டுத் திண்ணை, தாழ்வாரம், கூடம் இதுகளில் ஆடுமாடுகள் ஒதுங்குவதுபோல ஒதுங்குகின்றார்கள். இல்லையானால் சேலை, முறம், தடுக்கு முதலியவற்றைத் தலையில் தாங்கிச் செல்லுகிறார்கள். எவ்வளவு கொடிய வெயிலாக இருந்தபோதிலும் காலில் மிதியடி அணியாது நடக்கின்றார்கள். வெயிலின் கொடுமையால் அந்தோ! சூடு தாங்க முடியாமல் நிழல் நிழலாய் நின்று, புழுப்போல் துடிக்கின்றார்கள். இத்தகைய கஷ்டத்திலிருந்து விடுபட்ட ஆண்கள் பெண்களைத் துண்டவில்லை யென்று திட்டமாகச் சொல்லலாம். அதோடு பெண்களில் சிலர் துணிந்து மழைக்காகக் குடை பிடிக்கவும், சூடு பொறுக்க முடியாமல் காலில் மிதியடி யணியவும் செய்தால்

ஆண்கள் ஏளனஞ் செய்து உலகமே மூழ்கிவிடு மென்று கூக்குரலிட்டுக் குதிக்கின்றனர்கள். சபையோர்களே! குடையும் மிதியடியும் ஆண்களுக்கு சொந்தச் சொத்தா? என்றுதான் கேட்கிறேன். அல்லது, இயற்கைச் சட்டத்தில் ஆண்களுக்கு மட்டுந்தான் குளிரும் சூடும் மழையும் வெயிலும் துன்பத்தைக் கொடுக்கு மென்றிருக்கிறதா? இது எவ்வளவு அக்கிரமம் என்பதை எண்ணிப் பாருங்கள்.

மாத விடாய் நாட்களில் பெண்கள் படும் பாடு சொல்லி முடியாது. அப் பெண்கள் அந்த நாட்களில் மக்களுக்குச் சுமமாகவே மதிக்கப்படுவதில்லை. ஆணுக்கொரு நீதி! பெண்ணுக்கொரு நீதி! என்ன அநீதி இது? ஆண்கள் சாப்பிடும் வரையில் பெண்கள் காத்திருக்க வேண்டுமாம்! சில குடும்பங்களில் வீட்டிலுள்ள ஐந்து வயது ஆண் குழந்தை சாப்பிட வரவில்லையானாலும் பெண்கள் காத்திருந்து கண் தூங்கி வாடுகின்றார்கள். மனு முதலியவர்கள் சொல்லுவதுபோல் பிரம்மா பெண்களை ஆண்களுக்கு அடிமையாகத்தான் படைத்தான் என்று வைத்துக்கொள்வோம். ஆனால் பெண்களுக்கு வேளா வேளைப் பசியாதென்றும் ஆண்களெல்லாம் சாப்பிட்ட பிறகுதான் பெண்களெல்லாம் சாப்பிட வேண்டுமென்றுமா, பிரம்மா படைத்தான்? (அம்மம்மா) கொடுமை! கொடுமை! சபையோர்களே! இதனிலும் மிகக் கொடுமை புருஷன் எச்சிலைப் பெண் தின்னவேண்டு மென்பதே. புருஷன் எப்படித் தின்று போட்டிருந்தாலும் சரி அதைப்பற்றிக் கவலை யில்லை; என்று பெண்களின் எச்சிலை ஆண்கள் சாப்பிட நேருகின்றதோ அன்றுதான் ஆண்கள் இந்தஅநியாயத்தை உணருவார்கள்.

வீட்டுக்குரிய கடின வேலைகளான தண்ணீரெடுத்தல் சமைத்தல் முதலியவற்றைச் செய்ய முடியாத காலத்திலுங்கூட பெண்கள் மிக அடக்கமாகவும் பொறுமையாகவும் சிரமத்தோடும் வேலையைச் செய்கின்றார்கள். அப்படிச் செய்தாலும் சாப்பிடுவதற்குச் சிறிது நேரமாகி விட்டால் அல்லது தனக்குப் பிடியாவிட்டால் நன்றி கெட்ட இந்த ஆண் பிள்ளைச் சிங்கங்களில் எத்தனையோ பேர் பெண்களை வைகின்றார்கள்; அடிக்கின்றார்கள்; உதைக்கின்றார்கள்! மேலும் ஐந்து வயது ஆணும் சரி, ஐம்பது வயது பெண்ணும் சரி, என்னும் அநீத மொழியின் ஆட்சியால் தொட்டதற்கும் வைத்ததற்கும் ஆண்களுக்குப் பெண்கள் அடிமையாகவேண்டிய திருக்கிறது. அந்தோ! பரிதாபம்! பரிதாபம்!! நிற்க,

நூறு வருஷங்களுக்கு முன் புருஷன் செத்ததும் பெண் உடன் கட்டை ஏறினாள். இன்று விதவையாக மணமிழந்து, மங்கலமிழந்து, பூவிழந்து, பொட்டிழந்து, ஆடையாபரணங்களிழந்து, சுகபோகங்களிழந்து, கொண்டவனை எண்ணி, கொம்பிழந்த கொடிபோல வாடி வதங்குகின்றார்கள். பெண்களில் எவரும் வேசியென்று சொல்லப்படுபவள்கூட ஆண்களைத் தேடிப் போவதரிது. ஆனால் ஆணோ பெண்டாட்டி இருக்கையில் பின்னும் இச்சிக்கிறான். மனைவி இறந்துபோனால் வேறொரு பெண்ணைக் கட்டிக் கொள்ளுகிறான். போதாதென்றால் இன்னும் சிலரை மணக்கிறான். அதுவும் போதாமல் மலந் தேடி யலையும் பன்றிகளைப் போல தூக்கக்காரிகள் தெருவெல்லாம் சுற்றிச் சுற்றி அலைகிறான். இப்படி யிருந்தும் சட்ட கர்த்தாவாகிய மனு, பிரம்மா பெண்களை விபசாரத் தோஷத்தோடேயே பிறப்பித்தார் என்று திருவாய் மலர்ந்தருளுகிறார்.

குடத்திலும், குதிரையிலும், மீனிலும், தூணிலும், செடியிலும், கொடியிலும், பிள்ளைகளைப் பெற்றிருக்கும் ஆண்கள் பெண்களை விபசாரிகளென்பது மகா பாவமல்லவா? அயோக்கியத்தனமல்லவா? இளமை மணம், விதவைக் கொடுமை, கோஷா முறை, பொட்டுக் கட்டுதல் முதலியவை ஆண்களின் அக்கிரமத்தைக் காட்டப் போதிய உதாரணங்களாகும். மேலே காட்டிய உதாரணங்களிலிருந்து பெண்களும் மனிதர்கள் தானென்றும் அவர்களுக்கும் விருப்பு வெறுப்பு முதலிய உணர்ச்சிகளுண்டென்றும், ஆண்கள் மதிப்பதாகத் தெரிகின்றதா? தெரியவில்லையா யென்றால், உணர்ச்சி யில்லாதவர்களாகத் தானே பாவிக்கப் படுகின்றார்களென விளங்குகின்றது.

உணர்ச்சி யில்லாதது பிணந்தானே? ஆகவே மனிதத் தன்மையற்ற ஆண்களென்பவர் கண்ணுக்குப் பெண்கள், பிணமாகத்தானே காணப்படுகின்றார்கள்?

சபையோர்களே! பெண்ணா? பிணமா? என்கிற பொருளை எடுத்துக்கொண்டது சிலருக்குப் பிடியாதிருக்கலாம். ஏன்? பெண்ணைப் பிணமென்று குறிப்பிடுவதால்தான். ஆனால் ஆண்கள் பெண்களுக்குச் செய்யும் அக்கிரமத்தை, அட்டூழியத்தை, அநீதியை, அயோக்கியத் தனத்தை, அடாத கொடுமையைச் சுட்டிக் காட்டுவதற்கும் மங்கலச் சொல்லுமாத் தேடவேண்டும்? நன்று! நன்று! பிணத்திற்கேனுமரியாதை யுண்டு. பெண்களுக்கு அதுதானுமில்லையே!

சகோதரர்களே! உலகப் போக்கைக் கண்டு பெண் விடுதலையின் பெரு முழக்கத்தைக் கேட்டு, பெண்ணுரிமைப் போராட்டத்தை உணர்ந்து பெண்களும் மனிதர்கள், உணர்ச்சி யுடையவர்கள், ஆண்களைவிட இளைத்தவர்களில்லை யென்று தெரிந்து, அவர்களைச் சுதந்திரப் போக்கில் விட்டு விடுங்கள். இன்றேல் அயலாரை சுதந்திர வீரர்கள் எதிர்ப்பது போலவும், மதக் கொடுமையை சுயமரியாதை வீரர்கள் எதிர்ப்பது போலவும், ஆண்களைப் பெண்கள் எதிர்க்குங் காலம் விரைவில் வந்து விடுமென்று எச்சரிக்கை பண்ணி எனது பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

---



# மணமகனாகிய புருஷனுக்கும் மணமகளாகிய பெண்ணுக்கும் தங்களுக்கென்றமைத்த விடுதியில் நடை பெற்ற சம்பாஷணைகள்

[திரு. ப. அங்கமுத்துமுதலியார், சிகிச்சாஞான பண்டிதர், சத்தியமங்கலம்]

பெ:—எனதன்புக் கிசைந்த ஆருயிர் தலைவா, தங்களிடத்தில் சில உபதேச மொழிகளைக் கேட்க விரும்புகிறேன்.

பு:—என் காதலி அப்படியே கேட்டறியலாம்.

பெ:—தாங்கள் என்னையே மணம்புரிய வேண்டுமென்று கருதி யிருந்தீர்களா.

பு:—அப்படி யொன்றும் நான் கருதவில்லை.

பெ:—பின் எப்படி நான் தங்களுக்குப் பாரியையானேன்.

பு:—நான் பள்ளியில் வாசிக்கும் பொழுது நங்குலத் தோன்றலாகிய நல்லாசிரியர் 'எழுத்தறிவித்தோ னிறைவனாகு'மென்று கூறினார். அதனை நான் உபதேச மொழியாக ஏற்றுவந்ததில் நாளுக்கு நான் கல்வியிலும் நற்குணம் நற்செய்கைகளிலும் மேலோங்கினேன். அதன்பின் மக்களாக்கைக்குரிய இல்லறம் நடத்தக் கருதி இதற் கிசைந்தவள் மனைவியாதலால் என் சிற்றுயிற் குற்ற துணையாக கல்விக் குருதுணைபுரிந்த இறைவன் என் சரீர சம்மந்தத்திறகுரிய மனைவியையும் பெறச் செய்வானென்ற உறுதியை கடைப்பிடித் தொழுகினேன். அதன் பயனாக நம்மனோர்க்கறிவுறுத்தி உனக்கு மெனக்குமுள்ள சம்மந்தப் பேற்றை அடையச் செய்தான். அதினாற்றான் நாமிருவரும் குதூகலத்துடன் இங்கு கூடி யிருக்கின்றோம்.

பெ:—அன்பரே நான் எவ்விதம் நோன்பு புரிந்தேனோ அவ்விதமே தாங்களுஞ் செய்திருக்கிறீர்கள். அதினாற்றான் இறைவன் நம்மிருவருடைய அன்பிற்கும் இடற்படுத்தாது ஒற்றுமை மணத்தினை யூட்டி வைத்தான் போலும் அதனால் தான்,

> மூந்த வேலை எரித்த மும்முதல்
> கந்த வேலை ஈன்ற கடவுளர்
> எந்த வேலையில் எப்படிச் செய்வரோ
>
> அந்த வேலையில் அப்படி யாகுமே.

யென்று முன்னோர் வியந்து கூறியுள்ளார்.

பு:—பெண்ணே நீ கேட்க விரும்பிய உபதேச மொழிகள் இதுதானே.

பெ:—இன்னுஞ் சில வாக்கியத்தைக் கேட்டறிய வேண்டும்: ஆனால் தங்களுக்கு சிரமத்தை உண்டாக்கக் கூடாதென்று அஞ்சுகிறேன்.

பு:—கண்மணி, நாமிருவரும் எப்பொழுது ஒரு மனதுற்றோமோ அப்பொழுதே அஞ்சுத லென்றதை நீக்கி அன்பென்பதை கைபெற வேண்டும். ஆனதால் இனி நாமிருவரும் உடலிரண்டுயிரொன்றுமாகக் கருத்திலமைக்க வேண்டுமேயல்லாது ஒருவற்கொருவர் வேற்றுமை யென்பது கூடாது. இதன் பொருள்பட நமதவ்வையார்,

> ஈதலறந்தீவினை விட்டீட்டு பொருளெங் ஞான்
> காதலிருவர் கருத்தொருமித்—தாதரவாய் [றும்
> பட்டதே இன்பம் பரனை நினைந்திம் மூன்றும்
> விட்டதே பேரின்ப வீடு.

என்பதாய் கூறியுள்ளார். மேலும் 'அன்பிற்குமுண்டோ அடைக்குந்தா'ழென சிறப்பித்துக் கூறியிருக்கின்றனர். ஆகையால் நீ கொண்ட அஞ்சுதலை விடுத்துக் கேட்பாயாக.

பெ:—என்னரசே, நமக்கென் றமைத்த மணவறைப் பந்தலில் தாங்கள் என் கழுத்தில் மாங்கல்யஞ் சூட்டும் பொழுது என்னை யறியாது கண்ணில் நீர்ததும்பக் கலக்கமுற்று பிரமிக்கச் செய்ததே அது யாது காரணம்.

பு:—என் கண்மணி, யான் உன் கழுத்தில் மாங்கல்யஞ் சூட்டுமுன் உன்சரீர சம்மந்தங்கள் யாவும் தனிமைப்பட்டிருந்தன அச்சம்பந்தங்கள் யாவும் என் சுவாதீனப் படுத்தவேண்டி உன் தந்தையின் கரத்தில் தேங்காய் பழம் பாக்கு வெற்றிலை பொன்னால் செய்யப்பட்ட மாங்கல்யம் யாவும் ஒரு தட்டில் நங்குல மதாச்சாரியரால் கொடுக்கப்பட்டு அதற்குரிய மந்திர பலத்துடன் என் தந்தை கரத்தில் கொடுக்கச் செய்தனர். அவர் அதனைப் பெற்று என் கரத்தில் கொடுத்தனர். அம்மாங்கல்யத்தை ஏற்றதும் நமதிருவருடைய ஆத்மார்த்தத்தைக்குறித்து இறைவனைப் பிரார்த்தித்தேன். அது சமயம் நங்குல நாட்டார்களும் நமது சுற்றத்தார்களும் மதாச் சாரியரும் நம்மிருவரையும் ஆசீர்வதிக்க அக்ஷதை பெற்று நின்றனர். வாத்திய கோஷ்டிகளும் முழக்க மெய்தின. இத்தகைய ஆரவாரத்தில் என் கையிலுள்ள மாங்கல்யத்தை உன் கழுத்தில் சூட்டி என் சரீர சம்பந்தத்தைப் பொருத்தச் செய்தேன். பெண்மணி, அதினாற்றான் நீ கண்ணில் நீர் ததும்பக் கலக்கமுற்று பிரமித்து விட்டாய். மேலும் ஏககாலத்தில் இத்தகைய ஒருமையுடன் ஒரு பெண்ணின் சரீர சம்பந்தமாயுள்ள யாவும் ஒரு புருஷன் மாங்கல்யஞ் சூட்டிப் பெருவதானால் யாருக்கும் ஒருவித பிரமை யுண்டாகுவதை அறிந்துக் கொள்வாயாக.

பெ:—என் உயிர்க்குயிராகிய உத்தமரே, யான் எவ்வர்ண மென்னும் பரிபக்குவத்தைப் பெற்றும் தாங்கள் மாங்கல்யஞ் சூட்டி மனைவியாக்கும் பொழுதே இத்தகைய கலக்கமும் பிரமையும் யுண்டாக்கி விட்டதென்றால் இன்னும் பால் மணமாராத குழந்தைகளைக் கொண்டு மாங்கல்யஞ் சூட்டும் பொழுது அவர்கள் என்ன பாடுபடுவார்கள், அதுதான் அவர்களை அழைத்து வரும்பொழுதும் மாங்கல்யஞ் சூட்டும் பொழுதும் கூக்குரலிட்டுக் கதறி அழுகின்றனர். அதீவுந் தவிர புருஷன் வீட்டில் இச்சை யில்லாது தாய் வீட்டிலேயே இருந்து வரு

கின்றனர். அதனால் பலவிதச் சச்சரவிற்கு மிடமாகிறது. இதனையெல்லாம் நமது நாட்டார்கள் இன்னும் ஏன் சீர்திருத்தஞ் செய்யாதிருக்கின்றனர்.

பு:—பெண்ணே நமது நாட்டார்கள் சீர்திருத்தஞ் செய்யவில்லையென்று திடீரெனக் கூறலாகாது. உன்னால் விரும்பப்பட்ட இதுவும் இன்னும் இதனோடியைந்த நாவிதன் மங்களம் பாடுதல், உரிமைக்காரியாகிய பெண்கள் தாலி கட்டுதல், தாய் மாமன் பெண்ணெடுத்தல், பிராமணன் எக்கிய மந்திர முறைத்து ஏமாற்றுதல், கல்யாணஞ் செய்யும் வரை தாடி மீசை வளர்த்தல், விதவா விவாகத்தை நீக்கி வைத்தல் முதலாகிய குறைபாடுகளையும் வேரறுத்து வென்னீர் வார்க்க வேண்டுமென்று அதிதீவிர முயர்ச்சியுடன் இந்த நான்கு வருட காலமாகப் பாடுபட்டு வந்தும் இன்னும் தலைவிரித்தாடிக் கொண்டு இருக்கிறது. இதற்காகத் தான் இம்மாத முதல் சீர்திருத்தப் பகுதி யென்ற முறையை ஏற்பாடு செய்திருக்கின்றார்கள்.

பெ:—காதல, நான் பள்ளியிற் படிக்கும் பொழுது உபாத்தியாயராய் எங்களுக்குப் புத்தி புகட்டிய நங்குலப் பெண்மணி ஒரு நாள் என்னோடியைந்த எழுபத்திரண்டு குழந்தைகளையும் ஒழுங்குறநிருத்தி நங்குலத் தோற்றத்தையும் அதன் பெரும் புகழையும் எங்களுக்குரிய சீர்திருத்தங்களையும் எடுத்துக்காட்டிய பொழுது நாங்கள் இத்தகைய குலத்தில் பிறந்து பெருமை யுறுவதற்கு எவ்வளவு புண்ணியஞ் செய்திருப்போமென்று அளவிலடங்கா மகிழ்வெய்து ஆனந்தப் பரவசமானோம் அது முதல் வாரத்திற் கொருமுறை இத்தகைய சீர்திருத்தங்களை எங்களுக்கு எடுத்துப் போதித்து எங்கள் இருதயத்திற் பதிவு செய்யுமாறு வேண்டினோம். நங்குலப் பெண்மணியாகிய உபாத்தியாயர் அவ்விதமே செய்து பதிவு செய்தனள். அது முதல் இதுவரை நங்குலப் புருடர்களும் பெண்களும் தெய்வத்திற் கொப்பானவர்களென்று நினைத்திருந்தேன். இன்று தாங்கள் கூறிய பழக்க வழக்கமில்லாத நகைச் சொற்களைக் கேட்க என் மனம் கவலுறுகிறது. இப்பழக்க வழக்கங்கள் நமது குலமக்களிடம் எப்படிப் பரவிக் கொண்டது.

பு:—பெண்ணே சில காலத்திற்கு முன் வேற்றரசர்களின் கொடுமையால் நம்மவர்கள் சிதறுண்டு குடியானவர்களிருக்கும் கிராமங்களையடைந்து நாளடைவில் அவர்கள் பழக்க வழக்கங்களைக் கையேற்று விட்டனர். இதனை ஒழிப்பதற்கு நம்மனோர் நான்கு வருட காலமாய் பாடுபட்டும் இன்னும் ஒழிந்தபாடில்லை. இப்போது எடுத்துள்ள சீர்திருத்தப் பகுதியில் இக்குறைபாடுகளெல்லாம் நீங்கிவிடுமென்று நம்புகிறேன் இதற்கு இறைவன் திருவருள் செய்வார்.

பெ:—எனது அன்பரே, இமயமுதற் சேதுபரியந்தம் நம்மனோர் நிறைந்திருப்பதாகக் கேள்விப் பட்டேன். இவ்வளவு பேரும் ஒற்றுமைப் பட்டாலல்லவோ இக்குறைகளை நீக்க முடியும்.

பு:—பெண்மணி, இது மட்டிலுமல்ல இன்னும் கடலுக் கப்புரத்திலும் நம்மனோர் பரவியிருக்கின்றனர். இவர்களையெல்லாம் கல்வி அறிவு அன்பு ஆதாரமென்றுஞ் சுடர்மலியப் பெற்ற அறிஞர்கள் பலரால் சென்னையிலமைக்கப் பெற்ற தலை சங்கத்தார்களின் முயற்சியும், அம்முயற்சியால் விபவஸு தைமீ 7-8 தேதிகளில் ஈரோட்டில் கூடிய முதலாவது மகா நாட்டின் தீர்மானங்களும், அவ்விடம் நாட்டியுள்ள சேவற் புலிகளமைந்த கொடி மரமும், ஆனந்தக் கண்ணீர் ததும்ப நங்குல முன்னேற்றத்திற்காக 'என்னாயுள் பரியந்தம் உழைக்கத் தயாராய் இருக்கின்றே'னென்று அமுத வாக்கைப் பொழிந்து யாவருக்கும் குதூகலத்தை உண்டு பண்ணிய திருவாளர். ம. சண்முக சுந்திர முதலியார் எம். ஏ., எல். டி., அவர்களின் சத்திய மொழியும், மாதங்கள் தோறும் நம்மனோர் வீடுதேடி வரும் அழகிய கட்டுரைகளமைந்த மித்திரனும், ஆங்காங்கு பொதிந்துள்ள குற்றங் குறைகளை அப்போதைக் கப்போது நிவர்த்தி செய்து வரும் பிரசாரகர்களும் நாளுக்கு நாள் அதி தீவிரத்துடன் முன்னேற்றக் கிளர்ச்சியைச் செய்து வருவதால் நங்குலச் செங்குந்த மக்கள் அதிசீக்கிரம் ஒற்றுமையுண்டாகி அநாகரீகப் பழக்க வழக்கங்களை ஒழித்து நங்குல நாகரீக வொழுக்கத்தினைக் கைகொண்டொழுகுவர். பெண்மணி இது விஷயத்தில் நீ கொண்டிருக்கும் சந்தேகத்தை நிவர்த்தி செய்வாயாக.

பெ:—என் உயிர்க்குயிராகிய உத்தமரே இவ்வாக்கியத்தைக் கேட்ட என் மனம் சூரியனைக் கண்ட தாமரைக் கொப்பாய் விட்டது. இனி நாமிருவரும் இல்லற வாழ்க்கை நடத்தவேண்டிய நியமமும் அதினால் பெரும் பேற்றையும் உபதேசிக்க விரும்புகிறேன்.

பு:—என்னுயிற்குயிராகிய உத்தமி இப்போது கேட்ட கேள்வியானது யாவராலும் அங்கீகரிக்கப்பட்டவை யாதலால் செவியுறக்கேட்டு மகிழவிரும்கிறேன். அதாவது ஒரு குடும்பத்திற்குப் புருஷனே தலைவன்; அவனால் இடப்பட்ட கட்டளைகளுக்கு யாவரும் அடங்கி யிருத்தல் வேண்டும்; இல்லையேல் அக்குடும்பம் பலவித இன்னல்களால் வேறுபட்டு குலத்திற்கும் கோத்திரத்திற்கும் தொழிலிற்கும் சவுகரியத்திற்கும் இடர் படுத்தி இழிச்சொற்களுக்கும் ஆளாக்கிவிடும். ஆதலால் அப்புருஷர்களாயினோர் ஒவ்வொரு குடும்பத்திலும் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்பதை முதலாவது கூற விரும்புகின்றேன்.

(தொடரும்)



## அறிவியல் பகுதி

# THE STORY OF THE CINEMA

## சினிமாவின் கதை

[மாதர் போதினியில் கண்டது.]

### I. MAN'S LOVE OF DRAWING

### படம் எழுதுவதில் மனிதனுக்குள்ள ஆசை

மிகவும் அழகான படங்களைக் கண்டும், இன்பமான பாடல்களைக் கேட்டும் மகிழாத மனிதர்கள் கடின இருதயர்களாயிருப்பார்கள் என்பதற்குச் சந்தேகமே இல்லை. அழகு நிறைந்த எப்பொருளும் எந்நாளும் ஆனந்தம் கொடுக்கும். அழகிய படங்கள் என்றும் எல்லோருக்கும் ஆனந்தம் தருவனவாம்.

ஒரு சிறு குழந்தை இவ்வுலகில் தோன்றிச் சில நாட்களானவுடனே, தன் கண்முன் தோன்றுகின்ற பொருள்களைப் பார்க்கின்றது. அவ்வாறு பார்க்கின்ற பொருள்களை அது தன் உடலினாலும் முகக்குறிகளாலும் வெளியிடுகின்றது. இவ்வாறு ஜாடைகளினால் வெளியிடுகின்ற குழந்தை சில மாதங்கள் ஆனவுடனே தான் பார்க்கின்ற பொருள்களைப்பற்றித் தன் உள்ளத்தில் எழுகின்ற வார்த்தைகளால் வெளியிட முயலுகின்றது. ஒரு குழந்தை ஒரு கரியை எடுத்துச் சுவற்றிலே கிறுக்குகின்றது. அப்பொழுது அதனிடம் 'என்ன செய்கிறாய்?' என்றால், 'நான் நாய் எழுதுகிறேன்' என்று சொல்லும். நீங்கள் அது எழுகியிருக்கும் படத்தைப் பார்ப்பீர்களானால், தாறுமாறாகக் கீறியுள்ள கோடுகளையே காண்பீர்கள். ஆனால் குழந்தை உண்மையாகவே நாய் எழுத முயன்றிருக்கின்றது. மற்றொரு குழந்தை மண்ணை அணைவைத்து வளைத்து எழுப்புகிறது. அதனிடம், 'என்ன செய்கிறாய்' என்றால், அது நான் 'வீடு கட்டுகிறேன்' என்று சொல்லும். இப்படியே ஒவ்வொரு குழந்தையும் தான் பார்க்கிற பொருள்களைத் தன் கைகளின் மூலமாய் வெளியிட முயலுகின்றது. அவ்வாறு வெளியிட முயலுகின்ற குழந்தைகள் தாம் வெளியிட்ட காரியத்தைக் கண்டு மிகவும் அகமகிழ்கின்றன; சமீபத்தில் தாம் நேசிக்கின்ற பெற்றோராயினும் சகோதரர்களாயினும் நண்பர்களாயினும் இருக்கக்கண்டால் உடனே அவர்களைக் கூப்பிட்டு, 'இதோ பார்! என் நாயைப் பார்! நான் கட்டின வீட்டைப்பார்' என்று சொல்லும். குழந்தைகளுக்குத் தாம் வெளியிடுகின்ற காரியத்தைக் கண்டு தாமே மகிழ்வதோடு மற்றவர்கள் மெச்சுவதைக்கண்டும் அதிக சந்தோஷ மடையும்.

குழந்தைகளைப் போலவே மனிதனும் நாகரிக வாழ்க்கையில் சிறு குழந்தையாய் இருந்தபொழுது தான் கண்ட பொருள்களைத் தன் கைகளினால் வெளியிட முயன்றான். தன் கைகளின் வினையினால் தான் காணும் பொருள்களைப்பற்றி வெளியிடுதல் என்னும் குணம் மனிதனுக்கு இயல்பாய் அமைந்துள்ளது. இந்த இயற்கையான தன்மை மனிதனிடத்தில் இருப்பதினால்தான், மிகவும் பழமையான காலங்களில் மனிதன் காடுகளிலும் குகைகளிலும் வாழ்ந்தபோது தான் கண்ட பொருள்களைச் சித்திரங்களாக வரையலானான். எவ்வாறு ஒலிக்குறிகள் மனிதனுடைய உள்ளத்திலிருக்கின்ற உணர்ச்சிகளை வெளியிடுகின்றனவோ, அவ்வாறே படங்களும் மனிதனுடைய உணர்ச்சி அறிவையும் வெளியிடுகின்றன. ஒலிக்குறிகளை மனிதரின் பாஷை என்போமாயின், அவர்கள் வரைகின்ற சித்தாந்தங்களை அவ்வொலிக் குறிகளுக்கு வரிவடிவங்களையும்விட படங்களே கருத்துக்களை நன்றாய் வெளியிடுவனவாம்.

ஆதிகாலத்தில் மனிதர்கள் தாம் வேட்டையாடிய மிருகங்களையும் தாம் வாழ்ந்த காடுகளில் திரிந்த விலங்குகளையும் சித்திரங்களாக வரையலாயினர். முதன் முதலில் அப்படங்கள் சிறு குழந்தைகள் முதன் முதலில் எழுத முயலுகின்ற படங்களைப்போன்றே யிருந்தன. எனினும், நாளாக நாளாக, மனிதர்கள் சித்திரம் வரைவதில் தேர்ச்சி அடையலாயினர். அவர்கள் எலும்புத் துண்டுகளிலும் மிருகங்களின் கொம்புகளிலும் தாம் வாழ்ந்த குகைகளின் சுவர்களிலும விலங்குகளின் சித்திரங்களையும் மனிதர்களின் உருவங்களையும் எழுதலாயினர். அக்காலத்து மனிதர்கள் எழுதிய சில படங்கள் இங்கே காட்டப்பட்டிருக்கின்றன. அந்தப் படங்கள் எவ்வளவு நேர்த்தியாக அமைந்திருக்கின்றன என்று பாருங்கள். இப்படங்களை வரைந்தவர்கள் இவற்றை மிகவும் அருமையான செல்வமாகக் காப்பாற்றி வந்திருக்கவேண்டும் என்று நினைக்கிறேன். ஒரு குடும்பத்தாரின் தலைவனாவது ஒரு கூட்டத்தாரின் மூப்பனாவது தனது நட்பின் அறிகுறியாக அத்தகைய சித்திரங்கள் வரையப் பெற்ற எலும்புகளையும் கொம்புகளையும் வேறொரு குடும்பத்தின் தலைவனுக்காயினும் மூப்பனுக்காயினும் அனுப்பி

யிருக்க வேண்டுமென்று சிலர் கருதுகின்றனர். எனினும் வெகு விரைவில் அத்தகைய சித்திரங்களை மனிதர்கள் ஒருவருக்கொருவர் செய்தியனுப்ப உபயோகிக்கலாயினர். உதாரணமாக ஒரு தலைவன் மற்றொரு தலைவனை விருந்திற்கு அழைக்க வேண்டுமென்றால், அதற்கறிகுறியாக அவன் ஒரு மிருகத்தின் படத்தை ஒரு எலும்பில் எழுதி அனுப்புவான்: அவ்வாறு வரையப்பட்ட சித்திரம் போய்ச் சேர்கின்ற தலைவனுக்கு அந்த மிருகம் யுத்தத்திற்கு அறிகுறியாக இருக்குமானால் எவ்வளவு தீமை வந்துவிடும். அங்ஙனமாயின் அனுப்பப்படுகின்ற சித்திரங்களின் பொருள் யாவருக்கும் பொதுவாயிருக்கவேண்டும்.

மனிதன் முதன் முதலில் தான் பார்த்த பொருள்களைத் தன் கைகளின் வினையால் வெளியிட முயன்ற முயர்ச்சியாகிய படங்கள் முடிவில் அவனுடைய கருத்துக்களுக்கு அறிகுறிகளாயின. அவ்வறிகுறிகளாகிய படங்கள் மனிதனுடைய பாஷைக்கு வரிவடிவங்களாயின.

நாட்கள் பல செல்லவே, ஜாதியாரின் மூப்பர்கள் பெரிய இராஜ்ஜியங்களின் அரசர்களாயினர். அவ்வாறு முதன்மை பெற்ற அரசர்களைத் தமது வீரதீரச் செயல்களைக் கூறும் கதைகளை மனிதர்கள் காண பரம்பரையாகக் கேட்பதினால் திருப்தியடையவில்லை. ஏனென்றால் மனிதர்கள் தம் செயல்களை மறந்து விடுவார்கள் என்று அம்மன்னர்கள் அறிந்திருந்தனர். அன்றியும், தாம் மிகவும் சிறப்பான காரியங்கள் செய்திருக்கத் தம் பகைவர்கள் அவற்றை முற்றிலும் மாற்றித் தமது பெயரைக் கெடுக்கக் கூடிய வேறு கதைகளைக் கட்டி எழுப்பி மனிதர்களுக்குக் கற்பித்து விடுவார்கள் என்று நினைத்தனர். ஆகையால் அம்மன்னர்கள் தமது செயல்களைப் புத்தகங்களில் சேமித்து வைக்க முயலாது, கற்களிலும் பெரிய கோயிற் சுவர்களிலும் மாளிகைத் தூண்களிலும் சித்திரங்களாக வைக்கலாயினர்.

சித்திர அக்ஷரங்களை உபயோகித்தவர்கள் எகிப்தியர்கள். நாகரீகம் என்பது முதன் முதலில் எகிப்து தேசத்திலேதான் ஆரம்பித்திருக்க வேண்டுமென்று சிலர் கூறுகின்றனர். அந்நாட்டு மன்னர்கள் தமது கல்லறைகளின் சுவர்களையும் கோயிற் சுவர்களையும் அரண்மனைச் சுவர்களையும் பேப்ரி எனும் புல்லினால் செய்யப்படுகின்ற காகிதத்தினால் ஆன புத்தகங்களையும் அறிகுறித்தன்மையான சித்திராக்ஷரங்களாலும் சிறந்த விவரணப் படங்களாலும் நிறைத்து வைத்திருக்கின்றனர். இச்சித்திராக்ஷரங்களின் மூலமாகவும் பல வர்ணம் தீட்டப்பெற்ற ஓவியங்கள் மூலமாகவும் அம்மன்னர்கள் தம்மையும் தமது நாட்டாரையும் தாம் செய்த காரியங்களையும் குறித்து உலகத்திற்கு அறிவிக்கிறார்கள்.

வேறு சில நாடுகளில் வாழ்ந்த மன்னர்கள் தமது செயல்களைக் கற்களிற் செதுக்கிக் காட்டுகிறார்கள். இங்ஙனம் ஆதி காலத்தவர்கள் ஓவியங்களிலும் சிற்பத்தொழிலிலும் பெரிதும் மகிழ்ச்சி கொண்டனர். ஏனெனில், ஓவியங்களை எழுதி பார்த்து மகிழ்வதும் மற்றவர்களைத் தாம் எழுதிய ஓவியங்களால் மகிழச் செய்வதும் மனித சுபாவமேயாம்.

நாகரீகத்தில் ஓங்கி வளர்ந்த எல்லா நாடுகளிலும் ஓவியக்காரர்கள் அந்நாடுகளில வாழ்ந்த குடிகளின் வாழ்க்கையைப் பெரிதும் இன்பகரமாக்கி வந்தனர் என்பதற்குச் சற்றும் சந்தேகமின்று. நமது நாட்டில் புகழ்பெற்ற அஜந்தக் குகைகளில் காணப்படுகின்ற அற்புதமான ஓவியங்கள் அக்காலத்து மாந்தருக்குப் பெருங் களிப்பை அளித்திருக்கும் என்பதிற் சந்தேகமில்லை.

அவ்வாறே கிரீக், ரோம், இத்தலி, வேனிஸ், பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய நாடுகளில் தோன்றிய எண்ணிறந்த ஓவியக்காரர்கள் எழுதிய ஓவியங்கள் மாந்தர் உள்ளத்தை மருட்டும் தன்மையன. ஒவ்வொரு காலத்திலும் தோன்றிய ஓவியக்காரர்களுடைய வேலையில் தனிப்படையான குண விசேஷங்களைப் பார்க்கலாம். ஓவியக்காரர்கள் தாம் வாழ்ந்த காலத்து ஜனங்களின் கொள்கைப்படி ஓவியங்கள் எழுதலாயினர். தீய்மை வாய்ந்த லியோனுடோ டாவின்வி (Lionardo Da Vinci) மைக்கேல் அஞ்சலோ (Michael Angelo) ராபேல் (Raphael) முதலான ஓவியக்காரர்களின் ஓவியங்கள் மனிதரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் தன்மையன. எனினும் அவர்கள் ஒவ்வொருவருடைய ஓவியங்களிலும் தனிப்படையான வேலைப்பாடுகள் அமைந்து துலங்குகின்றன.

சில ஓவியக்காரர்கள் தாம் எழுதிய ஓவியங்களில் அமைந்த மனிதர்களின் நிஜமான தன்மைகளை மறைத்துக் காட்டலாயினர். இத்தகைய ஓவியக்காரர்களுள் வான் டைக் (Van Dyke) என்பான் முதன்மை பெறுவான். மனிதரையும் இயற்கைக்குச் சற்றும் விரோதமில்லாதவாறு எழுதத்தலைப்பட்டனர். ரெயினல்ஸ் (Reynolds) மூரில்லோ (Murillo) டர்னர் (Turner) முதலான சித்திரக்காரர்கள் இவ்வகுப்பினைப் சார்ந்தவர்கள்.

இவ்வாறு ஓவியங்கள் நாளுக்குநாள் இயற்கைக்கு உண்மையான தன்மையைப் பெறலாயின. ஓவியம் வரைதலின் வளர்ச்சி இவ்வாறு ஓங்கி வருங் காலத்தில் இக்கலையைச் சிதைக்கவும் இயற்கையை உள்ளபடி காட்டவும் பூத பௌதிக இரசாயன சாஸ்திர முறையிற் றோன்றிய படம் பிடித்தல் என்னும் முறை வெளிப்பட்டது. இந்த முறையை பொட்டாக்ரபி (Photography) என்று ஆங்கிலத்தில் கூறுவர். நாம் இந்தக் கலையை ஒரு புதுப் பெயரால் அழைக்க வேண்டும். ஏனென்றால் படம் பிடித்தல் என்பது ஆங்கில வார்த்தையின் கருத்தை நமக்குச் சரியாய் விளக்கவில்லை. ஆகையால் நாம் இதனை ஒளி ஓவிய முறை என்று கூறுவோம்.

## II. THE HISTORY OF PHOTOGRAPPY

### ஒளி ஓவிய ஞானத்தின் சரிதை

எண்ணிறந்த வாண்டுகட்கு முன்னரே மனிதன் சூரியனுடைய கிரணங்கள் தன் உடலின் மறைபடாத பாகங்களை நேராகத் தாக்கும் பொழுது அப்பாகங்களை எவ்வாறு தவிட்டு நிறமாக்கி விடுகின்றன என்பதைக் கவனித்திருப்பான். நாளடைவில் அவன் சூரியனது கிரணங்களுக்குப் பொருள்களை வெண்மையாக்கும் தன்மை உண்டென வறிந்து, சூரிய கிரணத்தினால் தான் நெய்த துணிகளைச் சலவை செய்யப் பழகினான். அன்றியும் அவன், இளவேனிற் காலத்திலும் முதிர் வேனிற் காலத்திலும், மரங்களில் தளிர் இலைகளைத் தோற்றுவிக்கிற சூரியனுடைய வல்லமைகளையும் உணரலாயினன்.

வெகு காலத்திற்கு முன்னிருந்த ஜனங்கள் பொன்மீது பேரவாக் கொண்டு பொன்னை அதிகமாகத் தேட முயன்றனர். மனிதரின் ஆசையளவாக உலகிற் பொன் கிடைக்கவில்லை. சிலர் கீழான இரும்பு, வெள்ளி, செம்பு, பித்தளை முதலிய உலோகங்களைப் பொன்னாக்க ஒரு மாயவழியுண்டெனக் கருதி அதற்காக நெடுங்காலமாய்ப் பாடுபடலாயினர். அதன் பொருட்டுப் பல விநோதமான மருந்துகளையும் பச்சிலைகளையும் இரசங்களையும் சேகரிக்க நாடி ஓடினர். மறைவிடங்களில் ஒதுங்கியிருந்து அம்மருந்துகள் மூலமாக பல எளிய உலோகங்களைப் பொன்னாக்க ஓயாமல் முயன்று கொண்டிருந்தனர். இவர் கையாடிய ஞானம் இரசவாதம் என வழங்கலாயிற்று. இத்தகைய இரசவாதிகள் நமது நாட்டிலும் மேல் நாடுகளிலும் பெருகி ஓங்கினர்.

மேனாடுகளிற் றோன்றிய இரசவாதம், வெகு விரைவில் தான் கொண்ட பொன் உண்டு பண்ணுதல் எனும் நோக்கத்தை தவிர்த்து, உப்புக்கள், திராவகங்கள், மூலப் பொருள்கள், இரசங்கள், தாதுக்கள், சரக்குகள் முதலிய பல பொருள்களின் தன்மைகளை ஆராய்வதே முக்கிய நோக்கமாகக் கொண்டு, இரசாயனம் எனும் புதிய கலை வழியிற் புகுந்தது. இரசவாதம் இரசாயனமாக மாறினபொழுது, இரசாயன சாஸ்திரிகள் பலவகையான ரசாயனக் கலப்புத் திரவியங்களில் (Chemical Compounds) சூரியனது ஒளி படுதலினால் ஏற்படும் செயல்களை ஆராயத் தலைப்பட்டனர். அச்செயல்களிற் பல மிகவும் விந்தையாயும் படிக்க வெகு இரசமாயுமிருப்பன. உதாரணமாக, மஞ்சளும் பசுமையுமாகிய கெட்ட வாசனையில்லாத ஒரு வகை வாயுவாகிய பசியவாயுவையும் (க்லோரைன் Chlorine) ஜலவாயுவையும் (ஹைட்ரொஜன், Hydrogen) ஒரு பரிசோதனைக் குழாயில் (Test Tube) சரிபாகமாக ஒரு இருட்டான அறையிலிருந்து கொண்டு கலந்து மூடி அங்கேயே வைத்து விட்டால் அவை எவ்வித மாறுதலுமின்றி அவ்வாறே யிருக்கும். ஆனால் அந்தப் பரிசோதனைக் குழாயை அவ்வண்ணமே எடுத்துச் சூரியனுடைய கிரணத்திற்கெதிராகக் காட்டினால் உடனே அந்தக் கண்ணாடிக்குழாய் வெடித்துச் சுக்கல் சுக்கலாய் சிதறிப்போகும். குழாய் வெடிக்கும் பொழுது பெரிய வெடி ஓசையும் கேட்கும். அவ்வண்ணமே சூரியனுடைய ஒளி பலவிதமான வெள்ளிக் கலப்புத் திரவியங்களிலும் (Compounds of Silver) வெகு பலமாக வேலை செய்கின்றது. உதாரணமாக,

ஈரக் கசிவுடைய க்லோரைட் ஆப் ஸில்வர் (Chloride of Silver) எனும் மருந்திற் கொஞ்சம் எடுத்துக் கொள்ளுங்கள். அது இருட்டான ஓர் அறையில் இருக்குமட்டும் வெண்மையாகவே காணப்படுகின்றது. ஆனால், அதைச் சூரியனுடைய வெயிலில் காட்டிய வுடனே அது ஊதாநிறமாக (Violet) மாறி வெகு விரைவில் கறுப்பாகி விடுகின்றது.

ஆதலால் 1801-ம் வருஷம் ஸர் ஹம்பிரி டேவி (Sir Humphry Davy) என்பவரும் தாமஸ் வேட்ஜவுட் (Thomas Wedgwood) என்பவரும் சில பொருள்களின் வடிவங்களை நகல் எடுக்கக் காடிக்காரம் (நைட்ரேட் ஆப் ஸில்வர் Nitrate of Silver) எனும் காரத்தை உபயோகித்தனர். அவர்கள் காடிக்காரத்தில் தோய்ந்த ஒரு காகிதத்தில் தமக்கு நகல் தேவையான பொருளின் நிழலை விழச் செய்தனர். அப்பொழுது சூரியனுடைய வெளிச்சம் நேராய் விழுகின்ற இடங்கள் கறுத்தும் சூரியனுடைய கிரணங்கள் மறை பட்டிருந்த இடங்கள் வெளுத்துமிருந்தன. ஆனால், காகிதத்தில் விழுந்த வடிவத்தை பதிக்க அல்லது நிலை நிறுத்தும் முறை (Fixing) டேவிக்குத் தெரியவில்லை. ஆகையால் அவருடைய வேலையை நாம் ஒளி ஓவிய ஞானம் என்று கூற முடியாது. ஆயினும், காகிதத்தில் விழுந்த வடிவத்தைப் பதிக்க ஏதாவது ஒரு முறை கையாடுவது அவசியமென்று அவர் உணர்ந்திருந்தார்.

நீங்கள் என்னிடம் ஒளி ஓவிய ஞானத்தைக் கண்டு பிடித்தவன் பிரான்சு தேசத்தானாகிய லூயிஸ் டகுரே (Louis Daguerre) அல்லவோ? என்று கேட்பீர்கள். நவீன காலத்து ஒளி ஓவியங்களைப் போன்றதொரு ஓவியத்தை முதன் முதலில் ஒளி ஓவியம் செய்தவன் பிரான்சு தேசத்தில் மத்திய பாகத்தில் ஸவோன் (Saone) நதிக்கரையில் உள்ள சேலான் (Chalon) என்னும் ஊரில் வாழ்ந்திருந்த ஜோஸப் நீப்ஸி (Joseph Niepce) என்பவனேயாம். ஜோஸபின் சகோதரனும் அவனுடைய வேலை மிகவும் உதவியாய் இருந்தனன். இரு சகோதரர்களுக்கும் போதிய சாஸ்திர அறிவு இருந்தது. ஜோஸபுக்குப் போதுமான பூஸ்திதிகள் இருந்ததினால் ஆராய்ச்சிகள் செய்வதற்குத் தேவையான ஓய்வு சமயமிருந்தது. 1806-ம் வருஷம் ஜோஸப் உஷ்ண வாயுவினால் ஓடக் கூடிய ஒரு ரயில் யந்திரத்தை நிருமித்தான். அவனுடைய நிருமாணத்தைக் குறித்துப் பிரான்சு கழகத்தில் (French Institute) அறிக்கை செய்யப்பட்டது.

இவ்விரு சகோதரர்கள் வாழ்ந்த காலத்தில் முதன் முதலில் பிரான்சு தேசத்தில் கல்மேலெழுது முறை லித்தோக்ரபி (Lithography)

பரவலாயிற்று. கல்மேலெழுது முறை 1796-ம் வருஷம் அலாய்ஸ் ஸெனிபெல்டர் (Aloys Senefelder கண்டுபிடித்தான். அவன் அந்த முறையை 1800-ம் வருஷம் தனக்கு உரிமைப் பதிவு செய்து கொண்டனன் கல்மேலெழுதும் முறையாகிய கல்லச் சுவித்தை வெகு விரைவில் எங்கும் பரவலாயிற்று. அந்த முறையாக மிகவும் அழகான வர்ணப்படங்களின் நகல்களை எடுக்க முடிந்தது. அப்பொழுது பலர் கல்லச் சுக்கு உகந்த கற்களைத் தேடலாயினர். ஜோஸப்பும் கல்லச்சுக்கு ஏற்ற கல் எவை என்று ஆராயத் தலைப்பட்டான். அவன் முதலிற் சில கற்களைத் தெரிந்து அவை பயன்படும் எனக் கருதி உபயோகித்துப் பார்த்தான். ஆனால் அவை பயன் படாமை கண்டு அவற்றை எறிந்து விட்டான். அப்பொழுது, அவனுக்கு ஒரு யோசனை புலப்பட்டது. அவன் நன்றாய் மெருகிடப்பட்ட ஒரு உருக்குத் தகடைக் கல்லுக்குப் பதிலாக உபயோகிக்கலாம் என்று நினைத்தான். உடனே அது விஷயமாகப் பரீக்ஷைகள் செய்ய வாரம்பித்தான்.

ஒரு நாள் அவன் இப் பரீக்ஷைகளைக் கண்ணுங் கருத்துமாய்ச் செய்து கொண்டிருந்த பொழுது, அவன் தான் மெருகிட்ட உருக்குத் தகட்டின் மேல் குனிந்து பார்த்துக் கொண்டிருந்தான். அப்பொழுது கதவு வழியாக சூரியனுடைய கிரணம் அவன் முகத்திற் படவே அவனுடைய முகத்தின் தெளிந்த உருவம் மெருகிடப்பட்ட தகட்டில் பிரதிபலித்துத் தோன்றியது. அதைக் கண்ணுற்ற ஜோஸப் 'நான் இந்தப் பிரதி பிம்பத்தை மட்டும் நிலையாக இத்தகட்டிலேயே நிறுத்த முடியுமானால் மிகவும் அற்புதமான ஒரு நிருமாணம் செய்தவனாவேன்' என்று சொல்லிக் கொண்டான்.

அப்பொழுது ஜோஸபுக்கு டேவியும் வெட்ஜ்வுட்டும் செய்த பரீக்ஷையைக் குறித்து ஒன்றுமே தெரியாதிருந்தது. ஆதலால் அவன் தான் செய்யக் கருதிய ஆராய்ச்சி நெறியில் ஏற்பட விருந்த கஷ்டங்களைச் சிறிதும் உணர்ந்திலன். ஆயினும் அந்நாள் முதல் அவன் தான் நினைத்த காரியத்தை எவ்வாறாயினும் செய்து முடிக்க வேண்டுமென ஊக்கம் கொண்டனன். இன்று தான் உண்டு பண்ணின கலப்புத் திரவியங்களில் மறுநாள் உதிக்கும் சூரியனுடைய ஒளி எவ்வித மாறுபாடேனும் விளைவிக்குமோ என்பவே அவனுடைய தினசரிக் கவலையாயிருந்தது.

சில நாட்கள் சென்றதும் அவன் சிலாசத்து (Bitumen of Judea) எனும் ஒரு வகைப் பொருளைக் குறித்துக் கேள்வி யுற்றான். அது குங்கிலியத் தன்மையான ஒரு வகைக் கரிய பொருள். அதனை வெய்யிலில் காட்டும் பொழுது அது விரைவில் வெண்மையாக மாறிவிடும். இப்பொருளைக் குறித்தறிவதன் முன்னரே அவன் வெள்ளிக் கலப்புத் திரவியங்கள் சூரியனுடைய ஒளியினால் கருமையாகிவிடும் என்பதை அறிந்திருந்தான். இவ்விரு பொருள்களின் அறிவை ஆதாரமாகக் கொண்டு, அவன் விநோதமான ஒரு முறையில் எடுக்கலானான். அப்படங்களின் மறு பக்கத்தில் மெருகெண்ணெய் (Varnish) பூசி அக்காகிதத்தை ஒளியூடுருவச் செய்தான். மெருகிட்ட ஒரு உருக்குத் தகட்டில் சிலாசத்தைப் பூசினான். பின்னர், தன் படத்தை அத்தகட்டின்மேல் வைத்தான்; படத்தோடு கூடிய தகட்டை வெய்யிலிலே வைத்தான். அப்பொழுது சூரியனுடைய ஒளி காகிதத்தில் ஒளியூடுருவக்கூடிய இடங்கள் வழியாகத் தகட்டில் பூசியிருந்த சிலாசத்தை வெண்ணிறமாக மாற்றியது. காகிதத்தில் கறுப்பான கோடுகளும் வடிவங்களும், தகட்டில் அல்வாறே பதிந்திருந்தன. இவ்வாறாக ஜோஸப் ஒரு படத்தின் நகலை இருளும் ஒளியும் தத்தமியல்பான நிலையில் அமைய உருக்குத் தகட்டில் படம் பிடித்தான். இதன் பின்னர் ஜோஸப் உருக்குத் தகட்டில் கிடைத்த நகல் சூரியனது ஒளியால் வெளுத்துப் போகாதபடியிருக்குமாறு அத்தகட்டை பரிமள நீரால் (Lavender) செய்யப் பெற்ற ஒரு திராவகத்தில் மூழ்க வைத்தனன். பின்பு எடுத்து நோக்கியபொழுது கிடைத்த படம் சூரிய கிரணத்தினால் மங்காமல் நிலைத்திருக்கலாயிற்று. சூரியனுடைய ஒளியினால் கிடைத்த முதற்படம் அதுவேயாம்.

அந்நாட்களில் திமிரக்கூட யந்திரம்[1] காமரா (Camera Obscura) என்றொரு வகையான கருவியிருந்தது. அது சிறிய உருவைக்கொண்டு சரியான விம்பத்தைக் காட்டும் யந்திரமாம். ஜோஸப் தன் முதல் நிருமாணத்திற்குப் பிறகு திமிரக்கூட யந்திரத்தினின்று பெறப்படும் ரூபங்களைப் பதிப்பதற்கு ஏதாயினும் வழியுண்டாவென பத்து வருஷ காலமாகப் பல ஆராய்ச்சிகள் செய்து வந்தான். இதற்கு அவன் மெருகிட்ட பித்தளைத் தகட்டில் சிலாசத்தைப் பூசி அதன்மேல் வெள்ளிக் கலப்புத் திரவியத்தைத் தடவலாயினன். ஆனால், சிலாசத்தில் சூரியனது ஒளி தாக்கப் பத்துமணி நேரமாயிற்று. பத்துமணி நேரத்திற்குப் பிறகுதான் அதில் ஏதாவது ஒரு பொருளின் வடிவம் அமையும். பத்துமணிநேரம் சூரியனுடைய ஒளியை நேராகத் தகட்டில் படும்படிச் செய்வது முற்றிலும் முடியாத காரியம் எனலாம். ஏனென்றால், சூரியன் எப்பொழுதும் ஒரே நிலையில் இருப்பதில்லை. அன்றியும் சூரியனுடைய ஒளியை மேகங்கள் சிற்சில சமயங்களில் மறைத்துவிடக்கூடும். எனினும் அவன் 1824-ம் வருஷம் நிஜமான ஒலி ஓவியமொன்றைச் செய்தனன். அவன் அதை ஹீலியோகிராப் (Heliographs) என்று கூறலாயினன். அந்நாட்களில் ஏற்பட்டிருந்த அற்பமான சாஸ்திர ஞானத்தைக் கொண்டும் கருவிகளைக் கொண்டும் அவன் முயன்று கண்டு பிடித்த முடிவான படங்கள் இந்நாட்களில் எடுக்கப்படுகின்ற படங்களைப் போன்றனவல்ல; ஆயினும் அவை உண்மையாகவே மெச்சத் தகுந்தனவாயிருந்தன.

ஜோஸப் வாழ்ந்த காலத்திலேதான் லூயிஸ் டகுரே என்பானும் இருந்தான். ஆனால் ஜோஸப்

1 Camera Obscura, திமிரக்கூட யந்திரம்.



புக்கு லூயிஸ் டகுரே செய்துவந்த வேலையைப் பற்றி ஒன்றுமே தெரியாது. டகுரே இயற்கைக் காட்சிகளை ஓவியங்களாக எழுதுபவன். அவன் ஒளியினால் தான் எழுதிய ஓவியங்களை அழகுறச் செய்து காட்டும் முறையைக் கண்டு பிடித்தவனாகையால் அவன் பெரும் புகழடைந்திருந்தான். அவன் கையாடிய முறையை டயோராமா (Diorama)[2] என்பவர். தான் எழுதிய ஓவியங்களில் ஒளியையும் நிழலையும் நிறங்களுக்குப் பொருத்தமானவாறு அமைப்பதற்கு அவன் செய்து வந்த ஆராய்ச்சியினால் அவன் திமிரக்கூட யந்திரத்தின் மூலமாய்ப் பெறப்படுகின்ற அழகிய வடிவங்களைப் பதிப்பிக்க ஏதாவது வழியுண்டா என்று ஆராயத் தலைப்பட்டனன்.

1827-ம் வருஷம் டகுரே திமிரக்கூட யந்திரத்தின் மூலமாய்ப் பெறப்படுகின்ற வடிவத்தைப் பதிப்பிக்கும் முறையை ஒரு குக்கிராமத்திலிருந்து குடியானவன் ஒருவன் கண்டுபிடித்திருக்கிறான் என்று கேள்வி பட்டனன். உடனே அவனைப் பார்க்கச் சென்றனன். குடியானவனாகிய ஜோஸப் முதன் முதலில் டகுரேயினிடம் தன் இரகசியங்களை யெல்லாம் வெளியிட மறுத்தனனாயினும், முடிவில் அவனிடம் கனிவாசப் பேசினன். அவ்விருவரும் ஒளி ஓவிய நிருமாணத்தில் பங்காளிகளாயினர். ஜோஸப் உபயோகித்து வந்த சிலாசத்திற்குப் பதிலாக டகுரே லவண்டரிலிருந்து வடிப்புமுறையாக (Distillation) எடுக்கப்பெற்ற குங்கிலியத்தன்மையான ஒரு பொருளை உபயோகிக்கலாயினன். அவன் படம்பிடித்த தகட்டை லவட்டரில் தோய்ப்பதற்குப் பதிலாக அதை லவண்டரிலிருந்து எழுகின்ற ஆவியில் காட்டலானான். இந்த முறையாக சிறிது விரைவில் படம்பிடிக்க முடிந்தது. எனினும் அவ்வாறு படம்பிடிக்க ஏழுமணி நேரமாயிற்று.

இங்ஙனமிருக்கையில், நிருமாணிகளுக்குப் பாக்கியமான சில உண்மைகள் தற்செயலாக நேரிடுவது இயல்பாதலால், அவ்வண்ணமே ஜோஸபுக்கும் நேரிட்டது. ஜோஸப் டகுரேயோடு பங்காளியானதற்கு முன், தன் தகடுகளை (Plates)த் திடப்படுத்த (strengthen) அவற்றைக் கந்தகமும் சாதாளைத் திராவகமும் (Sulphur and Iodine ஸல்பரும் ஐயோடினும்) கலந்த கலப்புத் (திராவகத்தினின்று எழுந்த ஆவி பிடித்தனன். ஒரு நாள் சாதாளை வெள்ளிக் கலப்புத் திரவியப் பூச்சுடைய தகட்டின் மேல் (Iodized Silver Plate) ஒரு கரண்டியைத் தற்செயலாக வைத்துவிட்டுப் போய்விட்டான். அப்பொழுது சூரிய ஒளி படவே தகட்டில் கரண்டியின் தெளிவான வடிவம் படிந்திருக்கக் கண்டனன். உடனே ஜோஸப் அதுகாறும் தான் உபயோகித்து வந்த குங்கிலியத்தன்மையான பொருள்களுக்குப் பதிலாக வெள்ளிக் கலப்புத் திரவியம் பூசப்பெற்ற தகட்டில் சதாளைத் திராவகத்தின் ஆவியைப் பிடிப்பதினால், அந்தத் தகடு சூரியனது ஒளியை வெகு விரைவில் உணரும் தன்மை பெறும் என்று கண்டனன். இந்த நூதன அறிவினால் சூரியனது ஒளியினால் படம் பிடிக்கும் முறையில் இரண்டாவது முன்னேற்றம் ஏற்பட்டது. இதனால் வெளியிலுள்ள பொருள்களைப் படம் பிடிக்கத் தகட்டை மூன்று நிமிஷங்கள் ஒளிப்படுத்தினால் (Exposure) போதும். உள்ளுள்ள பொருள்களை அரைமணி நேரத்தில் படம் பிடித்துவிடலாம்.

ஜோஸப் நிப்வி 1833-ம் வருஷம் அவனுடைய 63-ம் வயதில் காலமடைந்தனன். மரணமட்டும் உலகப் பிரசித்தி யடையாது பரம ஏழையாகவே இருந்தான். அவன் தன்னால் பூர்த்திசெய்ய முடியாத ஒரு நிருமாணத்தின் பொருட்டுத் தன் முழு ஆயுளையும் தன் முழுச் செல்வத்தையும் செலவிட்டான். இவ்வாறு தன்னை வெறுத்து முயன்ற இந்த நிருமாணிக்கு நாம் செய்யும் கடமை யொன்றுள்ளது. ஒளி ஓவிய நிருமாணத்தை நியமிக்க முயன்றவர்களுள் அவனே முதன்மையானவன் என்றறிந்து எல்லாச் சிறப்புக்களையும் அவனுக்கே உரிமையாக்குதல் நலமாம்.

இதன் பின்னர் டகுரே தனியனாய் ஜோஸப் தொடங்கிய வேலையைச் செய்யலாயினன். அவன் சூரியனுடைய ஒளியினால் வெகு சீக்கிரம் படம் எடுக்க வழி கண்டனன்; ஆயினும் எடுக்கப்பட்ட படங்கள் மங்கலாயிருந்தன. அன்றியும் படங்களை ஏற்றவாறு பதிக்க ஏற்ற முறைகளை அவன் அறிந்திலன். இங்ஙனமிருக்கையில் தற்செயலாக ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஒரு நாள் மாலையில் டகுரே சூரியனது ஒளிப்படுத்திய சாதாளை வெள்ளிக் கலப்புத் திரவியம் பூசப்பெற்ற தகட்டை தன் அலமாரியில் வைத்திருந்தனன். மறுநாள் காலையில் அந்தத் தகட்டில் ஒரு படம் தானாகவே படிந்திருப்பதைக் கண்டனன். இந்நிகழ்ச்சி அவனுக்குச் சொல்ல முடியாத வியப்பை யளித்தது. மறுநாள் அவன் வேறொரு தகட்டை ஒளிப்படுத்தி மாலையில் அதையும் அதே அலமாரியில் வைத்தான். மறுநாள் காலையிலும் அதிலிருந்த படம் பதிந்திருக்கக் கண்டான். இஃது எவ்வாறு எங்ஙனம் நிகழ்ந்தது என்பதை டகுரே அறிய முடியவில்லை. உடனே அவன் அதை அறிய முயன்றான். அந்த அலமாரியில் பலவிதமான மருந்துகள் இருந்தன. என்று கூறினேன் அன்றோ? இத்தகைய அற்புதத்திற்கு அந்த அலமாரியில் இருந்த இரசத்தின் ஆவிதான் (Vapour of Mercury) காரணம் என்று கருதினான். உடனே அவன் ஒரு தகட்டை ஒளிப்படுத்தியபின் அதை சூடாக்கிய இரசம் நிறைந்த பாத்திரத்தின் வாயில் வைத்து ஒரு இருட்டறையில் இருக்கச் செய்தான். அப்பொழுது அந்தத் தகடு தானாகவே பதிந்தது. இதற்குப் பின் சில நாட்கள் சென்றதும் அவன் தகட்டில் படிகிற வடிவத்தைப் பதிக்கத் தகட்டை ஸோடியம் தியோஸல்பேட் (Sodium Theosulphate) என்ற உப்பை ஜலத்தில் கரைத்து அதில் கழுவினால் தகட்டிலுள்ள வடிவம் நன்றாய்ப் பதியும் என்று கண்ட

2 டயோராமா.

ஞன். ஸோடியம் தியோஸல்பேட் எனும் மருந்தே ஒளி ஓவியத்தை விரும்பிச் செய்வோரும் நன்கறிந்த ஹைப்போ (Hypo) என்னும் மருந்தாம்.

இதன் பின்னர் டகுரே தன் தொழிலை மேலும் அபிவிருத்தி செய்ய ஒரு கம்பெனி ஸ்தாபிக்க வேண்டுமெனக் கருதினன். ஆனால் அது கைகூடவில்லை. சூரியனுடைய ஒளியால் தகடுகளை வெகு நேரம் வைக்கவேண்டியிருந்தமையாலும், சூரியனது ஒளியால் படம் செய்வதற்கு அதிகப் பணச் செலவானமையாலும் அதை வியாபாரத்திற்கு ஏற்றபடி செய்வது இயலாதிருந்தது. எனினும் பிரான்சு தேசத்தார் அவன் செய்த ஊழியத்தை அறிந்து அவனுக்கு வருஷந் தோறும் 6000 பிரான்க்ஸ் நன்கொடையாக வழங்கினர்.

மின்சார சாஸ்திரியாகிய சாமுவேல் மார்ஸ் என்பான் ஒளி ஓவிய முறையை டகுரேயினிடமிருந்து கற்றுக்கொள்ள நேர்ந்தது. அவன் 1840 ம் வருஷம் அமெரிக்காவிற்குப் பிரான்க்ஸ் சென்றதும், அமெரிக்கா கண்டத்தில் முதன் முதல் ஒரு ஒளி ஓவியம் செய்து காட்டினன்.

இங்ஙனமிருக்கையில் இங்கிலாந்து தேசத்தில் வில்லியம் ஹென்றி பாக்ஸ் டால்பாட் (William Henry Fox Talbot) என்பான் பற்பல ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருந்தனன். அவன் 1839-ம் வருஷம், அதாவது ஆராய்ச்சிகளை வெளியிடுவதற்கு ஆறுமாதங்கட்கு முன்னர், ராயல் ஸொஸைற்றியாருக்கு முன்பாக 'ஒளி வழியாகப் படம் வரைதல் எனும் புதிய கலை' (A New Art of Photographic Drawing) எனும் விஷயமாக ஒரு வியாசம் எழுதி வாசித்தான். அவன் அந்த வியாசத்தில் கூறியிருந்த முறையாவது:—ஒரு காகிதத்தை உவர் நீரில் (Brine) தோய்த்து உலர்த்தியபின் அதைக் காடிக்காரத்தில் (Nitrate of Silver) தோய்த்து, காடிக்காரத்தின் ஒரு பாகத்தை க்லோரைடாத (Chloride) மாறும்படி செய்ய வேண்டும். இவ்வாறு ஆயத்தம் செய்யப்பெற்ற காகிதம் சூரியனது ஒளியை வெகு தீவிரமாக உணரும் தன்மை பெறுகின்றது. அத்தகைய காகிதத்தின்மேல் ஏதாவது ஒரு மரத்தின் அல்லது செடியின் இலையை வைத்துக் காகிதத்தின்கீழ் ஒரு கண்ணாடியும், இலையின்மேல் ஒரு கண்ணாடியும் வைத்து, கண்ணாடியின் நான்கு மூலைகளையும், மூலைக் கட்டுக்களினால் (Clips) கண்ணாடிகள் அசையாமல் பொருத்திச் சூரியனுடைய ஒளி இலையின் மேல் நன்றாய் விழும்படி வெய்யிலில் வைத்தால் இலையைச் சூழவுள்ள காகிதம் வெகு விரைவில் கருத்துப் போகும். ஆனால் மறைக்கப்பெற்ற பாகம் கருக்காமல் இருக்கும் எனினும் இலையின் யின் நரம்புகள் வெண்மையாயும் மற்ற பாகங்கள் சிறிது சாம்பல் வண்ணமாயும் மாறும். இவ்வாறு அந்த இலையின் வடிவம் காகிதத்தில் தெளிந்து விழும். பின்பு அதை ஹைப்போ எனும் மருந்தில் தோய்த்தாற் போதுமானது என்பதே. * டால்பாட்டே முதன்முதலில் ஸ்வபாவரூபம் (Positive) பிரதிபால்ரூபம் (Negative) எனும் சொற்களை ஒளி ஓவிய ஞானத்தில் முதன்முறை வழங்கியவனாவான். அச்சொற்கள் இன்னும் ஒளி ஓவியக் கலையில் வழங்கிவருகின்றன. 1841-ம் வருஷம் அவன் முன்னினும் திருந்திய ஒளி ஒவிய முறையொன்றைக் கண்டுபிடித்தனன். அவன் அதை காலோடைப் (Calotype) முறை என்று வழங்கினன். இம்முறையாக, அவன் காகிதத் தகட்டை உருக்கிய மெழுகிற் தோய்த்து ஒளி ஊடுருவச் செய்தனன். இவ்வாறு செய்யப்பட்ட தகட்டை ஒளியுணர் காகிதத்திற்கு (Sensitized Paper) முன் வைத்தபின், இலையின் படத்தை எடுக்கக் கண்ணாடிகளை அமைத்த முறைப்படியே கண்ணாடிகளின் இடையில் ஒளி யூடுருவும் தகட்டையும் ஒளியுணர் காகிதத்தையும் அமைத்து வெய்யிலில் வைத்தால், ஒளி யூடுருவும் தகட்டில் உள்ள படம் ஒளியுணர் காகிதத்தில் அச்சாகும். ஒளி யூடுருவும் தகட்டில் உள்ள படத்தைப் பிரதிபாவரூபம் (Negative) என்றும் ஒளியுணர் காகிதத்தில் அச்சடிக்கப்பட்ட படத்தை ஸ்பாவரூபம் (Positive) என்றும் வழங்கலாயினன். இவ்வாறு டால்பாட் ஒரு பிரதிபாவரூபத் தகட்டிலிருந்து பல ஸ்பாவரூபமான படங்கள் எடுக்கும் முறையை முதன்முதலில் கண்டுபிடித்தான்.

1847-ம் வருஷத்தில் ஒளி யூடுருவும் தன்மையுடைய காகிதத் தகட்டிற்குப் பதிலாக கண்ணாடித் தகடுகளை உபயோகிக்கும் முறை ஏற்பட்டது. நீப்ஸி டி ஸேன்ட் விக்டர் என்பான் ஒரு கண்ணாடித் தகட்டை முட்டையின் வெள்ளை கருவும், சாதாளைச் சத்தும் (Iodide) பொட்டாஷியம் ப்ரோமைடும் (Potassium Bromide), வீட்டு உப்பும் (Common Salt) கலந்த கலப்பினால் பூசினன். இவ்வாறு ஆயத்தம் செய்யப்பெற்ற கண்ணாடித் தகட்டை ஒளிப்படுத்துமுன் காடிக்காரத்தில் (Nitrate of Silver) தோய்த்தனன். அப்பொழுது அது மிகவும் ஒளியுணர் தன்மைபெற்றது. அத்தகைய கண்ணாடித் தகட்டை ஒளிப்படுத்தியபின் அதில் விழுந்த உருவத்தை காலித் திராவகத்தினால் (Gallic Acid) வெளிப்படுத்தியபின் (Developing) அதைப் பதிப்பித்தான்.

நீப்ஸி டி ஸேன்ட் விக்டர் ஜோஸப் நிப்ஸியின் மருமகன்.

பிரெடிரிக் ஸ்காட் ஆர்ச்சா என்பான் 1851-ம் வருஷம் கொல்லோடியான் (Collodion) எனும் மருந்தை ஒளி ஓவியத்திற்கு உபயோகிக்கலாயினன். அம்மருந்து பருத்தியை அக்னி திராவகத்திலும், கந்தகத்திராவகத்திலும், தோய்த்து இறக்கியபின் அதை ஆகாச திராவகத்தில் (Ether) கலந்து செய்யப்படும் ஒருவகை மருந்து கொல்லோடியன் ஒளி யூடுருவும் தெளிவுடைய பொருள். அதனால் பூசிய கண்ணாடித் தகடுகளை பிரதிபாவரூபம் எடுக்க உபயோகிக்கலானன். இவ்வாறு செய்யப்படும் கண்ணாடித்தகடுகளை உபயோகிக்கு

* ஒளி ஓவியம் பிடிக்கும் பெட்டியின்றிப் படம் பிடிக்குமுறை என்ற அத்தியாயம் பார்க்கவும்.



முறைக்கு ஈரத் தகடுமுறை (Wet-plate process) என்று பெயர். இம்முறையானது உலர்தகடுமுறை (Dry-plate process) வருமட்டும் வழக்கிலிருந்தது. 1851-ம் வருஷத்திலிருந்து ஒளி ஓவிய சம்பந்தமாக வருஷந்தோறும் நவ நவமான ஆராய்ச்சிகளும் உண்மைகளும் நிருமாணங்களும் வெளிப்படலாயின. ஆனால் இவை யனைத்திலும் முக்கியமானது திருஷ்டிக் கண்ணாடிகளையும் (Optical Glasses) ஒளி ஓவியக் கண்ணாடிகளையும் (Photographic Lenses) நிருமித்தலேயாம். நான் இவ் விஷயத்தைக் குறித்துப் பின்னோர் அதிகாரத்தில் கூறுகின்றேன்.

இனி இவ்வதிகாரத்தை முடிக்குமுன் ராஜரீக ஒளி ஓவியக் கழகத்தின் ராயல் போட்டக்கிராபிக் ஸொஸைட்டி (Royal Photogrophic Society) அக்கிராசனாதிபதியாகிய டாக்டர் ஜி. எச். ரோட்மான் (Dr. G. H. Rodman) என்பார் 1921-ம் வருஷம் செய்த உபந்நியாசத்தின் கடைசிபாகத்தை இங்கே மொழிபெயர்க்கின்றேன்.

1885-ம் வருஷம் பிரதிபாவ ரூபங்கள் எடுக்கக் கண்ணாடித் தகடுகளுக்குப் பதிலாக படலத் தகடுகள் (Films) உபயோகிக்கப்பட்டன. 1903-ம் வருஷம் ஒளி ஓவியப் படம் பிடிக்கும் பெட்டியில் (Camera) தகடுகளை நிறைப்பதற்காக உபயோகித்து வந்த இருட்டறை ஒன்று தேவையில்லாதாகும்படி பகலிலேயே நிறைக்குமாறு மரவுருளைகளில் சுற்றியிருப்பதும், ஸெலுலாயிடு (Celluloid) என்னும் ரப்பர் அரக்காற் செய்யப்பட்டதுமான சுருளாத படலத் தகடுகள் (Non-curling Films) செய்யப்பட்டன. சுருளாத படலத் தகடுகளின் வருகையால் ஒளி ஓவியப் பயிற்சி ஜனங்களுக்குள் சர்வ சாதாரணமாய்ப் பரவலாயிற்று. இத்தகைய சுருளாத ஓவியப் படலத்தை உண்டுபண்ணத் தொடங்கிய ஈஸ்ட்மன் கம்பனியாராலேதான் (Eastman Company) ஒளி ஓவியப் பயிற்சியை ஜனங்கள் விரும்பிக் கையாடலாயினர். முடிவில் 1907-ம் வருஷம் லுமைரி (Lumiere) என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட ஆட்டோ-க்ரோம் (Autochrome) முறையினால் இயற்கையிலுள்ள வர்ணங்களை உள்ளவாறே காட்டக்கூடிய படங்கள் பிடிப்பது சாத்தியமாயிற்று. தேம்ஸல் (Thames) பாகட் (Paget) என்பவரும் டூபே (Dufay) என்பவரும் சேர்ந்து கண்டுபிடித்த முறையினால், இயற்கையான நிறங்களோடு கூடிய படங்களைக் கண்ணாடிகளில் அமைப்பது சாத்தியமாயிற்று. நீங்கள் விளக்கும் ஒளி ஓவியப் படங்களை எடுக்கும் முறையைக் கண்டுபிடித்தவர்களில் லிப்மன் (Lippman) இவ்ஸ் (Ives), ஸாங்கர் ஷெப்போர்ட் (Sanger-Shepherd) என்போர் என்றும் புகழ்பெற்று விளங்குவார்கள்.

'ஒளி ஓவிய ஞானத்தில் இன்னும் எத்தகைய முன்னேற்றங்கள் ஏற்படக் கூடும் என்பதை நான் துணிந்துரைக்க முடியாது. எனினும், நான் இந் நாட்களில் ஒளி ஓவியப் பயிற்சியில் ஊக்கமெடுத்து வருகின்ற ஜனங்களின் பெருந்தொகையைப் பார்க்கும்பொழுது, இன்று மாலையில் ஒளி ஓவிய ஞான விஷயமாகக் கூறப்பெற்றபற்பல ஆராய்ச்சிகளையும் நிருமாணங்களையும்விட அதிகமான ஆராச்சிகளும் நிருமாணங்களும் இனிவரும் காலத்தில் ஏற்படும் என்று திட்டமாய்க் கூறுவேன். 1851-ம் வருஷத்திலிருந்து 1870-ம் வருஷமட்டும் உபயோகமாகி வந்த ஈரமான கொல்லோடியன் தகடுகளை (West Collodion Plates)க் கொண்டு ஒளி ஓவியம் எடுக்கு முறையை நினைத்துப் பாருங்கள் தகடுகளைப்படம் எடுக்குமிடத்திலேயே ஒளி உணர்வுடையதாகச் செய்யவேண்டும். அதைக் காமராவிலிருந்து வெளியிலெடுக்க முடியாது. படம் பிடிக்கிற ஒளி ஓவியக்காரன் (Photographer) தன் தொழிற்சாலையினின்று தூரமான இடங்களிற் சென்று படம் பிடிக்க நேர்ந்தால், அவன் தன்னோடு ஒளி உணர்வுறுத்தும் திராவகங்களையும் வெளிப்படுத்தவும் (Developing) பதிக்கவும் (Fixing) தேவையான திராவகங்களையும் இருட்டறைக் கூடாரத்தையும் ஒரு வண்டியிலேற்றிக் கொண்டு போகவேண்டியதா யிருந்தது. அவன் ஒரு படம் பிடித்தவுடனே இருட்டறைக்குச் சென்று பிரதிபாவத் தட்டை காமராவிலிருந்து வெளியே எடுத்து உடனே வெளிப்படுத்தும் திராவகத்திலும் பின்பு பதிக்கும் திராவகத்திலும் தோய்த்து இருட்டறையிலே உலரவைக்க வேண்டியதாயிருந்தது. இத்தகைய ஒரு முறையை நவீன காலத்தில் ஜேப்பைக் ('சாக்காய்ப்) பையில் சுமந்து செல்லப்படும் சிறு காமராவினால் வெகு எளிதில் எடுக்கப்படும் ஒளி ஓவிய முறையோடு ஒப்பிட்டுப் பாருங்கள். நவீனகாலத்தில் கொடாக் கம்பனியாரால் (Kodak Company) செய்யப்படுகின்ற மிகவும் வலிமை வாய்ந்த கண்ணாடியும், காலம், நேரம், ஒளி, வடிவம் முதலியவற்றை அளக்கும் கருவிகளுமுடைய ஒரு சிறு வெஸ்ட் பாக்கெட் காமராவோடும் ஒப்பிட்டுப் பாருங்கள். இத்தகைய ஒரு கருவியினுதவியால் படம் பிடித்தல் மிகவும் சுலபமாயிருக்கின்றதைக் குறித்து அதிசயப்படுவதற்கொன்றுமில்லை.

முதன் முதலில் மனிதர்களுடைய உருவப் படத்தை எடுப்பதற்காக மட்டும் உபயோகமாக வேண்டுமென்ற நோக்கத்தோடு தோன்றிய ஒளி ஓவியக் கலையினது பயன் தற்காலம் உருவப்படங்கள் எடுக்கும் பொழுதுபோக்கோடு நின்றவிடவில்லை. அது பத்திரிகைகளில் உலகில் நிகழ்கின்ற காட்சிகளை ஓவியங்களாக அமைத்துக் காட்டுவதோடு, புத்தகங்களில் சொற்களால் விளக்க முடியாதவற்றைக் கண்ணெதிரே காட்டும் ஓவியங்களை அமைக்கின்றது. மனிதர்களுடைய உயிரையும் உடலையும் காக்க விரும்பி அல்லும் பகலும் பாடுகின்ற வயித்தியர்களுக்கு உடலின் உள்ளிருக்கும் கோளாறுகளைத் தெளிவிக்கும் எக்ஸ்-ரேயினால் (X Ray) காட்டப்படும் படத்தைப் பிடிப்பதற்கும், இரசாயன சாஸ்திரிகள் பூதபௌதிக சாஸ்திரிகள், பிரகிருதி சாஸ்திரிகள், பூதத்துவ சாஸ்திரிகள்,




## க்ஷயரோகம்

[திரு. வி. கலியாணசுந்தர முதலியார் எழுதியது.]

தற்கால நாகரீகம் எங்கெங்கே பரவி யிருக்கிறதோ அங்கங்கே க்ஷய ரோகதாண்டவத்துக்குக் குறைபாடில்லை. தற்கால நாகரீகப்படி அமையும் நகர வாழ்வே இத்தாண்டவத்துக்குக் காரணமாகும். தற்கால நாகரீகம் க்ஷய ரோகத்தை வளர்க்குந் தாயென்று கூறுதல் மிகை யாகாது.

---

(73-வது பக்கத் தொடர்ச்சி.)

தவர சாஸ்திரிகள், பிராணி சாஸ்திரிகள், வான சாஸ்திரிகள் முதலானவர்களுடைய ஆராய்ச்சி இன்றியமையாத துணையாய் இருக்கின்றது. உலகின் அறியாமையை அகற்றுகின்ற உத்தமக் கருவியாய் இருக்கின்றது. காணக்கூடாவற்றைக் கண்ணெதிரிற் காட்டும் மாயா விநோதமாய் விளங்குகின்றது. பூதக்கண்ணாடிகளின் மூலமாகவும் தூரதிருஷ்டிக் கண்ணாடிகளின் மூலமாகவும் பல சாஸ்திரிகளால் பார்க்கப்படுகின்ற அற்புதங்களை பாமரரும் கண்டு அறிவில் பெருகப் பெரிதும் உபயோகமாயிருக்கின்றது. அது வான மண்டலத்தின் இரகசியங்களை நமக்குத் திறந்து காட்டும் மாயாவியாய் இருக்கின்றது.

மானிடக் கண்கள் ஏதாவது ஒரு பொருளைப் பார்க்க முயன்று முடிவில் மெய்யான ரூபத்தைக் காணாமல் ஏமாறி விடுகின்றன. ஆனால் காமராவின் கண்ணை இவ்வுலகில் எப்பொருளும் ஏமாற்ற முடியாது. மனிதர்களுடைய கண்கள் காணமுடியாத ரூபங்களை நமக்குப் பொறித்துக் காட்டுகின்றது. ஒளி ஓவிய ஞானத்தின் உதவியால், வான சாஸ்திரிகள் தாம் முன் கணக்கிட்டிருந்த நட்சத்திரங்களைப் பார்க்கிலும் இரு மடங்கு அதிகமான நட்சத்திரங்கள் வானலோகத்தில் இருக்க வேண்டுமெனத் தீர்மானித்திருக்கின்றனர். சந்திரனின் முகத்தையும், சூரியனின் கொழுந்துவிட்டெரியும் ஜ்வால மண்டலத்தையும் நமது பூமியின் சந்திரன்களையும் மற்றேனைய கிரகங்களின் சரித்திர வரலாறுகளையும் காமராவின் ஒருபொழுதும் பிறழாத கண் நமக்குக் காட்டுகின்றது. காமராவின் கண்ணின் செயலுக்கு ஓய்வுமின்று, ஒழிவுமின்று, அழிவுமின்று.

P. R. R. C.

---

நகரங்களில் வீடுகள், தெருக்கள், விளக்குகள், சாலைகள், கடைகள் முதலிய யாவும் செவ்வனே அமைந்திருக்கின்றன. ஆனால் வாழ்வினுள்ளே நுழைந்து ஆராய்ந்தால் ஆண்டு உயிர்ப்புக் காணோம்.

வீடுகளில் என்ன ஒலிக்கிறது? "கணீல் கணீல்" என்னும் இருமல் ஒலியன்றி வேறென்ன உண்டு? டாக்டர்கள் பெருக்கும் மருத்துவ சாலைகளின் அமைப்பும் நங்கூற்றை வலியுறுத்துமென்க. நகர வாழ்வு நரக வாழ்வாய் உயிர்களை வருத்துகின்றது என்று சுருங்கச் சொல்லலாம்.

முதலாவது மனிதனுக்குத் தூநறுங்காற்றுத் தேவை. அக்காற்று வாய்ப்பு நகரங்களி லிருப்பினும், அதை முகர்ந்தின்புறும் பேறு மக்கட்கில்லை. தெருக்களின் நெருக்கும், வீடுகளின் அடைவும் மக்கட்கு நறுங்காற்றை எங்ஙனம் வழங்கும்? ஒரு தெருவில் ஒரு வீட்டில் எவ்வளவு பேர் வாழ்தல் வேண்டுமோ அவ்வளவு பேர் வாழ்கிறாரா என்பது கவனிக்கப்படல் வேண்டும். ஏழை மக்கள் வாழுந் தெருக்கள் நிலையும் வீடுகள் நிலையும் இரங்கத் தக்கனவா யிருக்கின்றன. ஒரு வீட்டில் எத்துணை யுயிர்கள்! ஒரே அறையில் அட்டில், படுக்கை, பிற எல்லாம்! கொடுமை! கொடுமை! அவ்வீட்டிலுள்ள அனைவரும் ஒரு சிறு குறுகிய விடத்தில் மலஜலங் கழித்தல் வேண்டும். இந்நெருக்கம் தூநறுங் காற்றை ஈர்க்குமா அல்லது வெம்மைக் காற்றை உமிழுமா என்பதை அன்பர்கள் உன்னுவார்களாக.

ஏழை மக்கள் தெருக்களில் நடக்கும்போது குதிரை வண்டிகளும் மோட்டார் வண்டிகளும் பஸ்களும் பிறவும் கிளப்பும் புழுதித்துகளெல்லாம் மூக்கின் வாயிலாக நுரையீரலில் நுழைகின்றன. இவை யன்றித் தார் நாற்றமும் மண்ணெண்ணெய் நாற்றமும் பிறநாற்றமும் வீசிய வண்ணமாயிருக்கின்றன. மூக்கு எதற்காகப் படைப்பில் அமைந்திருக்கிறது? இவ்விதத்துகளும் நாற்றமும் நுழைதற்கா? நேயர்களே! கூர்ந்து சிந்தியுங்கள்.

மனித வாழ்விற்கு வேண்டற்பால தாய் உணவைக் கொள்ளுதற்கு இரண்டு நுழை வாயில்களை ஆண்டவன் படைத்திருக்கிறான். ஒன்று மூக்கு; மற்றொன்று வாய். மூக்கின் வாயிலாகச் செல்லுங் காற்றும் இன்றியமையாத உணவே யாகும். வாயுணவினுங் காற்றுணவு மிகச் சிறந்தது. "மீனுக்கு நீர் மனிதனிக்குக் காற்று" என்பது ஆன்றோர் மொழி. அக்காற்றுக்குரியதாய் அமைந்துள்ள மூக்கில் நகர வாழ்வில் என்னென்ன மீடைகள் நுழைகின்றன? இக்கழிவுகள் மூக்கின் வாயிலாக நுழைந்து நுரையீரலில் நிலைபெற்றால், அவ்விடம் என்னாகும்? அது சாக்கடை யாகுமன்றோ? அச்சாக்கடையில் புழு நெளிதல் இயல்பன்றோ? இவ்வாறு நகர மக்களின் உயிர்ப்பு நிலை கெடுகிறது.



பல காரணங்களால் எழும் உஷ்ண வாயுவை ஈர்த்துத் தூய்மை செய்தற்கு ஞாயிறு ஒளியும் மரங்களும் வேண்டற்பாலன. ஞாயிறு ஒளி போதிய அளவிருப்பினும், அதற்கேற்ற அளவில் மரச்செறி விருத்தல் வேண்டும். கதிரொளி மரத்தழைகள் வாயிலாகவே தனது நேரிய கடனாற்றும்.

அத்தகைய மரச்செறிவு உறவை நகரங்கள் இழந்தே வருகின்றன. நகரங்களில் மக்கள் தொகை நாளுக்கு நாள் பெருகுகிறது. மரங்களின் தொகையோ நாளுக்கு நாள் அழிகிறது. சென்னையில் நாம் வாழும் இராயப்பேட்டை இருநாண்டுகளுக்கு முன்னர்ப் பசுந் தண்டலைக் காட்சி வழங்கி யிருந்தது. எவ்வளவு தோட்டங்கள் இப்பேட்டையிலிருந்தன? அத்தோட்டங்களெல்லாம் இப்பொழுது கெடுக்கப்பட்டன. அவ்விடங்களில் வீடுகள் கட்டப்படுகின்றன. மரங்களும் செடி கொடிகளும் அழிக்கப்படுவதைக் காணும்போது மனம் நடுங்குகிறது. மரத்துடன் வாழவேண்டிய மனிதன் மரத்தை வெட்டிய வண்ணமா யிருக்கிறான். இதற்குக் காரணமாயுள்ள நகர வாழ்வை நரக வாழ்வெனக் கூறல் பொருத்தமே யாகும்.

மரமில்லா இடங்களில் வாழும் மனிதன்-மரமில்லாப் பாதைகளில் உழலும் மனிதன்-உஷ்ண வாயுவைப் பெரிதும் பருகும் மனிதன் - நிலையென்னாகும்? அவன் சுகாதாரத்துக்கெனக் காணப்பட்ட நகர சங்கங்கள் என் செய்கின்றன? அவைகளாதல் மரங்கள்மீது கருத்துச் செலுத்துகின்றனவா?

நகரங்களில் வாழும் மனிதனது மூக்கு தன் இயற்கைக்கு மாறுபட்ட கடனாற்றும் நிலையெய்படியிருக்கிறது. வாயோ? அதன் நிலையும் இரங்கத் தக்கதாயிருக்கிறது. நகரங்களில் வாழ்வோர் காலையில் படுக்கையினின்றும் எழும்போதே காப்பி டீ எண்ணத்துடன் எழுகிறார்கள். காற்றாக, நீராக, ஞாயிரொளியாக நின்று உலகம் ஓம்பி வளரும். எல்லாம் வல்ல ஆண்டவன் நினைவுடன் எழவேண்டிய மனம் காப்பி டீ கருத்துடன் எழுகிறது. சிலர் வீடுகளிலேயே காப்பி டீ பருகுகிறார். பலர் காப்பிஹோட்டலுக்கு ஓடுகிறார். இக் காப்பி ஹோட்டல்கள் க்ஷய ரோகத்துக்குத் தாயகம் என்று மட்டும் சொல்லி மேலே செல்கிறோம்.

காப்பி டீ கோக்கோ ஒவல்டைன் மனிதனுக்குப் பொருந்திய பானமல்ல. குளிர் நாட்டில் வாழும் அறிஞரே இது போழ்து அவைகளைப் பொருந்தாப் பானங்களென ஒதுக்கி வருகிறார்கள். நமது நாடோ வெம்மை செறிந்த நாடு. இந் நாட்டை அப்பானங்கள் எவ்வாறு அழிக்கும் என்றும் சொல்ல வேண்டுவதில்லை. இக்குடிகள் என்று நமது நாட்டில் நுழைந்தனவோ அன்று தொட்டு நாட்டில் க்ஷயம் அரித்து எரித்து வருகிறது.

காப்பி டீயில் கருத்தைப் புகுத்தும் நகர மக்களுக்கு நல்ல காய் கறிகளையேனும் வழங்குகிறதோ? அஃது மில்லை. இரண்டு நாள் மூன்று நாள் காய்ந்து உலர்ந்து அடிபட்ட காய் கறிகளையே பெரிதும் நகர மக்கள் உண்கிறார்கள். அக்காய்கறிகளில் சத்துப்பொருள் நிலவுதற்கும் இடனில்லை. சத்திழந்த பொருளை யுண்பதால் உள்ளுறுப்புக்களுக்குப் பல இறக்கோடுகள் உண்டு. வீட்டுக் கொல்லையில் விளைந்த காய்களையுங் கீரைகளையும் பறித்து, உடனே அதாவது சத்துப் பறந்தோடுதற்கு முன்னே சமைத்துச் சாப்பிட்டு வந்த மனிதன் நகரம் போந்து சத்திழந்த காய் கீரைகளை யுண்டு உறுப்புக்களின் இயற்கை நிலைகளைக் கெடுத்துக்கொள்கிறான். இவனை க்ஷயம் பீடியாதா?

நகர மனிதன் அரிசியாவது நல்லதாகப் பெறுகிறானா? நாகரீக மனிதன் நாகரீக முறையில் கன்றாக இயந்திரந் தீட்டிய வெள்ளிய அரிசி பெறுகிறான். ஐயோ! பாவம்! அரிசியிலும் சத்திழக்கிறான் இக்கால மனிதன். சர்க்கரை முதலிய பொருள்களும் சத்திழந்த நிலையில் இக்கால மனிதனுக்குக் கிடைக்கின்றன. இம்மனிதனை க்ஷயம் விடுங்கொல்!

தற்கால நாகரீக மனிதன் நகரத்தில் கொண்டுள்ள வழக்க ஒழுக்கங்களை ஈண்டு விரிக்கிற் பெருகும். கள்ளுக்கடைகளையும் வேசையர் விடுதிகளையும் வேறு பல கலியாட்டங்களையும் ஈண்டு நினைவூட்ட வேண்டுவதில்லை.

நகர வாழ்வில் வயது முதிர்ந்தவர்களை மட்டுமோ க்ஷயம் அடர்ந்து வருத்துகிறது! இளைஞர்களைக் காணும்போது "இவர்கள் காளைகளா அல்லது கன்னிகளா அல்லது என்புக்கூடுகளா" என்று நினைக்க வேண்டியதாகிறது. அவர்கள் அருகே சென்றால் அவர்கள் மூச்சுப்பை கொல்லன் துருத்தி வேலை செய்வதை புணரலாம்.

நகரங்களில் மாணுக்கர்கள் காப்பி டீ முதலிய பானங்கட்கும் வேறு பல சிற்றுண்டிகட்கும் ஹோட்டல் சாப்பாட்டுக்கும் இரையாகிறார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இவைகளுடன் அவர்கட்கு பரீட்சை நடுக்கம் வேறு.

மாணுக்கர்கட்கென பல கூட்டங்கள் ஏற்பட்

டிருக்கின்றன. அவ்வாட்டங்களால் அவர்கட்கு நயஞ் செய்கின்றனவா? இல்லை, மாணாக்கர்கள் பெரிதும் உடல் நலன் என்னும் உள் கருத்துடன் ஆட்டங்கள் ஆடுகிறார்களில்லை. அவர்கள் நெஞ்சில் "போட்டி" என்னும் பேய் புகுந்து அலைக்கிறது. அதனால் ஆட்டங்களும் இளைஞர்கட்கு நலஞ் செய்ததில்லை.

மரச் செறிவில்லாத் தெருக்களின் நெருக்கமும், வீடுகளின் அடைவும், தெருப்புழுதிகளும், நாற்றமும், வண்டிகளின் இரைச்சலும், தார் வெப்பமும், காப்பி டீ முதலிய பானங்களும், சத்தில்லாக் காய்கறிகளும், தீட்டிய அரிசி சர்க்கரை முதலியனவும், வேறு பல தற்கால வழக்க ஒழுக்கங்களும் ஒன்றுபட்டு மக்கள் இயற்கை நிலையைக் கெடுத்திருக்கின்றன. இயற்கை நிலை கெட்டதும் மலச்சிக்கல் உறுகிறது. மலச்சிக்கல் நாளடைவில் உறுப்புக்களின் இயக்கங்கட்கு ஊறு செய்கிறது. உள்ளே தங்கும் அழுக்குகள் பலதிற நோய்களைக் கிளப்புகின்றன. அந்நோய்கட்கு மருந்துண்ண மனிதன் புறப்படுகிறான். இவ்வாறு வாழ்வு கெடுகிறது.

கெடும் வாழ்வில் க்ஷயம் புகுந்து சூறையாடுகிறது. க்ஷயம் இளங்கன்றுகளை மேய்கிறது; இளங்காளைகளை உண்கிறது; இளங் கன்னிகளை விழுங்குகிறது. பத்துமாதஞ் சுமந்து பெற்ற தாய் தன் மக்களை க்ஷயந் தின்பதைக் காண்கிறாள்; அதைத் தந்தை காண்கிறான். மக்கள் என்புகளெல்லாம் உருகுகின்றன. டாக்டர்கள் வருகிறார்கள்; போகிறார்கள். என் செய்வது? முடிவில் கர்மத்தின்மீது பழி; கடவுள்மீது பழி. க்ஷயத்துக்கு மருந்துண்டோ? பின்னை வழி யென்னை?

க்ஷயம் தோன்றியதற்குக் காரணமென்னை? காரணங்கள் சில மேலே சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளினின்றும் விடுதலை யடைய முயல்வதே உய்யும் வழி தேடுவதாகும். நகர வாழ்வில் கொள்ளப்பட்ட பொருந்தா முறைகளை ஒவ்வொன்றாக விடுத்து வருதல் வேண்டும். காபி டீயை யொழித்து நீர் மோர் முதலியவற்றைப் பருகப் பயிலல் வேண்டும். சத்துணவு கொள்ள முயலல் வேண்டும். மரங்களடர்ந்த மலையடியில் வாழ்தல் வேண்டும். நாடோறும் நீரிலுங் காற்றிலும் ஞாயிரொளியிலும் முறைப்படி மூழ்குதல் வேண்டும். இம்மூழ்குதலைப்பற்றி நன்கு உணர்ந்தவர்கள் வாயிலாகப் பயின்று கொள்ளுதல் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாகச் சத்தியப் பொருளாக உள்ள கடவுளை நினைந்த வண்ணமா யிருத்தல் வேண்டும். சுருங்கக் கூறின் இயற்கைக்கு மாறுபட்ட எவ் வெத்திய பழக்கங்கள் கொள்ளப்பட்டனவோ அவை ஒவ்வொன்றையும் விட்டுவிடுவதே உய்யும் வழி என்னலாம். நகர வாழ்வே க்ஷயத்துக்குத் தலையாய காரணம். (நவசக்தி)

---

## கோயமுத்தூர் ஜில்லா

### செங்குந்த வாலிப மஹாஜன சங்கம், முதலாவது ஆண்டு நிறைவு விழா.

இச்சங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழா நாளது பிரமோதூத௵ பங்குனி௴ 2-ந்தேதி (15-3-1931) ஞாயிற்றுக் கிழமை காலை 11-மணிக்கு கோவை நகரின் வடசார்பிலுள்ள கணபதியில் நடைபெறும். அவ்வமயம் நமது தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகா நாட்டுத் தலைவரும், புதுச்சேரி பிரெஞ்சு அரசாங்க மந்திரியும் ஆகிய உயர் திருவாளர் ஆ வே. முத்தைய முதலியார் அவர்கள், B. A., B. L., அவைத் தலைமை வகிப்பார்.

S. H. Slater Esq., C. M. G., I. C. S., C. I. E., ஜில்லா கலெக்டர், திறந்து வைப்பார்.

உயர்திருவாளர் திவான் பகதூர், C. S. இரத்தின சபாபதி முதலியார் அவர்கள்; M. L. C., திறந்து வைப்பார்.

---

## வட ஆற்காடு ஜில்லா, அரக்கோணம்தாலூகா

### குருவராஜ பேட்டை, ஷண்முகாநந்த பொதுஜன சங்கம்.

17-2-31உ மாலை சுமார் 2 மணிக்குமேல் இச்சங்கத்தின் பொதுக் கூட்டம் மாணிக்க வாசக சுவாமிகள் மடாலயத்தில் கூட்டப்பட்டது. அவ்வமயம் அனேக பிரமுகர்கள் வந்திருந்தனர். கூட்டத்திற்கு திரு. ச. மு. வரதப்ப முதலியார் தலைமை வகித்தார். பிறகு கடவுள் வணக்கம் திரு. T. நாராயணசாமி முதலியாரால் ஓதப் பெற்ற பின், திரு. P. M. நாகரத்தின முதலியார் சென்ற கூட்டத்தின் அறிக்கைப் பத்திரம் வாசித்தார். பிறகு திரு. குட்டி நடேச முதலியார் "ஒற்றுமை" என்னும் விஷயத்தைப் பற்றியும், "நமது சங்கத்தின் நோக்கம்" என்னும் விஷயத்தைப் பற்றியும் மிகவும் தெளிவாய் சொற்பொழிவாற்றினார்.

நமது இந்துதேசத்தின் அரிய தியாகரும் காங்கிரஸ் தலைவரும் பொது நல ஊழியருமான பண்டித் "மோதிலால் நேரு" காலஞ் சென்றதைப் பற்றி நமது இந்தியாவுக்கே ஷை யார் இறந்துவிட்டது பெரிய நஷ்டம் என்றும் ஷை யாரின் குடும்பத்தாருக்கு இக் கூட்டம் அநுதாபம் தெரிவிக்கப்படுகிறது. பிறகு எல்லோரும் நிச்சப்தமாக சில நிமிஷங்கள் எழுந்து நின்று கடவுளை தியானித்து பிறகு P. M. நாகரத்தின முதலியாரால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டமினிது கலைந்தது.

P. M. Nagarathinam, Secretary.






## காந்தி—இர்வின் சமரச ஒப்பந்தம்

(6—3—31 "தமிழ் நாடு"-ல் கண்டது.)

பொது ஜனங்கள் அறிந்து கொள்ளுவதற்காக நிர்வாக சபையுடன் கூடிய வைஸிராய் (கவர்னர் ஜெனரல்) சமரச விவரத்தை யொட்டி கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்:—

1. வைஸிராய்க்கும் மகாத்மா காந்திக்கும் டில்லியில் நடந்த சமரசப் பேச்சின்மீது இனி சட்ட மறுப்பை நிறுத்தி விடுவதென்றும், பிரிட்டிஷ் சர்க்கார் அங்கீகாரம் பெற்று இந்திய சர்க்காரும், மாகாண சர்க்கார்களும் சில நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதென்றும் முடிவு செய்திருக்கிறார்கள்.

### அரசியல் திட்டம்

2. அரசியல் விஷயங்கள் சம்பந்தப்பட்ட வரையில், இந்திய அரசியலை யொட்டி லண்டன் மகாநாட்டில் ஏற்பட்டுள்ள திட்டத்தைப் பற்றி இனி நடக்கப் போகும் விவாதத்தில் யோசிப்பார்கள். லண்டன் மகாநாட்டில் ஏற்பட்டுள்ள திட்டத்தில் ஐக்கிய சர்க்கார் முறை (அதாவது இந்தியா சமஸ்தானங்களும், மாகாண சர்க்கார்களும் இந்திய சர்க்கார் கீழ் இருப்பது) தான் முக்கியமான அம்சமாகும். அதேபோல் இந்திய சர்க்காரில் இந்தியர் பொறுப்பும் ஓர் முக்கியமான விஷயம். இன்னும் உதாரணமாக ராணுவம், அன்னிய நாட்டு விஷயங்கள், சிறுபான்மையோர் நிலைமை, இந்தியா கொடுக்க வேண்டிய கடமை இவைகள் விஷயத்தில் இந்தியா சௌகரியத்தை யொட்டி பாதுகாப்புகள் இருக்க வேண்டியதும் அவசியம்.

### காங்கிரஸ் ஒத்துழைப்பு

3. 1931-ம் வருஷம் ஜனவரி௴ 19உ பிரிட்டன் பிரதம மந்திரி லண்டன் மகாநாட்டில் செய்த அறிக்கையை யொட்டி, காங்கிரஸ் பிரதிநிதிகளும் இந்திய அரசியல் சீர்திருத்த திட்டத்தைப்பற்றி இனி நடக்கப் போகும் விவாதத்தில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்வார்கள்.

### சட்டமறுப்பினை நிறுத்தல்

4. இப்போது ஏற்பட்டுள்ள சமரசம், சட்ட மறுப்பு இயக்க சம்பந்தமான முக்கிய விஷயங்களையே குறித்திருக்கின்றது.

5. இனி சட்டமறுப்பு பூரணமாக நின்று விடும். சர்க்காரும் அதற்கு பதிலாக பரஸ்பர நல்லெண்ணத்துடன் வேண்டிய முறைகளை எடுத்துக் கொள்ளுவார்கள். சட்டமறுப்பு இயக்கத்தை உறுதியாக நிறுத்தி விடுவதென்பது யாதெனில், சட்டமறுப்பு இயக்கம் பலமடைய எடுத்துக் கொண்ட முறைகளை யெல்லாம் பூரணமாக நிறுத்திவிட வேண்டுமென்பதே. கீழ்க்கண்ட முறைகளை நிறுத்திவிட வேண்டும். அதாவது:—

i. சட்ட சம்பந்தமான விதிகளை மீறுவது.

ii. நிலவரி போன்ற இன்னும் சட்டப்படி கொடுக்க வேண்டிய வரிகளை கொடுக்க மறுக்கும் இயக்கம்.

iii. சட்ட மறுப்பு இயக்கத்தை ஆதரித்து வெளியிடும் பத்திரிகைகள்.

iv. சர்க்காருக்கு விரோதமாக சிவில், மிலிடரி அதிகாரிகளையோ அல்லது கிராம அதிகாரிகளையோ தூண்டிவிட முயற்சிப்பது; இன்னும் வேலைகளை ராஜிநாமா செய்யும்படி அவர்களைத் தூண்டிவிடுவது முதலியவைகளை நிறுத்திவிட வேண்டும்.

### அன்னிய சரக்கு விலக்கு

6. சீமை சாமான்கள் பகிஷ்காரம் சம்பந்தப்பட்ட வரையில் இரண்டு விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

முதலாவது, பகிஷ்கார முறையின் ரீதி; இரண்டாவது, அதை அமுலுக்குக் கொண்டு வர எடுத்துக் கொள்ளும் முறைகள்.

அவ்விஷயத்தில் சர்க்கார் அபிப்பிராயம் பின் வருமாறு:—இந்தியாவின் பண நிலைமை விருத்தியடைய எடுத்துக் கொள்ளும் பொருளாதார கைத்தொழில் இயக்க சம்பந்தமான ஜாதிய கைத்தொழில் அபிவிருத்தியை சர்க்கார் ஆதரிக்கிறார்கள். ஷை கைத்தொழில் அபிவிருத்திக்காக இந்தியர் எடுத்துக்கொள்ளும் பிரசாரம், தூண்டுதல் விளம்பரம் முதலிய முறைகளை தடுக்க வேண்டுமென்பது சர்க்கார் விருப்பமல்ல. ஆனால் ஷை முறைகள் சட்டம், சமாதான பாதுகாப்பிற்கு

விரோதமாயும், ஜனங்களின் சுதந்திரத்தில் தலையிடக் கூடியவைகளாயும் இருக்கக்கூடாது. உடை சம்பந்தப்பட்ட வரையில் காங்கிரஸ் வாதிகள் சகல அன்னிய நாட்டு உடைகளையும் பகிஷ்கரிக்கிறார்கள். ஆனால், இந்தியாவில் செய்யப்படாத சாமான்களை பகிஷ்காரம் செய்யும் விஷயத்தில் முக்கியமாக அவர்கள் பிரிட்டிஷ் சாமான்களையே பகிஷ்கரிக்கிறார்கள். அரசியல் விஷயங்களில் வெற்றி பெற வேண்டுமென்ற எண்ணத்துடனேயே முக்கியமாக பிரிட்டிஷ் சாமான்களை பகிஷ்கரித்து வருகிறார்கள். இத்தகைய நோக்கத்துடன் ஏற்பட்ட பகிஷ்காரம் சமரச நோக்கத்திற்கு ஏற்றதல்ல; இங்கிலாந்திலுள்ள அரசியல் கக்ஷிகள், பிரிட்டிஷ் சர்க்கார் இவர்களுடைய பிரதிநிதிகளுக்கும், இந்திய சமஸ்தான பிரதிநிதிகள், பிரிட்டிஷ் இந்திய பிரதிநிதிகள் இவர்களுக்கும் கல்மஷமற்று, நட்பு முறையில் அரசியல் விஷயங்களை யொட்டி நடக்கும் விவாதத்தில் காங்கிரஸ் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும்போது பிரிட்டிஷ் சாமான்களை பகிஷ்காரம் செய்வதென்பது பொருந்தாது. எனவே, பிரிட்டிஷ் சாமான்கள் பகிஷ்காரத்தை காங்கிரஸ் வாதிகள் அரசியல் ஆயுதமாகக் கொள்ளக் கூடாதென்பதையும், அவ்விதம் செய்வதை நிறுத்திவிட வேண்டுமென்பதையும் சமரசத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அரசியல் நெருக்கடி ஏற்பட்ட சமயத்தில் பிரிட்டிஷ் சாமான்களை விற்பதையோ, வாங்குவதையோ நிறுத்திவிட்டவர்கள் யாதொரு தடையுமின்றி இஷ்டம்போல் செய்ய விட்டுவிட வேண்டும். அவர்கள் விருப்பப்படி செய்வதை தடுக்கக்கூடாது.

## புதிய முறையில் மறியல்

7. சீமைச் சாமான்களை ஒழித்து இந்திய சாமான்களை அபிவிருத்தி செய்யும் விஷயத்திலோ அல்லது போதையை கொடுக்கக்கூடிய குடி, சாராய வகைகளை தடுக்கும் விஷயத்திலோ எடுத்துக்கொள்ளும் மறியல் முறைகள், சாதாரண சட்ட வரம்பிற் குட்பட்டிருக்க வேண்டும். அவ்விதம் மறியல் செய்வதால் பிறருக்கு தீங்கு விளையக் கூடாது. இன்னும் அது சம்பந்தமாக ஒருவரை பலாத்காரம் செய்வதோ, பயமுறுத்துவதோ, அடக்குவதோ, பொதுஜன போக்குவரத்திற்கு தடை செய்வதோ, சட்டத்தின் கீழ் மற்றும் ஏதாவது குற்றம் செய்வதோ கூடாது எந்த இடத்திலாவது அத்தகைய முறைகளில் எதையாவது அனுஷ்டிப்பார்களாயின் அந்த இடத்தில் மறியலை நிறுத்தி வைக்க வேண்டும்.

## போலீஸ் விசாரணை

8. போலீசார் நடவடிக்கையைப் பற்றி சில குறிப்பான புகார்களை மகாத்மா காந்தி சர்க்காருக்கு எடுத்துச் சொல்லி, அத்தகைய புகார்களை வெளிப்படையாக விசாரிப்பது உசிதமாகயிருக்குமென்று கூறினார். தற்போதுள்ள நிலைமையில் சர்க்கார் அவ்விதம் செய்வதில் மிகுந்த கஷ்டமிருக்கிறது. அதனால் பரஸ்பரம் குற்றம் குறைகளை கூற ஆரம்பித்து அமைதி புண்டாவதற்கு இடையூறுகிவிடும். எனவே, அதை யெல்லாம் அனுசரித்து ஷை விஷயத்தில் வற்புறுத்தாமலிருக்க மகாத்மா இசைந்தார்.

## அவசரச் சட்டங்கள் ஒழியும்

9. சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தியவுடன் சர்க்கார் கீழ்க்கண்ட காரியங்களைச் செய்வார்கள்:—

10. சட்ட மறுப்பு சம்பந்தமாக விதித்த அவசரச் சட்டங்களை சர்க்கார் வாபீஸ் வாங்கிக் கொள்ளுவார்கள். ஆனால், பர்மா பயங்கர ஆட்சியை யொட்டி விதித்த 1-வது அவசரச் சட்டத்தை ரத்து செய்ய மாட்டார்கள்.

11. சட்ட மறுப்பு இயக்கத்தை யொட்டி அறிக்கை வெளியானதும், 1908-ம் வருஷத்திய கிரிமினல் திருத்த சட்டத்தின் கீழ் சட்ட விரோதமான ஸ்தாபனங்கள் என தீர்மானித்திருக்கும் உத்தரவுகளை சர்க்கார் வாபீஸ் பெற்றுக் கொள்ளுவார்கள். ஆனால் கிரிமினல் திருத்த சட்டத்தின் கீழ் சமீபத்தில் பர்மா சர்க்கார் விதித்த அறிக்கையை சர்க்கார் வாபீஸ் செய்து கொள்ளமாட்டார்கள்.

## வழக்குகள் ரத்தாயிற்று.

12. i. சட்ட மறுப்பு இயக்க சம்பந்தமாக இப்போது நடந்து வரும் வழக்குகளை சர்க்கார் வாபீஸ் செய்து கொள்ளுவார்கள். ஆனால் ஷை வழக்குகள் பலாத்கார குற்றதை யொட்டியதாக இருக்கக் கூடாது. சட்டப்படி பெயரளவில் செய்த பலாத்காரத்தை யொட்டியோ அல்லது அவ்விதம் பலாத்காரம் செய்யும்படி தூண்டி விட்டதை யொட்டியோ நடந்து வரும் வழக்குகளையும் சர்க்கார் வாபீஸ் செய்து கொள்ளுவார்கள்.

ii. கி. பு. கோ. ஜாமீன் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டி நடக்கும் வழக்குகள் விஷயத்திலும் ஷை முறைகளையே அனுஷ்டிப்பார்கள்.

iii. சட்ட மறுப்பு இயக்க சம்பந்தமாக வக்கீல்கள் நடவடிக்கையை யொட்டி வக்கீல்கள் சட்டத்தின் கீழ் மாகாண சர்க்கார் எந்த ஹைகோர்ட்டிலாவது வழக்குகள் தொடர்ந்திருந்தால் அவ்வழக்குகளை வாபீஸ் செய்துகொள்ள அனுமதி கொடுக்க வேண்டுமென அவர்கள், சம்பந்தப்பட்ட கோர்ட்டாரிடம் மனுச் செய்து கொள்ள வேண்டும். ஷை குற்றம் பலாத்காரத்தை யொட்டியதாகவோ, அல்லது பலாத்காரம் செய்யும்படி தூண்டி விட்டதாகவோ இருக்கும் பக்ஷத்தில் அத்தகைய வழக்குகளை சர்க்கார் வாபீஸ் வாங்கிக் கொள்ளமாட்டார்கள்.

iv. சட்டப்படி உத்தரவிற்குக் கீழ்ப்படாத போலீசார் மீதும், சிப்பாய்கள் மீதும் இருக்கும் வழக்குகளையும் வாபீஸ் வாங்கிக்கொள்ளமாட்டார்கள்.



## சத்தியாக்கிரகிகளுக்கு விடுதலை:

18. i. சட்ட மறுப்பு இயக்கத்தையொட்டி தண்டனை யடைந்து சிறையிலிருப்பவர்களை யெல்லாம் சர்க்கார் விடுதலை செய்து விடுவார்கள். ஆனால் பாலாத்காரக் குற்றத்தின் கீழ் சிறை தண்டனை யடைந்தவர்களை விடுதலை செய்ய மாட்டார்கள். எனினும் சட்டப்படி பெயரளவில் பலாத்காரம் செய்தோ, அல்லது அவ்விதம் தூண்டியோ சிறை தண்டனை யடைந்தவர்களை விடுதலை செய்து விடுவார்கள்.

ii. மேற் கூறிய விதமே பலாத்கார குற்றம் செய்தவர்களைத் தவிர, மற்றவர்கள் சிறையில் செய்த குற்றத்திற்காக மீண்டும் சிறை தண்டனை யடைந்தால், அந்த தண்டனை யடைந்திருந்தால், அந்த தண்டனையையும் சர்க்கார் ரத்து செய்து விடுவார்கள். மேற்கூறிய நிபந்தனைகளை யனுசரித்தே, சிறையில் செய்த குற்றத்திற்காக வழக்குகள் நடந்து கொண்டிருந்தாலும் அவ்வழக்குகளையும் சர்க்கார் வாபீஸ் பெற்றுக் கொள்ளுவார்கள்.

iii. உத்தரவிற்குக் கீழ்ப்படியாமல் இருந்த குற்றத்திற்காக தண்டனை யடைந்த போலீசாரையோ, சிப்பாய்களையோ மேற் கூறியபடி விடுதலை செய்ய முடியாது.

## அபராதங்கள் வஜா

14. சர்க்கார் வசூல் செய்யாத அபராதங்களை யெல்லாம் வஜா செய்வார்கள். கி. பு. கோ. பிரிவின் கீழ் ஜாமீன் பறிமுதல் செய்யும்படி உத்தரவு செய்து ஷை ஜாமீனை வசூலிக்காமலிருந்தால் அதையும் வஜா செய்துவிடுவார்கள். ஆனால் சட்டப்படி வசூல் செய்த ஜாமீனையும் திருப்பிக் கொடுக்கமாட்டார்கள்.

## தண்ட போலீஸ் போயிற்று

15. சட்ட மறுப்பு இயக்கத்தை யொட்டி ஜனங்கள் செலவில் ஓர் குறிப்பிட்ட இடத்தில் வைத்திருக்கும் அதிக போலீசாரை (தண்டப் போலீஸ்) மாகாண சர்க்கார்கள், உசிதம் போல் திரும்பி விடும்படி உத்தரவிடுவார்கள். அவர்களுக்கு ஏற்பட்டுள்ள செலவை தவிர, மீதி பணமிருந்தால் மாகாண சர்க்கார்கள் அதைத் திருப்பிக் கொடுக்க மாட்டார்கள்.

## பறி முதல் சொத்துகள் வாபீஸ்

## ஜங்கம சொத்துக்கள்

16. i. சட்டப்படி பாத்தியமுள்ளதும், சட்ட மறுப்பை யொட்டி அவசரச் சட்டத்தின் கீழோ, அல்லது கிரிமினல் சட்டத்தின் கீழோ சர்க்கார் பறிமுதல் செய்ததுமான ஜங்கம சொத்தை, அது இப்போது சர்க்கார் வசமே இருக்கும் பட்சத்தில், திருப்பிக் கொடுத்து விடுவார்கள்.

ii. நிலவரி வசூலை யொட்டியோ, அல்லது வேறு தொகையை யொட்டியோ பறிமுதல் அல்லது ஜப்தி செய்த ஜங்கம சொத்தை சர்க்கார் திருப்பிக் கொடுத்து விடுவார்கள். ஆனால் ஏதோ நியாயமான குறித்த காலத்திற்குள் ஷை சொத்துக்கு பாத்திய முடையவர் வரியை செலுத்தாது பிடிவாதம் செய்வாரென ஜில்லா கலெக்டருக்கு தோன்றினால் ஷை சொத்தை அவரிடம் திருப்பிக் கொடுக்க மாட்டார்கள். நியாயமாக வரி கொடுக்க விரும்புகிறவர்கள் சிறிது காலம் கெடு கொடுக்க வேண்டுமென கேட்டால், அதற்கு சர்க்கார் இணங்குவார்கள். அவசியமானால் நில வரி நிர்வாக சாதாரண விதிகளை யொட்டி அவருக்கு தவணை கொடுப்பார்கள்.

iii. சொத்து சேதத்திற்காக சொத்து பாத்தியஸ்தர்களுக்கு சர்க்கார் நஷ்ட ஈடு கொடுக்க மாட்டார்கள்.

iv. ஆனால் சர்க்கார் பறிமுதல் செய்த ஜங்கம சொத்தை அவர்கள் விற்று விட்டாலோ, அல்லது அதை பைசல் செய்து விட்டாலோ, அத்தகைய சொத்திற்கு சர்க்கார் நஷ்ட ஈடு கொடுக்கமாட்டார்கள். ஆனால் வரி கொடுக்க வேண்டிய தொகையைக் காட்டிலும் அதிக விலைக்கு விற்றிருந்தால் அந்த அதிகத் தொகையை திருப்பிக் கொடுத்து விடுவார்கள்.

v. ஷை சொத்தை ஜப்தி செய்ததோ, பறிமுதல் செய்ததோ சட்ட விரோதமானதெனத் தோன்றினால், அதையோர் சட்ட மூலம் வழக்கு தொடர்ந்து பரிகாரம் தேடிக்கொள்ளலாம்.

## ஸ்தாவர சொத்துக்கள்

17. i. 1930-ம் வருஷம் 9-வது அவசரச் சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்த ஸ்தாவர சொத்தை அவசரச் சட்ட விதியை அனுசரித்து சர்க்கார் திருப்பிக் கொடுத்து விடுவார்கள்.

ii. நில வரியை யொட்டியோ சர்க்கார் நிலத்தையாவது வேறு ஏதாவது ஸ்தாவர சொத்தையாவது பறி முதல் செய்திருந்தால் அதைத் திருப்பிக் கொடுத்து விடுவார்கள். ஆனால், ஓர் குறிப்பிட்ட காலத்திற்குள் ஷை யார் வரியை செலுத்த மறுத்து பிடிவாதம் செய்வாரென அந்த ஜில்லா கலெக்டருக்குத் தோன்றினால் அத்தகைய ஸ்தாவர சொத்தை சர்க்கார் திருப்பிக் கொடுக்க மாட்டார்கள். சொத்து பாத்தியஸ்தர் உண்மையாக வரிகொடுக்க எண்ண முடையவரா யிருந்து கொடுக்கவேண்டுமென்று கேட்டால் கொடுப்பார்கள்' அவசியமானால் நிலவரி நிர்வாக முறையை அனுசரித்து வரியை நிறுத்தி வைப்பார்கள்.

i. ஸ்தாவர சொத்துக்கள் சர்க்கார் வேறொருவருக்கு விற்று விட்டால், ஷை விஷயம் சர்க்கார் சம்பந்தப்பட்ட வரையில் முடிந்து விட்டதென்றே நினைத்துக் கொள்ள வேண்டும்.

iv. சொத்தை பறிமுதல் செய்ததோ ஜப்தி செய்ததோ சட்ட விரோதமானதெனத் தோன்றுபவர்கள் அதை யொட்டி வழக்குத் தொடர்ந்து சட்டப்படி பரிகாரம் தேடிக் கொள்ளலாம்.

18. வெகு சிலரிட மிருந்து பணத்தை சட்டப் படி வசூலிக்கவில்லையெனத் தெரிகிறது. அத்தகைய விஷயங்களை உடனே விசாரிக்க மாகாண சர்க்கார்கள் ஜில்லா அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, ஜில்லா அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, சட்டப்படி வசூலிக்காதது உண்மை என முடிவானால், சர்க்கார் தாமதமின்றி அதற்கு பரிகாரம் செய்ய வேண்டும்.

19. ராஜீநாமா செய்த சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பதவிக்கு வேறு யாரையாவது சாசுவதமாக நியமித்திருந்தால், சர்க்கார் ராஜீநாமா செய்தவர்களை மீண்டும் சேர்த்துக் கொள்ள முடியாது. ராஜீநாமா செய்த மற்றவர்கள் விஷயத்தில் மாகாண சர்க்கார்கள் தாராள மனதுடன், மீண்டும் தங்களை சேர்த்துக் கொள்ள வேண்டுமென கேட்கும் சர்க்கார் ஊழியர்கள், கிராம அதிகாரிகள் முதலியோரை ஷை பதவிகளில் நியமிப்பதைப்பற்றி கவனிப்பார்கள்.

## உப்பு தர்மம்

20. உப்பு நிர்வாகத்தை யொட்டி தற்போதுள்ள சட்டத்தை மீறுவதை சர்க்கார் மன்னித்து விட முடியாது. தற்போது தேசத்திலுள்ள பண நிலைமையில், உப்புச் சட்டங்களை அதிகமாக திருத்துவதென்பதும் முடியாத காரியம். ஆனால் சில ஏழை வகுப்பினருக்கு உதவி யளிக்க வேண்டுமென்ற உத்தேசத்துடன், தற்போது சில இடங்களிலிருப்பதுபோய் உப்புச் சேகரிக்குமிடத்திற்கு அருகிலுள்ள இடங்களை அடுத்து வசிக்கும் கிராமவாசிகளுக்கு உப்பு சேகரித்து ஷை கிராமங்களில் தங்கள் வீட்டிற்கு உபயோகப்படுத்திக் கொண்டு விற்கும் உரிமையையும் அளிக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால், ஷை கிராமங்களுக்கு வெளியில் கொண்டுபோய் அவர்கள் வியாபாரம் செய்யக் கூடாது.

21. இச்சமரசப்படி காங்கிரஸ் வாதிகள் தங்கள் கடமையைச் செலுத்தி ஷை விஷயங்களை அமுலுக்கு கொண்டுவர தவறுவார்களாயின், சர்க்கார் பொதுஜன பாதுகாப்பிற்காகவும், சட்ட, சமாதான பாதுகாப்பிற்காகவும் அவசியமான முறைகளை எடுத்துக்கொள்ளுவார்கள்.

(ஒப்பம்) எச். டபிள்யூ. எமர்சன்

இந்திய சர்க்கார் காரியதரிசி.

குறிப்பு:—சில நிலங்களை சர்க்கார் விற்றது சட்ட விரோதமான தென்றும், நியாயமற்ற தென்றும் தெரிய வந்ததாக மகாத்மா சர்க்காரிடம் தெரிவித்திருக்கிறார். ஆனால், அவ்விஷயமாக சர்க்காருக்குக் கிடைத்திருக்கும் செய்தியிலிருந்து அவர்கள் மகாத்மா கூறுவதை ஒப்புக் கொள்ள முடியாது.

## காங்கிரஸ் அறிக்கை

காங்கிரஸ் காரியக் கமிட்டியில் இன்று கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது:—இந்திய சர்க்காருக்கும் மகாத்மா காந்திக்கும் காங்கிரஸ் சார்பில் ஏற்பட்ட சமரச நிபந்தனைகளை இக்கமிட்டியார் நன்கு யோசித்தார்கள். ஷை நிபந்தனைகளை இக்கமிட்டி ஆதரிப்பதுடன், அவைகளை அனுசரித்து உடனே வேண்டிய முறைகளை எடுத்துக் கொள்ளும்படி சகல காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் உத்தரவிடுகிறார்கள். காங்கிரஸ் திட்ட சம்பந்தமாக அதில் கூறியுள்ள நிபந்தனைகளுக்கு தேசத்திலுள்ளோர் கட்டுப்பட்டு நடப்பார்களென இக்கமிட்டியார் நம்புகின்றனர். காங்கிரஸ் சார்பில் எடுத்துக்கொண்டுள்ள கடமைகளை சரிவர நிறைவேற்றுவதிலிருந்துதான் பூரண சுயராஜ்யம் பெற இந்தியா முன்னேற்ற மடையவேண்டும்.

சகல மாகாண காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் அவ்விதம் ஓர் தந்தி அனுப்பி யிருக்கிறார்கள்.

## டாக்டர். சையது முகம்மது தந்தி

காங்கிரஸ் காரியதரிசி டாக்டர் சையது முகம்மது சகல மாகாண காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் கீழ்க்கண்டவாறு தந்தி கொடுத்திருக்கிறார்.

காங்கிரஸ் சார்பில் காரியக் கமிட்டிக்கும், இந்திய சர்க்காருக்கும் நடந்த சமரசத்தையனுசரித்து உடனே வேண்டிய முறைகளை எடுத்துக்கொள்ளும்படி உங்கள் மாகாணத்திலுள்ள சகல காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் தெரிவிக்குமாறு நான் கேட்டுக்கொள்ளுகிறேன். சட்டமறுப்பு இயக்கத்தையும், வரி மறுப்பு இயக்கத்தையும் இனி நிறுத்தி விட வேண்டும். அது சம்பந்தமாக சகல சட்ட மறுப்புகளையும் நிறுத்திவிட வேண்டும். சீமை சாமான்கள் பகிஷ்காரத்தை நிறுத்தி, அது சம்பந்தமாக யாதொரு தடையும் இருக்கக் கூடாது. சீமைச் சாராயம் முதலிய போதை கொடுக்கக் கூடிய சகல குடி வகைகளையும், லாகிரி வஸ்துக்களையும் பகிஷ்காரம் செய்வதை அனுமதித்திருக்கிறார்கள். எனவே, அவசியமான இடங்களில் ஷை பகிஷ்காரம் நடக்க வேண்டும். ஆனால், அத்தகைய மறியல் பிறருக்கு தீங்கை விளைவிப்பதாக இருக்கக் கூடாது. அது சம்பந்தமாக பலாத்காரம், பயமுறுத்தல், தடை, பொதுஜனப் போக்குவரத்திற்கு தடை முதலியவைகள் இருக்கக் கூடாது. இன்னும் அது சம்பந்தமாக சட்டத்தை மீறி யாதொரு குற்றமும் செய்யக் கூடாது. சீமை சாமான்களுக்குப் பதிலாக சுதேசி சாமான்களையே எங்கும் உபயோகிக்க வேண்டும். கட்டுப்பாடாக சேர்ந்து எல்லோரும் உப்புச் சட்ட மறுப்பு செய்யக் கூடாது. இன்னும் உப்பளங்களை முற்றுகை செய்யவும் கூடாது. ஆனால் உப்பு சேகரிக்கும், அல்லது உற்பத்தியாகும் இடத்திற்கு அருகில் வசிக்கும் கிராமவாசிகள், தங்கள் வீட்டுச் செலவிற்காகவோ ஷை கிராமங்களில் விற்பதற்காகவோ உப்பு சேகரிப்பதையும் உற்பத்தி செய்வதையும்



அனுமதித் திருக்கிறார்கள். ஆனால், ஷை கிராமங்களுக்கு வெளியில் கொண்டுபோய் அவர்கள் உப்பை விற்கக் கூடாது. பதிவு செய்யாத பத்திரிகைகளை நிறுத்திவிட வேண்டும். பொருளாதார சிரமத்தால் வரிகொடுக்க முடியாமல் கிராமங்களைக் காலி செய்து வெளியேறியவர்கள் மீண்டும் ஷை கிராமங்களுக்கு திரும்பி வந்து நிலவரி கொடுக்க தயாராக இருக்க வேண்டும். வரிவஜா செய்வதை யொட்டியோ அல்லது வசூலிப்பதை நிறுத்தி வைப்பதை யொட்டியோ வேண்டிய முறைகளை சர்க்கார் எடுத்துக் கொள்வார்கள். அரசியல் கைதிகளையெல்லாம் விடுதலை செய்யப்போவதால், கராச்சி காங்கிரஸிற்கு பிரதிநிதிகள் தேர்ந்தெடுப்பதன் சம்பந்தமான முறைகளை பத்திரிகைகளுக்கு அனுப்பி யிருக்கிறோம்.

## மகாத்மா அறிக்கை

மகாத்மா காந்தி தம்மிடம் வந்த இந்திய பத்திரிகை பிரதிநிதிகளிடமும், இதர தேச பத்திரிகை பிரதிநிதிகளிடமும் சுமார் ஒருமணி நேரம் தமது மனப்பான்மையை விளக்கிக் கூறினர். லார்டு இர்வின் தாராள நோக்கத்துடனும், பொறுமையுடனும் மரியாதையாக நடந்துகொண்டதைப் பாராட்டிப் பேசியபின் அவர் குறிப்பிட்டதாவது:—

காங்கிரஸ் கொள்கையாகிய பூர்ண சுய ஆட்சியை பெறும் நோக்கத்துடன் காங்கிரஸ், சர்வ கட்சி மகாநாட்டில் ஒத்துழைக்க ஒப்புக்கொண்டிருக்கிறது. லண்டனில் கூடிய மகாநாடு காங்கிரஸின் லட்சியத்தில் பாதிகூட நிறைவேற்றவில்லை. எதேச்சாதிகாரத்தையும் குடியாட்சியையும் ஒன்று படுத்திய ஐக்கிய ஆட்சி யொன்றை நிர்ணயிப்பதானது எந்த நேரத்திலும் தெரிந்துவிடக் கூடும். சர்வகட்சி மகாநாட்டில் சகல இந்தியர் சார்பாகவும் காங்கிரஸ் வாதாட நிச்சயித்திருக்கிறது. சுதேச மன்னர்கள் காங்கிரசின் வேண்டுகோளுக்கு செவி சாய்த்து. சுதேச சமஸ்தான ஜனங்களுக்கு பிரிட்டிஷ் இந்திய ஜனங்கள் கிளர்ச்சி செய்து வரும் சுதந்தரங் கொடுக்க முற்படுவார்களென நம்புகிறேன். காங்கிரஸின் லட்சியம் நிறைவேறுவதற்கு இந்தியாவிலுள்ள சகல கட்சிகளின் ஒத்துழைப்பும் சுதேச மன்னர்கள், ஆங்கிலேயர் முதலிய சகலருடைய ஒத்துழைப்பும் அத்யாவசியமாகும். ஆகவே காங்கிரசுக்கும் சர்க்காருக்கும் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தை இந்திய ஜனங்கள் ஏற்றுக்கொண்டு காங்கிரசின் கௌரவத்தைப் பாதுகாத்து, காங்கிரஸ் தன் லட்சியத்தைப் பெற உதவியாயிருந்து வற்புறுத்தி வரும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

## புரட்சிக்காரருக்கு வேண்டுகோள்

இச்சந்தர்ப்பத்தில் காங்கிரசும் நானும் புரட்சிக்காரர்களைக் கேட்டுக் கொள்ளுவது யாதெனில், அவர்கள் தங்கள் புரட்சி இயக்கத்தை சொற்பக் காலம் நிறுத்திவைத்து பலாத்காரமற்ற முறையால் காங்கிரஸ் தன் லட்சியத்தில் வெற்றியடைய ஒரு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்பதே.

## ராஜீயக் கைதிகள் விடுதலை

இனிமேல் ராஜீயக் கைதிகள் யாவரையும் விடுதலை செய்து விடுவார்கள். ஆக்குத் தண்டனை யடைந்த ராஜீயக் கைதிகளையும் விடுதலை செய்யலாம். ஆனால் இதில் வெறும் நம்பிக்கை வைத்து ஏமாறுதிருக்கும்படி எச்சரிக்கிறேன்.

## உலக சமாதானம்

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் அனுதாபம் கொண்டு கவனித்து வந்த இதர நாடுகளுக்கும் விசேஷமாக அமெரிக்கருக்கும் நன்றி பாராட்டுகிறேன். இனிமேல் செய்யவிருக்கும் வேலைதான் அதிகக் கஷ்டமானது. அதில் வெற்றி பெறுவோமேயானால் உலக சமாதானத்துக்கு அது பெரும் துணையாயிருக்குமென்று நம்புகிறேன்.

## லார்டு இர்வின் முயற்சி

சர்க்கார்விஷயத்தில் எனக்கிருந்த சந்தேகத்தை லார்டு இர்வின் நிவிர்த்தித்து எனக்கு நல்லசௌகரியஞ் செய்து கொடுத்தார். காங்கிரஸ் சர்க்கார் ஒப்பந்தமானது தேசத்துக்கு ஏற்படக்கூடிய பல கஷ்டங்களை நீக்கியிருக்கிறது.

## வெற்றி யாருக்கு ?

இந்த ஒப்பந்தத்தில் வெற்றி ஏற்பட்டிருக்குமேயானால், அந்த வெற்றி இரு கட்சியாருக்குமேயாகும். இதில் காங்கிரஸ்காரர் அதிகம் பெருமையடையவும் வேண்டாம் அல்லது இதனால் ஏமாற்றம் கொள்ளவும் வேண்டாம். தியாகத்துக்கும் கஷ்டத்துக்கும் ஒரு அளவு இருக்க வேண்டும். அந்த அளவுக்கு வந்ததும் நிறுத்துவதே நலம். அளவு மீறி நடத்திக்கொண்டு போவது அறிவீனமும், அறியாமையுமாம். நமக்கு நேர்ந்த கஷ்டங்களைப் பற்றி வற்புறுத்திக் கொண்டிருப்பதில் பயனில்லை. ஆனால் பூர்ண சுயராஜ்யத்துக்காக வேலை செய்ய வேண்டியதே நமது கடமையாகும்.

## சர்வ கட்சி மகாநாடு

காங்கிரஸ்—சர்க்கார் டில்லி ஒப்பந்தத்தில் இரண்டாவதாகக் கூடப்போகும் சர்வ கட்சி மகாநாட்டின் சம்பந்தமாக குறிப்பிட்டிருக்கும் வார்த்தைகளை வேணுமென்றே இரு அர்த்தங் கொடுக்கக் கூடியதாய் அமைத்திருக்கிறது. ஐக்ய ஆட்சி வருந்தரக் கானல்போல் விளங்கலாம் அல்லது இரு அங்கங்களாகிய சுதேச சமஸ்தானங்களும், பிரிட்டிஷ் இந்தியாவும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக வேலை செய்து தேசத்தை நன்கு பலப்படுத்தலாம். பொறுப்பாட்சி வெறும் நிழலாக விருக்கலாம். அல்லது ஓங்கி வளர்ந்து வளைத்தாலும் வளையாத நல்ல ஓர் மரமாக விளங்கலாம். இந்திய பாதுகாப்பு இந்தியர் காலையும் கையையும் கட்டியதுபோ லிருக்கலாம். அல்லது வெகு பந்தோபஸ்தாக, கவனத்துடன் வளர்த்துவரும் ஒரு செடியைப் பாதுகாக்கக் கட்டியிருக்கும் பல வேலிகளாக விருக்கலாம்.

### காங்கிரஸ் நோக்கம்

இரு கட்சியாரும் தங்கள் கொள்கைப்படி காரியஞ் செய்துகொண்டு போகவழி பிறந்திருக்கிறது. இந்தியா ராஜீய விஷயமாயும் சமுதாயம், பொருளாதாரம் முதலிய இந்தியாவின் அபிவிருத்திக்கான வழியில் ஐக்கியமும் பொறுப்பாட்சியும், தற்காப்பும் கொண்ட ஒரு ராஜீயத் திட்டத்தைப்பெற வேண்டுமென்பது காங்கிரஸ் கட்சியின் நோக்கமாகும். இந்நோக்கத்தை சர்வகட்சி மகாநாட்டில் ஏற்றுக் கொள்ளச் செய்து காங்கிரஸ்காரர் வெற்றி பெறுவார்களே யானல் அதுவே பூர்ண சுயராஜ்யத்துக்கு அவர்கள் செய்து வந்த முயற்சியின் பலனாகும். இப்போது கிடைத்திருக்கும் புதிய சந்தர்ப்பத்தை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டு அதில் சரியான திட்டமொன்றை அமைக்கலாம். இன்றேல் தன்னம்பிக்கை இழந்தும் போதிய தைரியமில்லாமலும் இச்சந்தர்ப்பத்தைக் கைவிட்டு விலகிப் போகலாம். ஆனல் காங்கிரஸ்காரருக்கு இதர கட்சியாரின் ஒத்துழைப்பும் உதவியும் அத்யாவசிய மென்பதை நான் அறிவேன். சுதேச மன்னர்கள், ஆங்கிலேயர் முதலியோர் ஒத்துழைப்பும் தாராள சிந்தனையும் அவசியமாகும். இது காங்கிரஸ் ஒத்துழைக்க முற்பட்டிருக்கும் காலமாகும்.

## பார்லிமெண்டில் டில்லி ஒப்பந்தம் வைசிராய்க்கு பாராட்டு

### ஸ்ரீ. பெண் அறிக்கை

இந்திய நிலைமையைப் பற்றி அறிக்கையொன்று வெளியிடும்படி ஸ்ரீ. பால்டுவின் கேட்டுக் கொண்டதற் கிணங்கி, பார்லிமெண்டில் ஸ்ரீ. பெண் இந்திய சர்க்கார் வெளியிட்ட அறிக்கையை வாசித்தார். அந்த அறிக்கையை வாசித்தபிறகு அவர் கூறியதாவது:—

"டில்லி ஒப்பந்த விஷயத்தில் வைசிராய் செய்த சேவைகளைப் பிரிட்டிஷ் சர்க்கார் மிகவும் பாராட்டுவதாக அறிவிக்க வேண்டுவது எனது கடமை. (கரகோஷம்) லண்டன் மகாநாட்டில் பிரிட்டிஷ் பார்லிமெண்டு கட்சியினர் அனைவரோடும் கலந்தாலோசனை செய்ய இந்திய மன்னர்களும் பிரிட்டிஷ் இந்திய பிரதிநிதிகளும் பிரிட்டிஷ் சர்க்கார் அழைப்பை ஏற்றுக் கொண்டதாலும், தேசிய காங்கிரஸ் ஒத்துழைப்பால் அம்மகாநாடு மேலும் பலமடைந்ததாலும் இரு தேசங்களுக்கும் நன்மை ஏற்படத்தக்க ஒத்துழைப்பும் நல்லெண்ணமும்நிறைந்த புதிய சகாப்தம் துவங்கியதென்று கூறுவது மிகையாகாது. (நீண்ட கரகோஷம்)

## லார்டு வில்லிங்டன்

### புதிய வைசிராய் விருந்துப் பேச்சு

லண்டன் யாத்திரீகர்கள், இந்தியாவிற்கு வைசிராயாக நியமனம் பெற்றிருக்கும் லார்டு வில்லிங்டனுக்கு பிரிவுபசார விருந்தென்று நடத்தினர்கள். அந்த விருந்தில் லார்டு வில்லிங்டன் பேசியதாவது:—

சென்ற யுத்தம் நடந்த நான்கு வருஷங்களிலும் இந்திய சுதேச மன்னர்களும், ஜனங்களும் காட்டிய ஒப்பற்ற ராஜ விச்வாஸம் என் மனதை விட்டு இன்னும் சிறிதும் நீங்கவில்லை. எனவே நான் அதே நினைவோடு அதிக நம்பிக்கையோடும், உறுதியோடும் இந்தியாவிற்குத் திரும்பவும் செல்கிறேன். நான் இந்தியாவில் 3 முக்கிய கொள்கைகளை அனுஷ்டிக்க விரும்புகிறேன். முதல் கொள்கை ஒத்துழைப்பாகும். லண்டன் மகாநாட்டில் நீங்கள் எத்தகைய ஒத்துழைப்பு உணர்ச்சி யோடிருந்தீர்களோ, அதே போன்று இந்தியா பொறுப்பாட்சியை யடைந்து மற்ற குடியேற்ற நாடுகளுடன் சம அந்தஸ்தை பெறும்வரையில், எனக்கு ஒத்துழைப்பை அளிக்கும்படி இந்திய சுதேச மன்னர்களையும், ஜனங்களையும் கேட்டுக் கொள்ளுகிறேன். மற்றோர் முக்கிய விஷயத்திலும் அவர்களுடைய ஒத்துழைப்பை விரும்புகிறேன். ஒவ்வொருவரும் தங்கள் தினசரி வாழ்க்கையை ஒழுங்காக நடத்துவதற்கு தக்க பாதுகாப்பும் சுதந்தரமும் உரிமையும் அவசியம். இதற்கு அத்தியாவசியமாக வேண்டியது சட்டத்திற்கு படிந்து நடப்பது எனவே இது விஷயத்திலும் அவர்களுடைய ஒத்துழைப்பை நான் நாடுகிறேன்'.

இந்தியா சம்பந்தமாக லார்டு வில்லிங்டனுக்கு உள்ள அனுபவத்தைப்பற்றி சர். ஜான் சைமன் பேசியபின் மகாத்மா—இர்வின் சமரசத்தைப் பற்றி பேசியதாவது:—தற்போதுள்ள கஷ்டமான நிலைமையை அறிந்தவரும், பரஸ்பரம் நல்லெண்ணத்தையும், அமைதியையும் விரும்புகிறவர்களும் ஷை சமரசத்தை அவசரப்பட்டு கண்டிப்பது சிறிதும் நியாயமாகாது. ஆனல், இரண்டு விஷயங்களை இச்சந்தர்ப்பத்தில் சொல்ல வேண்டியது அவசியமாகும். 5 வருஷங்களாக லார்டு. இர்வின் மிகவும் கஷ்டத்துடனும், பொறுமையுடனும், பற்றுதலுடனும் உழைத்து அவருக்குப் பின் வருகிறவரிடம் அமைதியான நிலைமைக்கு அஸ்திவாரம் போட்டு நிர்வாகத்தை ஒப்புவிக்க அவர் முயற்சி செய்ததை யாவரும் அறிந்துகொள்ள வேண்டும். தற்போது இந்திய அரசியல் விவாதத்தைப் பற்றிய முடிவு எப்படியானலும் சரி, யார் ஷை விவாதத்தில் கலந்து கொண்டாலும் சரி, புதிய வைசிராய் அநுவனும் மிகவும் முக்கியமானதாகும். புதிய வைசிராயான லார்டு வில்லிங்டன், சாமர்த்தியத்துடனும், அநுதாபத்துடனும், தைரியத்துடனும் நடந்து கொண்டால் தான் வரப்போகும் நிலைமையை சமாளிக்க முடியும். யாத்ரீக கிறிஸ்துவர்களுக்கு லார்டு, வில்லிங்டனிடம் தளரா நம்பிக்கையும், நல்லெண்ணமும் இருக்கிறதென்பது நிச்சயம்.

---

அபிவிர்த்தி மந்திரியார் கனம் P. T. ராஜன் அவர்கள் 26-2-81-ல் காலை திருச்செங்கோட்டில் காலஞ் சென்ற ஸ்ரீமான் T. R. கந்தப்ப முதலியார் அவர்களின் உருவப்படத்தை திறந்து வைத்தார்.



# நிருபங்கள்

## நயினர் கோவில் செங்குந்தர் பொது மடம்

### மித்திரன் ஆசிரியர் அவர்களுக்கு விண்ணப்பம்

இராமநாதபுரம் ஜில்லா நயினர் கோவிலிலும் அதைச் சூழ்ந்த கிராமங்களிலுமுள்ள செங்குந்தர்கள் பொதுச் செலவில் பண்டைக்காலந் தொட்டு வைகாசி ஏழாம் திருநாளன்று ஸ்ரீ சௌந்தரநாயகி சமேத ஸ்ரீ நாகநாதஸ்வாமி வகையராக்களை ஷை மடத்தில் எழுந்தருளச்செய்து நம்மவர்கள் செலவில் சகல ஆடம்பரத்துடன் அபிஷேகாதிகள் நடத்திச் சகல பிரசாதங்களும் பெற்று மண்டகப்படி கைங்கரியம் செய்வது வழக்கமாகையால், அம்மடத்தை நாம் எவ்வளவு சுத்தமாக வைத்திருக்க வேண்டும். ஆனல் தற்போது அம்மடம் இருக்கிற ஆபாச நிலைமையைப் பற்றி இதில் எழுதி முடியாது.

அதாவது, சாதாரண மனிதர்களைக் குடி வைத்திருந்தாலும் ஓர் சமயம் நமக்குப் பிடிக்காவிட்டால் அவர்களைக் காலி செய்யச் சொல்லவோ, கண்டிக்கவோ கூடும். அப்படிக்கில்லாமல் கவர்ன்மெண்டு அவுட் போஸ்டு போலீஸ் ஸ்டேஷன் இருக்கவும், போலீஸ் உத்தியோகஸ்தர்கள் குடி யிருக்கவும் விட்டிருப்பதால், பார்க்க சகிக்க முடியாததும், ஆக்ஷேபிக்கக் கூடியதுமான ஆபாசங்கள் ஏற்பட்டுக்கொண்டே வருகின்றன. மடத்துச் சொந்தக்காரர்களாகிய நம்மவர்கள் குடியிருப்பவர்களை மண்டபத்தைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென்று திட்டம் செய்யவேண்டியதற்குப் பதிலாகத் தற்போதுள்ள போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்குப் பயந்து நடக்கவேண்டி யிருக்கிறது. இது என்ன அறியாமை.

ஸ்வாமி எழுந்தருளும் மைய மண்டபத்தில் போலீஸ் கச்சேரி பண்ணிக்கொண்டும், அடுத்துள்ள தார்சு ஓட்டுத் தாழ்வாரத்தில் ஹெட்உத்தியோகஸ்தார் குடியிருந்து கொண்டும் வருகிறார்கள். கச்சேரி நடக்கிற மைய மண்டபத்தில் வரத் தகாதவர்களும் வந்துபோய்க்கொண்டிருப்பதன்றி, இன்னும் பல இடஞ்சல்களும் ஏற்படுகின்றன. போலீசார் குடியிருக்குமிடத்தில் சுத்தமில்லாமல் மல ஜலங் கழிப்பதும் ஆடுமாடுகளைக் கட்டுவதுமான பல ஆபாசங்கள் நடந்து வருகின்றன. இது விஷயமாக முன்னமே இரண்டொரு தடவைகளில் தங்களுக்கு எழுதி யிருக்கிறது, நமது மித்திரனிலும் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. என்றாலும் இதுவரை இக்குறைபாடானது என்னவுந் தீர்ந்தபாடில்லை.

நயினர் கோயிலிலுள்ள சில முக்கியஸ்தர்கள் ரங்கோன் வகையரா இடங்களுக்குப் போயிருந்த சமயத்தில் ஆஜராயிருந்த இவ்வூர் திரு' அ சு. நாகலிங்க முதலியார் என்பவர் மடத்துக் காரியங்களைப் பார்த்து வந்தார். அச்சமயத்தில் ஷை முதலியார் மற்ற கிராமத்தார்களது அநுமதியின்றிப் போலீஸ் ஸ்டேஷன் இருக்க இடங் கொடுத்து அன்னவரிடம் வாடகை மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஐந்து வீதம் வாங்கிக்கொண்டு வருகிறார்.

பெரிய ராஜகாரியங்களை யெல்லாம் சீர்திருத்தம் செய்து நம்மவர்களை நல்ல நிலைமைக்குக் கொண்டு வர முயலும் தங்களுக்கு இச்சிறு காரியத்தைச் சீர்திருத்துவது சுலபமாகையால் எங்கள்மீது கிருபை வைத்து ஷை மடத்தை விட்டு போலீஸ் ஸ்டேஷன் வெளி யேறும்படியாகவும், ஷை நாகலிங்க முதலியாரிடமுள்ள பத்துப் பதினைந்து வருஷத்திய வரவு செலவு கணக்குகளை வாங்கிப் பொது ஜனங்களிடத்தில் ஒப்பிக்கும்படியாகவும், தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமெனத் தலைச் சங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறோம். இம்மடத்திற்குரிய ரூபாய் 500-நம்மினத்தவரிடம் இருந்தும் அதைப்பற்றி யாதொரு தகவலும் கிடையாது.

மு. பழனியாண்டி முதலியார்
நா. வெள்ளச்சாமி முதலியார்
மு. கி. மகாலிங்க முதலியார்
வீ. க. வீரபத்திர முதலியார்
N. V. மாசிலாமணி முதலியார்
P. சிவசுப்பிரமணிய முதலியார்
A. கிருஷ்ணன் முதலியார்

குறிப்பு:—இம்மடத்தைப் பற்றிய புகார் அடிக்கடி நமக்கு வந்துகொண்டே இருக்கிறது. அடுத்த மே மாதத்தில் நடக்க இருக்கும் நமது இரண்டாவது மகாநாட்டு விஷயமாக நமது முழுகவனத்தையும் தற்போது செலுத்தவேண்டி யிருப்பதால், மகாநாடு பூர்த்தியான பிறகு இம்மடத்து விவகாரத்தை நமது சங்கப் பிரதிநிதியின் மூலம் பூராவும் விசாரித்துணர்ந்து தக்க ஏற்பாடு செய்யலாமென உத்தேசித்திருக்கிறோம். சில கிராமத்தாரைமாத்திரம் பொறுத்த இதைத்தங்களுக்குள்ளாகவே முடிவு செய்துகொள்வது நலமெனத் தோற்றுகிறது.

---

(82-வது பக்கத் தொடர்ச்சி)

ஆட்டையாம்பட்டி வேலநத்தம் கிராமத்தில் கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ கணேல மூர்த்திக்கும் வள்ளிதெய்வயானை சமேத ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமிகளுக்கும் நிகழும் பிரமோதூத மாசி௴ 19௳ (2-3-31) திங்கட்கிழமை பூர்வபக்ஷ திரியோதசியும் பூசநக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் உதயாதி 5-மணிக்குமேல் $6\frac{1}{2}$-மணிக்குள் கும்பலக்கினத்தில் கும்பாபிஷேகமும் அன்று பகல் ஸ்ரீசுப்ரமண்ய சுவாமிகளுக்குத் திருக்கல்யாணமும் மறுநாள் செவ்வாய்க் கிழமை காலையில் 9-மணிக்குமேல் அன்னதானமும் அன்று மாலை 4-மணிக்குமேல் சுவாமி ஊர்வலமும் இரவு [illegible]ம் நடத்தப் பெற்றன.

## மலையாளத்துச் செங்குந்தர்கள்

மலையாளத்தில் குடியேறியுள்ள செங்குந்தர்களில் பெரும்பாலோர் ஏழைகளான படியால், சாதிக் கொடுமை மிகுந்த மலையாள தேசத்தில் இவர்கள் பிற இனத்தவரால் எவ்வாறு மதிக்கப்படுகிறார்கள் என்பதைப் பற்றிய சில விவரங்களையும், சீரடையக்கூடிய சில முறைகளையும் கீழ்க் குறிக்கின்றேன்:—

1. முதலாவது ஆண்பெண் ஆகிய இரு பாலர்க்கும் படிப்பென்பதே இல்லாமையால், ஓரோர் இடங்களிலும் தங்கள் காரியங்களைச் சொல்லி தங்களுக்குள்ளாகவே தீர்த்துக்கொள்ள முடியாதவர்களாய் அன்னிய இனத்தவரை நாடி அடைய வேண்டியிருக்கிறது. அப்படிப் போகும் சமயத்தில் இவர்கள் எல்லாம் படிப்பில்லாத பாமரர்கள் என்று கருதி இவர்கள் விஷயங்களைச் சிறிதும் காதில் போட்டுக்கொள்ளாமல் விட்டு வருகிறார்கள். ஆதலால், மலையாளச் செங்குந்த கனவான்களை யான் வற்புறுத்தித் தாழ்மையுடன் கேட்டுக் கொள்வது யாதெனில், இனிமேலாவது நம் குல முன்னேற்றத்தையும் சமூக மதிப்பையும் அடைய விரும்பினால், ஆண் குழந்தைகளையும் பெண் குழந்தைகளையும் தவறாமல் நன்றாய் எழுதப் படிக்கத் தெரிந்துகொள்ளும்வரையிலாவது பள்ளிக்கனுப்ப வேண்டுமென்பதேயாம்.

2. நமது பெண்களும், ஆண்களும் தேவையான அளவுக்குக் குறைந்த ஆடைகளை அணிந்து கொள்வது கூடாது. மற்ற இனத்தவர்கள் உடுக்கும் முண்டுகளைப்போல் விர்த்தியான முண்டுகளும் சேலைகளும் உடுத்தல் அவசியமாகும். விர்த்தியில்லாத ஆடைகள் உடுப்பதினால் நாமும் கீழ்ச்சாதியினரோவெனப் பிற இனத்தவர் கருத இடந்தருகிறது. அதற்கும் புறமே அழுக்குள்ள ஆடைகளை அணிதல் கூடாது. அதனால் தொத்து ரோகங்கள் முதலியன உண்டாகின்றன. ஆகையால் சுத்தமானதும் போதிய அளவுள்ளவையுமான ஆடைகளையே ஆண் பெண் இருபாலரும் அணியவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

3. மலையாளத்திலுள்ள நம்மவரில் பெரும்பாலோர் வீடு வாசல் முதலியவற்றையும், வீட்டிற்குள் உபயோகப்படுத்தும் பாத்திரங்களையும் சுத்தியாக வைத்து வருவதில்லை. அதற்குப் புறமே, நமது தொழில் நெசவான படியால், தாங்கள் ஜோலி செய்யும் இடம், நூல் வைக்கும் பாத்திரம் முதலியவையும் சுத்தமாயிருப்பதில்லை. இன்னும் இவை போன்ற பல ஆசாரங்களால் நாம் தாழ்வினை அடைகின்றோம். ஆகையால் மேற் கூறியவற்றையும் பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டுமென வேண்டிக்கொள்ளுகிறேன்.

A. மந்திரி முதலியார்,
காரியதரிசி.
செங்குந்தர் அபிவிருத்தி சங்கம் பாலப்புரம்.

---


# மகா நாட்டு மலர்

நமது முதல் மகாநாட்டின் நிகழ்ச்சிகள், வைபவங்கள்,
தலைவர்களின் பேருரைகள், தீர்மானங்கள் நிறைந்துள்ளன.
தலைவர்களின் ஆப்டோன் படங்கள்
40-க்கு மேல் பொலிந்து விளங்குகின்றன.
வழவழப்பான காகிதம்.
கண் கவர் அழகு.
செங்குந்தர் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டியது அவசியம்.
விலை அணா 8
தபாற் செலவு அணா 3
மானேஜர், செங்குந்தமித்திரன் ஆபீஸ்,
17 பவழக்காரந் தெரு, சென்னை.




# செங்குந்தர் கிளர்ச்சி

## வட ஆற்காடு ஜில்லா
### அரக்கோணம் தாலூகா
குருவராஜா பேட்டை, ஷண்முகாநந்த
பொதுஜன சங்கம்.

8-3-31 ௳ மாலை 7 மணிக்கு மேல் இச்சங்கத்தின் பொதுக் கூட்டம் மடாலயத்தில் கூட்டப்பட்டது. அச்சமயம் அனேக பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர். ஷை கூட்டத்திற்கு திரு. அ. ஜெ. அண்ணாமலை முதலியார் தலைமை வகித்தார். பிறகு பஜனை கோஷ்டிகள் வந்தபின் பௌர்ணமி பூஜை நடந்தது. பின்னர் திரு. ச. மு. வரதப்ப முதலியார் அவர்களால் கடவுள் வணக்கம் முடிந்தபின் திரு. குட்டி. நடேச முதலியார் சென்ற கூட்டத்தின் அறிக்கைப் பத்திரம் வாசித்தார்.

நமது சங்கத்தைக் கூட்ட முயன்ற திரு. K. கன்னியப்ப முதலியார் தற்காலம் கொஞ்சம் தேக அசௌக்கியம் அடைந்திருப்பவர் கூடிய சீக்கிரம் குண மடைந்து நமது சங்கத்திற்கு மேன் மேலும் உழைக்க முன் வர வேண்டு மென்று இச்சங்கம் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றது.

நமது சங்கத்தைக்கூட்ட முயன்ற திரு. P. M. நாகரத்தின முதலியார் அவர்களுக்குச் சென்ற அமாவாசை கழித்து நடந்த சம்பவங்களை நினைக்க இச்சங்கம் மிகவும் மனக்கவலை யடைகிறது. அவருக்கு நிகழ்ந்த மனக் கவலையையும் மறந்து சங்கத்தை மேன் மேலும் முயற்சிக்குக் கொண்டு வர வேண்டும் என்கிற எண்ணத்தால் அவர் இந்நிலையிலும் இந்தக் கூட்டத்திற்கு வந்ததே ஓர் பெரும் பாக்கியமாகும். அவருக்கு நாம் என்றென்னும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். பிறகு தலைவரால் வந்தனோபசாரம் கூறப்பட்டு தாம்பூலம் முதலிய மரியாதைகள் வழங்கப்பட்டு கூட்டம் இரவு 10 மணிக்கு இனிது கலைந்தது.

M. Nagarathinam, Secretary.

---

## சேலம் ஜில்லா
அம்மாபேட்டை செங்குந்த மகாஜன சங்கம்

பிப்ரவரி 7௳

பண்டித மோதிலால் நேருஜி காலஞ் சென்றதைப் பற்றி இன்று அம்மாபேட்டை வியாபாரிகளும் ஜவுளிக்கடை வர்த்தகர்களும் தொழிலாளர்களும் வருத்தங் காட்டினர். இரவு 7-மணிக்கு செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாகச் சங்கத் தலைவர் ஸ்ரீ S. P. பொன்னுசாமி முதலியார் தலைமையின்கீழ் ஸ்பெஷல் மீட்டிங் கூடிற்று. அது சமயம் ஸ்ரீ S. பழனியாண்டி முதலியார் கொண்டு வந்த தீர்மானமாவது: இந்தியாவிற்கே திலகமாய் விளங்கிய மாபெருந் தலைவரும், தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் தமது குடும்பத்தையும் தேசத்திற்கே அர்ப்பணம் செய்த பெரியாருமான பண்டித மோதிலால் நேருஜி நோய்வாய்ப்பட்டு மீளாமல் மரண மடைந்ததற்காக நமது ஆழ்ந்த துக்கத்தைப் பண்டிதஜவர்லாலுக்கும் அன்னாரது குடும்பத்தாருக்கும் சங்கத்தின் சார்பாக தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்று பிரேரேபனை செய்து ஸ்ரீ பொ. சு. ஷண்முக முதலியார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு, ஸ்ரீமான் K. மாரிமுத்து முதலியார் அவர்களால் ஆதரிக்கப்பட்டுத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்று. இத்துடன் சபைக் கூட்டம் கலைந்தது.

இப்படிக்கு,
பொ. சு. ஷண்முக முதலியார்,
வைஸ்பிரசிடெண்ட்.

---

## மதுரை ஜில்லா
செங்குந்த இளைஞர் சங்கம்

இச்சங்கத்தின் பொதுக் கூட்டம் ஒன்று 8-2-31 ௳ காலை 7-மணிக்கு சங்க நிலயத்தில் கூடியது. திருவாளர் P. V. முத்துக்கருப்ப முதலியார் அவர்கள் தலைமை வகித்தனர்.

திருவாளர் S. மாணிக்கம் அவர்கள் கீழ்வரும் தீர்மானத்தைப் பிரேரேபித்தார். அதைத் திரு. எம். லோகநாத னவர்கள் ஆமோதித்தனர்.

நமது சங்க இலவச வாசகசாலையின் மாஜி நிர்வாகியும் நிர்வாக கமிட்டி அங்கத்தினரும் நமது சமூக சேவையிலே தமது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணம் செய்த தொண்டர் திரு. எம். அங்குசாமி அவர்கள் திடீரெனத் தம் இளம் வயதில் காலஞ் சென்றது குறித்து இச்சங்கம் தனது துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

தலைவர் இதை யொட்டிச் சில குறிப்புகள் எடுத்துக் காட்டினார். யாவரும் எழுந்து நிற்கத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

சே. வீ. கனகசபாபதி,
காரியதரிசி.

## கோயமுத்தூர் ஜில்லா

### சன்மார்க்க செங்குந்த வாலிபர் சங்கம்

பள்ளி பாளையம்

இரண்டாவது ஆண்டு நிறைவு விழா

இச்சங்கத்தின் 2-வது ஆண்டு நிறைவு விழா கோவைநகர் முனிசிபல் கவுன்சிலரும் பிரபல பருத்தி வியாபாரியும் தென்னிந்திய செங்குந்த மகாஜன முதலாவது மகாநாட்டு வரவேற்பு சபைத் தலைவருமாகிய கோவை உயர் திருவாளர் வி. எஸ். செங்கோட்டைய்யா தலைமையில் 7-3-31-ல் ஷை யூர் ஸ்ரீ ஓங்காளியம்மன் சன்னதி முன் அமைத்திருக்கும் பந்தலின் கீழ் நடைபெற்றது. காலை 7-30 மணிக்குத் தலைவர் ஊர்வலம் நிகழ்ந்ததும், சபா மண்டபத்தில் தலைவர் அவர்களுக்கு ஓர் வரவேற்பும், கோவை ஜில்லா செங்குந்த மகா ஜன வாலிபர் சங்கத்திற்கு ஓர் வரவேற்பும் வாசித்துக் கொடுக்கப்பட்டது. கூட்டத்திற்குச் சென்னிமலை, சித்தோடு, பாவனி, ஈரோடு, கோவை இன்னும் பல இடங்களிலிருந்தும் பிரமுகர்கள் விஜயஞ் செய்திருந்தது குறிப்பிடத் தக்கது. சுமார் 500 பிரதிநிதிகளுக்கு மேல் குழுமியிருந்தனர். தலைவர் முன்னுரைக்குப் பின் 'பண்டைப் புகழ்' என்னும் விஷயமாக ஈரோடு திரு. வ. மு. மொட்டயப்ப முதலியார் அவர்களும், நமது நிலைமையும் நோக்கங்களும் என்பதைப் பள்ளியப்பாளையம் திரு. ப. நஞ்சப்ப முதலியார் அவர்களும், 'வாலிபர் கடமை' என்னும் விஷயமாக ஈரோடு திரு. நா. மு. ஷண்முகசுந்தர முதலியார் அவர்களும், குல முன்னேற்றம் என்னும் விஷயமாகக் கோவை திரு. E. V. சிங்காரவேலு முதலியார் B.A. அவர்களும், மதுவிலக்கு விஷயமாகப் பள்ளிப்பாளையம் திரு. K. வெங்கடாசல முதலியார் அவர்களும், 'அறத்தின்மாண்பு' என்னும் விஷயமாகப் பவானி திரு. ஐ. க. பெருமாள்சாமிமுதலியார் அவர்களும், நமது கடமை என்னும் விஷயமாக ஈரோடு திரு. செ. ராமசாமி முதலியார் அவர்களும், கைத்தொழில் என்னும் விஷயமாகச் சித்தோடு திரு. சுப்பராயமுதலியார் அவர்களும், 'நிலையாமை' என்னும் விஷயமாகத் தளவாய் பேட்டை திரு. பெ. ப. லக்ஷ்மண முதலியார் அவர்களும் அரும் பெரும் கருத்துக்களுடன் நீண்ட சொற்பொழிவாற்றினார்கள். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டன.

(1) உலக நன்மையையே நாடி இராஜ போகத்தையும் துறந்து குடும்ப சகிதம் சிறை புகுந்து இந்திய மாகாண முடி சூடா மன்னர் பண்டித மோதிலால்ஜீயும், லண்டன் மகா நாட்டிற்குத் தேகசுகத்தையும் நாடாது சென்று நம் சுதந்திரத்திற்குப் போராடிய கிலாபத் சிங்கம் மௌலானா முகம்மதலியும் உயிர் துறந்தமைக்கு இச்சங்கம் மிகவும் துக்கிப்பதோடு, அவர்கள் ஆத்மா ஆத்மசாந்தியடையுமாறு எல்லாம்வல்ல இறைவனை வழுத்துகிறது.

(2) மிக நெருக்கடியான காலத்தில் லார்டு இர்வினும் மகாத்மா காந்திஜீயும் சமரச வெற்றியடைந்தமைக்கு இச்சங்கம் மிகவும் மகிழ்ச்சியடைகிறது.

(3) நம்மவர்களைச் சிக்கனச் செலவு சீர்திருத்தம, ஒற்றுமை மணம் முதலியவைகளைக் கடைப்பிடித்து ஒழுகுமாறு இச்சங்கம் மிகவும் வேண்டிக் கொள்ளுகிறது.

(4) மது, புலால், சூது, ஆலயங்களில் உயிர்ப் பலி யிடுதல் முதலியவைகளைக் கடிந்து நீக்குமாறு இச்சங்கம் மிகவும் கண்டிக்கிறது.

(5) பொதுவாக ஏழை மக்கள் முன்னேற்றத்திற்காக நமது ஊரில் கூட்டுறவு ஸ்தாபனமொன்றை ஏற்படுத்துமாறு நம் மரபினர்களையும் வேறு சமூகத்தவரையும் மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறது.

(6) இச் சங்கத்திற்கு நம் வாலிபர்கள் மெம்பராகச் சேர்ந்து குலத்தொண்டாற்றுமாறும், நம் குலப் பிரமுகர்களை நம் சங்கக்கட்டட நிதி ஒன்று ஏற்படுத்தி உதவுமாறும் கேட்டுக்கொள்ளுகிறது.

இத்தீர்மானத்திற் கேற்பத் தலைவர் உயர் திரு V. S. செங்கோட்டையா அவர்கள் ரூ. 100 0 0
ஈரோடு. நா. மு. ஷண்முகசுந்தர முதலியார் ரூ. 25 0 0
ஷை யூர். வ. மு. மொட்டயப்ப முதலியார் ரூ. 10 0 0
ஷை யூர். செ. ராமசாமி முதலியார் ரூ. 5 0 0
உத்தண்டியூர் R. ரங்கசாமி முதலியார் ரூ. 10 0 0
பள்ளிப்பாளையம் சு. சென்னியப்ப முதலியார் ரூ. 25 0 0
ஷை யூர். K. வெங்கடாசல முதலியார் ரூ. 25 0 0
ஷை யூர். கொ. நா. கந்தசாமி முதலியார் ரூ. 25 0 0

மேற்கண்ட நன்கொடைகள் வழங்கினர். பின்னர் தலைவர் தனது முடிவுரையில் நம்மவர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைமையைப்பற்றி நீண்ட சொற்பொழிவாற்றினார். பின்னர் போஜனத்திற்காகச் சபை கலையப்பட்டு, மாலை தலைவர் அவர்களையும் பிரமுகர்களையும் புகைப்படம் எடுத்து இரவு 7-மணிக்கு ஹரிதாசி என்னும் மாஜிக் விளக்கப்படக்காட்சி கோவை திரு. E. V. சிங்காரவேலு முதலியார் அவர்களால் காண்பிக்கப்பட்டு இரவு 9-30 மணிக்கு வந்தனோபசாரம் கூறப்பட்டுச் சந்தன தாம்பூலம் வழங்கலுடன் ஆண்டு நிறைவு விழா இனிது முடிந்தது.

இப்படிக்கு,
பாலு முதலியார், பிரசிடென்ட்

158976

## 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

பிரமோதூத௵ பங்குனி௴ (1931௵ மார்ச்சு௴-ஏப்ரல்௴) உத்தராயணம், ஹேமந்தரிது

| இங்கிலீஷ் | தமிழ் | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | நேத்திரம் | ஜீவன் | சிரார்த்த திதி | யோகினி | விசேஷ நாட்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மார்ச்சு 14 | பங்குனி 1 | சனி | ஏகா 52-15 | உத் 39-10 | சி 60 | | 1/2 | குன் | மேற்கு | |
| 15 | 2 | ஞா | துவா 58-3 | திரு 64-10 | அ 46-10 ம | 1 | 1/2 | துவா | வடமே | |
| 16 | 3 | திங் | திர 60... | அவி 53-35 | சி 60 | 0 | 1/2 | திர | வடகிழ | |
| 17 | 4 | செ | திர 4-25 | ச 60... | ம 60 | 0 | 0 | சது | வடகிழ | |
| 18 | 5 | புத | ச ● 11-3 | ச 1-23 | சி 1-23 அ | 0 | 1/2 | அமா | ஆகாச | சர்வத்திர அமாவாசை |
| | | | | | | 0 | | | | |
| 19 | 6 | வியா | அமா 17-38 | பூர 9-0 | சி 60 | 0 | 0 | பிர | பூமி | |
| 20 | 7 | வெ | பிர 23-55 | உத் 16-38 | சி 16-38 அ | 0 | 0 | ... | கிழக்கு | யுகாதி பண்டிகை |
| 21 | 8 | சனி | துதி 29-43 | ரேவ 23-45 | ம 23-45 சி | 0 | 0 | துதி | வடக்கு | |
| 22 | 9 | ஞா | திரி 34-35 | அ 30-3 | சி 60 | 0 | 1/2 | திரி | தெகிழ | |
| 23 | 10 | திங் | சது 38-33 | பர 35-23 | சி 35-23 ம | 0 | 1/2 | சது | தெமே | |
| 24 | 11 | செ | பஞ் 41-10 | கி ✲ 39-30 | சி 39-30 அ | 1 | 1/2 | பஞ் | தெற்கு | கிருத்திகை |
| 25 | 12 | புத | சஷ் 42-15 | ரோ 42-10 | சி 60 | 1 | 1/2 | சஷ் | மேற்கு | |
| 26 | 13 | வியா | சப் 41-35 | மிரு 43-13 | ம 60 | 1 | 1/2 | சப் | வடமே | |
| 27 | 14 | வெ | அஷ் 39-25 | திரு 42-35 | சி 60 | 1 | 1/2 | அஷ் | வடகிழ | |
| 28 | 15 | சனி | நவ 35-20 | புன 40-15 | சி 60 | 2 | 1/2 | நவ | ஆகாச | ஸ்ரீராமநவமி |
| 29 | 16 | ஞா | தச 29-50 | பூச 36-28 | சி 60 | 2 | 0 | தச | பூமி | |
| | | | | | | | | ஏகா | | |
| 30 | 17 | திங் | ஏகா 23-0 | ஆ 31-23 | சி 31-23ம | 2 | 1 | துவா | கிழக்கு | |
| 31 | 18 | செ | துவா 15-8 | ம 25-13 | சி 60 | 2 | 1 | திர | வடக்கு | |
| ஏப்ரல் 1 | 19 | புத | திர 6-35 | பூர 18-23 | அ 60 | 2 | 1 | | | |
| | | | சது 57-35 | | | | | சது | தெகிழ | |
| 2 | 20 | வியா | ○ 48-43 | உத் 11-25 | ம 11-25 சி | 2 | 1 | பௌ | தெற்கு | பௌர்ணமி |
| 3 | 21 | வெ | பிர 40-15 | அஸ் 4-30 | அ 4-30 சி | 2 | 1 | பிர | மேற்கு | |
| | | | | சித் 58-10 | | | | | | |
| 4 | 22 | சனி | துதி 32-48 | சுவா 52-53 | அ 52-53 சி | 2 | 1 | துதி | வடமே | |
| 5 | 23 | ஞா | திரி 26-20 | விசா 48-58 | ம 60 | 2 | 1 | திரி | வடகிழ | |
| 6 | 24 | திங் | சது 21-28 | அனு 46-38 | சி 60 | 2 | 1 | சது | ஆகாசம் | |
| 7 | 25 | செ | பஞ் 18-25 | கே 46-13 | ம 46-13 அ | 2 | 0 | பஞ் | பூமி | |
| 8 | 26 | புத | சஷ் 17-20 | மூ 47-45 | ம 47-45 அ | 2 | 1/2 | சஷ் | கிழக்கு | |
| 9 | 27 | வியா | சப் 18-15 | பூர 51-13 | சி 60 | 1 | 1/2 | சப் | வடக்கு | |
| 10 | 28 | வெ | அஷ் 21-3 | உத் 56-20 | சி 56-20ம | 1 | 1/2 | அஷ் | தெகிழ | |
| 11 | 29 | சனி | நவ 25-8 | திரு 60... | சி 60 | 1 | 1/2 | நவ | தெமே | |
| 12 | 30 | ஞா | தச 31-3 | திரு 2-53 | அ 2-53ம | 1 | 1/2 | தச | தெற்கு | |
| 13 | 13 | திங் | ஏகா 37-18 | அவி 10-18 | சி 60 | 1 | 1/2 | ஏகா | மேற்கு | |
| 14 | ✲1 | செ | துவா 43-55 | ச 18-3 | மர 60 | 1 | 1/2 | துவா | வடமே | வருஷப் பிறப்பு |